20 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 20 | பாலம் 10 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MAY 15, 2010

## பிரித்தானியாவில் புதிய பிரதமர்

பழமைவாத கட்சியின் தலைவரான David Cameron பிரித்தானியாவின் புதிய பிரதமராக மே 11, 2010 ஆம் நாள் பதவியேற்றார். அன்றையதினம் காலை தனது பிரதமர் பதவியை துறந்த தொழிற்கட்சியை சேர்ந்த Gordon Brown தொழிற் கட்சியின் 13 வருடகால ஆட்சியை முடிவிற்கு கொண்டு வந்தார்.



மே 06, 2010 இல் நடைபெற்ற தேர்தலில் எந்த ஒரு கட்சியாதல் அறுதிப்பெரும் பான்மையை பெறவில்லை. இதைத் தொடர்ந்து அதிகூடிய ஆசனங்களை பெற்ற பழமைவாதக் கட்சி (Conservative Party) மூன்றாவது இடத்தைப் பெற்ற சுதந்திர ஜனநாயககட்சியுடன் (Liberal Democrat Party) பேச்சுவார்த்தைகளை நடத்தி அடுத்த ஐந்து வருடங்களுக்கு ஒரு கூட்டு (Coalition) அரசாங்கத்தை அமைக்க உடன்படிக்கை செய்தது. பிரித்தானியாவின் கடந்த 70 வருட ஆட்சியில் இதுவே முதலாவது கூட்டு அரசாங்கம் பதவியேற்கிற நிகழ்வாகும்.

சுதந்திர ஜனநாயககட்சியின் தலைவர் Nick Clegg பிரதி பிரதம மந்திரியாக பதவியேற்க வுள்ளார். பிரித்தானியா நாடாளுமன்றத்தில் 650 ஆசனங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றைத் தவிர மிகுதி 649 இற்கு மே 06, 2010ஆம் நாள் தேர்தல் நடைபெற்றது. ஒரு கட்சி அறுதிப்பெரும் பான்மையை பெற குறைந்தது 326 ஆசனங்களைப் பெற வேண்டும். தேர்தல் முடிவுகள் பின்வருமாறு.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

# நாடு கடந்த தமிழீழ அரசு

நாடு கடந்த தமிழீழ அரசு தனது முதலாவது நாடாளுமன்ற கூட்டத்தை அமெரிக்காவில் Philadelphia இலுள்ள சுதந்திர சதுக்கத்தில் மே 17, 2010 இல் இருந்து மே 19, 2010 வரை நடத்த உள்ளது. அமெரிக்காவின் முதலாவது Continental Congress கூட்டமும் இதே கட்டடத்தில் தான் 1774 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நாடு கடந்த தமிழீழ அரசவையின் முதலாவது அமர்வில் நாடு கடந்த அரசாங்கத்தின் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்ட அனைவரும் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான ஏற்பாடுகளை பேராசிரியர் நடராஜா சிறீஸ்கந்தராசா அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள அங்குரார்பண குழு மேற்கொண்டு வருகிறது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முதலாவது அரசவையானது தனது முதலாவது அமர்வினை அரசியல் நிர்ணய சபையாக மாற்றியமைத்து, மதியுரைக் குழுவின் அறிக்கை பரிந்துரைசெய்த, பின்வருவனவற்றைச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(1) நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கான அரசியலமைப்பு உருவாக்குவதற்கான அரசியலமைப்பு குழுவினை அமைத்தல்.

(2) அரசியலமைப்பினை உருவாக்கி முடியும் வரையிலான காலப்பகுதியில் செயற்பாடு களை முன்னெடுப்பதற்காக ஒரு இடைக்கால நிறைவேற்றுக் குழுவை அமைத்தல்.

(3) தமிழ் தாயகத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய அவசர குறுங்கால திட்டங்களினை முன்னெடுப்பதற்கு பொருத்தமான அமைச்சு கட்டமைப்புக் களையோ சட்டவாக்க குழுக்களையோ உருவாக்குதல்.

(4) இடம்பெயர்ந்த மற்றும் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் தொடர்பான விடயங்களை கையாளுவதற்கான ஒரு செயற்பாட்டவை அமைத்தல்.

நாடு கடந்த தமிழீழ அரசிற்கான தேர்தல் 115 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ள 16 நாடுகளில் 10 நாடுகளில் மே 02, 2010 நாள் நடைபெற்றது. அவற்றின் முடிவுகள் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

கனடாவில் போட்டியிட்ட 41 வேட்பாளர்களதும் அதிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 25 உறுப்பினர்களதும் விபரம் இந்த அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ், மற்றும் பிரித்தானியாவில் எல்லா முடிவுகளும் இதுவரை அறிவிக்கப்படவில்லை. சில தொகுதிகளில் வாக்கு பதிவுகள் திரும்ப நடைபெறக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன. ஜேர்மனியில் பெரும்பாலான இடங்களுக்கு வாக்குப்பதிவு ஏற்கனவே அறிவித்தபடி மே 16, 2010 இல்தான் நடை-பெற உள்ளது. அவுஸ்ரேலியாவில் 5 உறுப்பினர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். மிகுதி உறுப்பினர் களுக்கான தேர்தல் மே 22, 2010 ஆம் நாள் நடைபெறவுள்ளது.

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் ஜனநாயக கட்டமைப்பாக உலக நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நாடு கடந்த தமிழீழ அரசிற்கான தேர்தல் தொடர்பாக வெளிநாடுகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதுவர்களிடம் சிறலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மே 11, 2010 நாள் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் நாடு கடந்த தமிழீழ அரசு என்ற பெயரில் வெளிநாடுகளில் பயங்கரவாதிகள் மேற்கொள்ளும் நடவடிக்கையானது அவர்களது இலங்கைக்கு எதிரான சர்வதேச சக்திகளின் மீளுருவாக்கமாகவே கருத வேண்டியுள்ளது என்றார்.

அட்டவணையை பக்கம் 2இல் பார்க்கவும்.

RBC Royal Bank
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee
• No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

GSF Golden Store Fixtures
Friend for your Business
www.goldenstorefixtures.com sales@goldenstorefixtures.com Toll Free: 1 877-565-6554
நீங்கள் புதிதாக ஆரம்பிக்கும் வியாபார நிலையத்தை எங்கள் கைவண்ணத்தால் அழகுற வடிவமைத்து பொருத்துவதற்கும், உங்கள் வியாபார நிலையத்துக்குத் தேவையான பொருட்களை பெற்றுக் கொள்வதற்கும் நீங்கள் நாடவேண்டிய தமிழரின் ஒரே ஒரு ஸ்தாபனம் Golden Store Fixtures Ltd.
» Counter Top Displays » Gift Bags & Ribbons » Glass Displays » Grid Panels & Accessories » Mannequins » Pegboard & Accessories » Racks » Shopping Cart & Baskets » Showcases » Sign & Sign Holders » Slatwall & Accessories » Steel Shelving » Wood Displays » And Much More.........
355 ADMIRAL BLVD. UNIT 5
MISSISSAUGA, ON, L5T 2N1
TEL: (905) 565 6555
FAX: (905) 565 8655

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை
• 52 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 19 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# பிரித்தானியாவில் புதிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| Concervative Party | 306 | (36%வாக்குகளை பெற்றது) |
| Labour Party | 258 | (29%வாக்குகளை பெற்றது) |
| Liberal Democrat Party | 57 | (23%வாக்குகளை பெற்றது) |
| Other Eight Small Parties | 28 | (12%வாக்குகளை பெற்றது) |

தொழிற்கட்சி தேர்தலுக்கு முன்னர் வைத்திருந்த ஆசனங்களில் 91 ஐ இத்தேர்தல் மூலம் இழந்துள்ளது. சுதந்திர ஜனநாயகக்கட்சியும் இத்தேர்தல் மூலம் 5 ஆசனங்களை இழந்துள்ளது. ஆனால் பழமைவாதக்கட்சி தேர்தலுக்கு முன்னர் வைத்திருந்த ஆசனங்களைவிட 97 ஐ இத்தேர்தல் மூலம் கூடுதலாகப் பெற்றது.

43 வயது David Cameron பிரதமராக பதவியேற்றதும் கனேடிய பிரதமர் Stephen Harper, அமெரிக்க அதிபர் Barack Obama மற்றும் ஜேர்மனியின் அதிபர் Angela Merkel ஆகியோர் தமது வாழ்த்துக்களை தெரிவித்தனர். லண்டனில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோது உள்ளூர் ஆட்சி மன்றத் தேர்தல்களும் நடைபெற்றன. இவ் உள்ளூர் ஆட்சி மன்றத்தேர்தலில் தமிழர்களும் வெற்றி பெற்றுள்ளனர். அவர்களில் கணபதிப்பிள்ளை நகீரதன் (Brent), செல்வா மைக் (Crydon), மனோகரன் தர்மராஜா (Harrow) சசிகலா சுரேஷ் (Harrow), நசீம் அலாவி இஸ்மெயில் (Harrow), தயாபரன் இடைக்காடர் (Harrow), கிருஸ்ணா சுரேஸ் (Harrow), கைருள் கரீமா மரிக்கார் (Harrow), யோகநாதன் யோகன் (Havering), போல் துரைசாமி (Newham), ஜெயரஞ்சன் தவத்துரை (Redbridge), எலிசா பாக்கியதேவி ( Southwark)

இவர்களில் யோகநாதன், எலிசா இருவரும் சுதந்திர ஜனநாயகக் கட்சியில் போட்டியிட்டனர். ஏனையோர் தொழில் கட்சியில் போட்டியிட்டனர்.

மே 05, 2010

அண்மையில் நாடு கடந்த அரசிற்கான தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது. இதில் யார் வெற்றி பெற்றது, எவ்வாறு வெற்றி பெற்றுள்ளது என்பது எவ்விதமான கேள்விக்குறியாக இருந்தபோதிலும், முடிவு ஒன்று வந்தது. அதனை சகலரும் ஏற்று நடப்பது நல்லது. தேர்தலில் நடைபெற்ற விரும்பத்தகாத விடயங்கள் எதிர்காலங்களில் நடப்பதனை தவிர்ப்பதற்கு, அதற்கு பொறுப்பானவர்கள் கவனிக்க வேண்டும். அத்துடன் எவர் வெற்றி பெற்று இருந்தாலும் ஒரே நோக்கத்திற்காக சகலரும் சேர்ந்து இயங்குவதன் மூலம் நோக்கத்தை அடைய இலகுவானதாக இருக்கும். இந்த தேர்தலில் சில தொகுதிகளின் முடிவுகளை இரத்து செய்வதற்கு சிலர் தொடர் எடுக்கும் நடவடிக்கைளை தவிர்ப்பது நல்லது.

இந்த தேர்தல் நடந்த நாளன்று (மே 02, 2010) நானும் எனது மகனும் தமிழ் கடை ஒன்றிற்கு பொருட்கள் வாங்க சென்றிருந்தோம். அங்கு கண்ட எமது தமிழ்மகன் ஒருவர் என்னிடம் வந்து, 'யாரிற்கு உங்கள் வாக்கைக் போட்டீர்கள்' என்று கேட்டார். எனக்கு பக்கத்தில் நின்ற, இங்கு சிறுவயதில் இருந்து படித்து கொண்டு இருக்கும் எனது மகன், இப்படியானவர்களால் தான் தமிழ் மக்கள் பல இன்னல்களை அடைகிறார்கள். தேர்தல் என்பது, இரகசிய வாக்கெடுப்பு. பலர் நிற்கும் ஒரு இடத்தில் இவ்வாறான கேள்விகளை எவ்வாறு கேட்கமுடியும்.

தமிழ் மக்கள் அரசியல் முதிர்ச்சி பெறவேண்டும்.

அன்புடன்
இராசையா ராசேந்திரன்
மார்க்கம்.



## வாசகர்களின் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram, 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: vlambaram.com

விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

# நாடு கடந்த...

## TRANSNATIONAL GOVERMENT OF TAMIL EELAM

## 1. Canadian Election Results on May 02, 2010 - 31,072 votes polled

### (Referendum Results on Dec 2009 - 48,583 votes polled)

**District No 1. (Toronto GTA and Vicinities) - 7006 votes polled**

| | | |
|---|---|---|
| 1. Joe ANTONY | 3388 | Elected |
| 2. Pon BALARAJAN | 3777 | Elected |
| 3. M.K. EALAVENTHAN | 4161 | Elected |
| 4. Piraba NALLIAH | 3175 | |
| 5. Tharani PRAPAHARAN | 4967 | Elected |
| 6. Deva SABAPATHY | 2754 | |
| 7. Sri Bavan SRI-SKANDA-RAJAH | 2691 | |
| 8. Thru S. THIRUCHELVAM | 4936 | Elected |
| 9. Nimal VINAYAGAMOORTHY | 2197 | |

**District No 2. (Eastern Ontario) - 12026 votes polled**

| | | |
|---|---|---|
| 1. Jeyabalan ALAGARATNAM | 3594 | |
| 2. Henry KIRUPAIRAJAH | 2420 | |
| 3. Esan KULASEKARAM | 7810 | Elected |
| 4. Vin MAHALINGAM | 3845 | |
| 5. R. Rajkumar NADA | 3692 | |
| 6. Vanitha RAJENDRAM | 8451 | Elected |
| 7. Suresh RATNABALAN | 6109 | Elected |
| 8. Srisangar (Shean) SINNARAJAH | 2541 | |
| 9. Selvanayaki SRIDAS | 4632 | |
| 10. Waran VAITHILINGAM | 6523 | Elected |
| 11. Mariampillai Anjalo YOGENDRAN | 6378 | Elected |

**District No 3. (Western Ontario) - 6621 votes polled**

| | | |
|---|---|---|
| 1. Charles DEVASAGAYAM | 2382 | |
| 2. Suren MAHENDRAN | 5002 | Elected |
| 3. S.M Thanapalan MARKANDU | 2501 | |
| 4. Balan RATNARAJAH | 4844 | Elected |
| 5. Sam SANGARASIVAM | 4997 | Elected |
| 6. Iyampillai (Shan) SHANMUGANATHAN | 5049 | Elected |
| 7. Ram SIVALINGAM | 4993 | Elected |

**District No 4. (Quebec & Eastern Canada) - 5419 votes polled**

| | | |
|---|---|---|
| 1. Kanthiah THEIVENTHIRAN | 2690 | Elected |
| 2. Maharajah (Nanthan) NANTHAKUMAR | 2818 | Elected |
| 3. Muthuckumaru SIVANANTHAN | 18864 | |
| 4. Niruthan NAGALINGAM | 2794 | Elected |
| 5. Majendran (Indran) RAVEENDRAN | 2586 | |
| 6. Luxan SIVAPRAGASAPILLAI | 3221 | Elected |
| 7. Roy Yarl Vaanan WIGNARAJAH | 1793 | |

**District No 5. (Western Canada) - Elected uncontested**

| | | |
|---|---|---|
| 1. Markandu MOKANASINGHAM | uncontested | Elected |
| 2. Sumughan SOTHINATHAN | uncontested | Elected |
| 3. Katpana NAGENDRA | uncontested | Elected |
| 4. Ratna MUTHUKUMARASAMY | uncontested | Elected |
| 5. Jeyamathy SIVASOTHY | uncontested | Elected |

**Cornwall, Ottawa**

| | | |
|---|---|---|
| 1. Bhuvan-Endra NADARAJAH | 2557 | Elected |
| 2. Manoharan MAJOORAN | 2435 | |

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

ஜெனிஷா ரெயிலஸ் & டிசைன்ஸ்
Jenisha Tailors & Designs
Saree Blouses, Salwar Kameez, Party-Frocks,
Saree pleetting, Bridal Dressing, Facial, Threading
போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய அழையுங்கள்
குறித்த நேரத்தில்
குறைந்த செலவில் நிறைந்த சேவை



416.298.6917 / 416.802.1039/ 519.748.0553
1560 Brimley Road, #216, Brimley & Ellesmere / 920 Marlmeadow Crt., Kitchener, ON

# இடம்பெயர்ந்த மக்களுக்கு புனர்வாழ்வு, புனர் நிர்மாண, நல்லிணக்க வாழ்வா அல்லது....?

## - இலங்கையில் இருந்து மங்களநாதன் அரவிந்தன்

இலங்கையின் 30 வருடகால ஆயுத போராட்டத்திற்கு முடிவுகட்டப்பட்டு (விட்டதாகச் சொல்லப்படுகின்றது) ஆண்டு ஒன்று ஓடிவிட்டது.

விடுதலைப்புலிகளின் பயங்கரவாதப் பிடிக்குள் சிக்கியிருந்த தமிழ் மக்களை மனிதாபிமான யுத்த நடவடிக்கையின் மூலம் மீட்டுள்ளதாகக் கூறிய அரசாங்கம் உலகில் எந்த நாட்டிலுமே நடவாத வகையில் மிகவும் விரைவாக இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றம் செய்துவிட்டதாகப் பறைசாற்றி வருகின்றது.

போரினால் இடம்பெயர்ந்த கிட்டத்தட்ட மூன்று லட்சம் பேரில் சுமார் 2 லட்சத்து 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு விட்டார்கள் என்பது அரசாங்கத்தின் அறிவிப்பு. இடம் பெயர்ந்தவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த வவுனியா செட்டிகுளம் மணிக்பாம் முகாமில் இன்னும் 35 ஆயிரம் பேர் மட்டுமே இருப்பதாக வடமாகாண ஆளுனர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார். ஆனாலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்து பொதுமக்கள் யுத்த நிலைமைகள் காரணமாக இடம் பெயர்ந்ததையடுத்து வெறிச்சோடிய பல பிரதேசங்கள் இன்னும் மக்கள் நடமாட்டமின்றி வெற்றிடமாகக் காணப்படுவதாகவே ஐநா அமைப்புக்கள் கூறுகின்றன.

போர்ப்பிரதேசங்களில் இன்னும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் தொடர்ந்து கொண்டிருப்பதாக கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை இராணுவ அணி, மெக் (MAG), எவ்.எஸ்.டி (FSD), ஹலோ ட்ரஸ்ட் (HALO TRUST), சர்வாத்ரா (SARVATRA), ஹொரிஸோன் (horizon) போன்ற கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் கூறி வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கிழக்குப் பிரதேசங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தின் கிழக்குப் பகுதிகளும் இன்னும் சரியான முறையில் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை என்பதை அரசாங்கமே ஒப்புக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் இடம்பெயர்ந்தவர்களில் 2 லட்சத்து 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் எங்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பது, எப்படி என்பது தெரியவில்லை. யுத்தம் முடிந்து ஒரு வருடமாகிவிட்டது. ஆனால், இறுதிநேர யுத்த மோதல்கள் இடம்பெற்ற பிரதேசங்களுக்குள் சர்வதேச செஞ்சிலுவைக்குழுவோ அல்லது மனிதாபிமான பணிகளுக்கு உதவி வருகின்ற ஐநா சபையின் முக்கிய நிறுவனங்களோ இன்னும் அனுமதிக்கப்படவில்லை.



> “யுத்தம் முடிவுக்கு வந்து ஒரு வருடமாகின்ற நிலையில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்ற மனிதாபிமானத்திற்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. இந்த ஆணைக்குழு நியமனம் என்பது ஒரு கண்துடைப்பே என்று மனித உரிமை ஆர்வலர்களும், நிறுவனங்களும் அரசாங்கத்தையும், ஜனாதிபதியையும் சாடியிருக்கின்றன.”

இறுதி யுத்தம் நடைபெற்ற இடங்களில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்ற மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானத்திற்கு விரோதமான நடவடிக்கைகள் என்பவற்றைக் கண்காணிக்கும் வகையில் யுத்தம் முடிந்தகையோடு, அனைத்துலக மனிதாபிமான நிறுவனங்கள் அந்த இடங்களுக்குச் சென்று பார்வையிட வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தன. ஆயினும் அந்த வேண்டுதல்களுக்கு இன்று வரையிலும் அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. இறுதி யுத்தத்தின்போது வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்ற விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் பா.நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகிய இருவரையும் இராணுவத்தினர் சுட்டுக்கொன்றதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் இறுதி நாட்களில் விடுதலைப்புலிகளைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் அங்கிருந்த பொதுமக்களை வகைதொகையின்றி தாக்கிக் கொன்றதாகவும், இதனால் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அநியாயமாக உயிரிழக்க நேரிட்டதாகவும் கூறப்பட்டிருக்கின்றது. இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்துரைத்த அரசாங்கத்தின்மீது, போர்க் குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற உலகளாவிய குரலுக்கும் இலங்கை அரசாங்கம் இன்று வரையிலும் மசிந்து கொடுத்ததாகத் தெரியவில்லை.

இறுதி யுத்தத்தின் போது இராணுவம் மற்றும் விடுதலைப்புலிகள் ஆகிய இருதரப்பினருமே போர்க்குற்றங்களைப் புரிந்திருக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டை அனைத்துலக மனிதாபிமான அமைப்புக்களும், மனித உரிமை அமைப்புக்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

யுத்தம் முடிவுக்கு வந்து ஒரு வருடமாகின்ற நிலையில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்ற மனிதாபிமானத்திற்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. இந்த ஆணைக்குழு நியமனம் என்பது ஒரு கண்துடைப்பே என்று மனித உரிமை ஆர்வலர்களும், நிறுவனங்களும் அரசாங்கத்தையும், ஜனாதிபதியையும் சாடியிருக்கின்றன.

மறுபக்கத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களின் துயரங்களைப் போக்கி எதிர்கால வாழ்க்கையில் நம்பிக்கை ஒளியை ஏற்படுத்துவதற்கான நல்லிணக்கச் செயற்பாட்டை உருவாக்க வேண்டிய பணியில் அரசாங்கம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. போரினால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் வேறு, அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதமேந்தி இராணுவ போராட்டத்தை நடத்திய விடுதலைப்புலிகளின் நிலைமை வேறு. இதனைத் தெளிவாக அரசாங்கம் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் அந்தப் புரிதலை அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் இன்னும் காணமுடியவில்லை. யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட உடனேயே, உள்ளூராட்சி சபைகளுக்கான (வவுனியா நகரசபை மற்றும் யாழ்ப்பாணம் மாநகரசபை) தேர்தலை நடத்தியுடன், ஜனாதிபதி தேர்தலையும், அதனைத் தொடர்ந்து பொதுத் தேர்தலையும் உரிய காலத்திற்கு முன்பாகவே அரசாங்கம் நடத்தி முடித்திருக்கின்றது.

தொடர்ச்சி 09ம் பக்கம்

STATE FARM INSURANCE
DISCOUNTS UP TO 30% ON CAR INSURANCE
Li Chen, Agent
http://www.licheninsurance.ca
Bus: 416-431-6800
Mano Selvam
Auto Insurance Representative
Bus:416-431-6800
தமிழில் உரையாடுவோம்
1200 Markham Road, Suite# 123, Scarborough, ON M1H 3C3
Intersection: Markham Road & Ellesmere Road
State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™


APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL



# குரு சரியான கலவையை உங்களுக்குத் தருகிறார்

> "வாழ்கிற குரு உங்களுக்கு ஏற்ற கலவையைத் தருகிறார். இல்லையென்றால் ஏற்பட வேண்டிய தாக்கம் உங்களுக்கு ஏற்படாது."

இப்போதைய நிலையில் அனுபவம் இல்லாமலேயே உங்கள் உடல், உங்கள் மனம், உணர்வுகளை சார்ந்தவைதான் என்பது ஓரளவு உங்களுக்குத் தெரியும். இந்த மூன்றும் உரிய முறையில் செயல்படுகின்றன என்றால், அதன் பின்னே அவற்றை நிகழ்த்திக் கொண்டிருக்கிற சக்திநிலை ஒன்று இருக்கும் என்று உங்களுக்குத் தெரியும். சக்தியில்லாமல் எதுவும் நிகழாது. சிலர் அதை உணர்ந்திருக்கலாம். மற்றவர்கள் இந்த மூன்று அம்சங்களும் செயல்படுவதை வைத்தே அதன் பின்னணியில் சிலசக்திகள் இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளலாம். உதாரணத்திற்கு ஒரு ஒலிபெருக்கி சத்தத்தைப் பெரிபடுத்துகிறது. ஒலிபெருக்கியைப் பற்றி ஒன்றும் தெரியாவிட்டாலும் கூட அதற்கு ஏதோ சக்தி இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும். எனவே உங்கள் வாழ்க்கையில் நான்கு உண்மைகள்தான் இருக்கிறது. உடல், மனம், உணர்வு, சக்திநிலை. சிலரிடம் மனம் வலிமையாக செயல்படலாம். சிலருக்கு மூளை வலிமையாக செயல்படலாம். சிலருக்கு செயல் வலிமையாயிருக்கலாம். ஆனால் எல்லோருமே இந்த நான்கினுடைய கலவையாகத் தான் இருக்கிறார்கள். அதை சரியான கலவையில் சேர்க்கிறபோது தான், அது சிறப்பாக உங்களுக்கு செயல்படுகிறது. ஒருவருக்கு தருவதை இன்னொருவருக்கு தந்தால் அது செயல்படாமல் கூட போகலாம். ஏனென்றால் அந்த மனிதர் இதயம் சார்ந்து இயங்குபவராகவும், நீங்கள் அறிவு சார்ந்து இயங்குபவராகவும் இருக்கலாம். அதனால் தான் வாழ்கிற ஒரு குருவின் தேவை ஆன்மிகத்தில் அதிகம் வலியுறுத்தப்படுகிறது. அவர் சரியான கலவையை உங்களுக்கு கலந்து தருகிறார். இல்லையென்றால் உரிய தாக்கம் ஏற்படாது. யோக மரபில் ஒரு அருமையான கதை உண்டு. ஒருநாள் ஒரு ஞானயோகி, ஒரு பக்தியோகி, ஒரு கர்மயோகி, ஒரு கிரியாயோகி ஆகியோர் நடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். இந்த நால்வரும் பொதுவாக சேருவதேயில்லை. ஏனென்றால் ஞானயோகி மற்ற யோகமுறைகளைக் குறை சொல்லுவார். ஏனென்றால் அவர் தர்க்க அறிவில் செயல்படுகிற மனிதர். மற்றவர்களை எளிதில் குறை சொல்லுவார். முழுக்க முழுக்க உணர்வு சார்ந்து இயங்குகிற ஒரு பக்தியோகி, மற்ற ஞான, கர்ம, கிரிய மார்க்கங்களையெல்லாம் காலவிரயம் என்று கருதி, கடவுளை நேசித்தாலே போதும் என்று நினைப்பார். கர்மயோகியைக் கேட்டால் மற்றவர்கள் எல்லாம் சோம்பேறிகள். எனவே, வெட்டி வேதாந்தங்களை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். செயல்தான் முக்கியம் என்று சொல்லுவார். கிரியா யோகியோ இவை அனைத்தையும் கண்டு சிரிப்பார். இந்த முழு பிரபஞ்சமே சக்தியின் வெளிப்பாடு. உங்கள் சக்திகளை மடைமாற்றம் செய்ய முடியாவிட்டால் நீங்கள் கடவுளுக்காக எங்கேயோ, எதற்காகவோ ஏங்கி எதுவும் எங்கும் நிகழப்போவதில்லை. எனவே எப்போதும் எங்கும் ஒன்று சேராத இந்த நான்கு பேரும் போய்க்கொண்டிருக்கிறார்கள். மழை வேறு பெய்கிறது. அது ஒரு வனப்பகுதி. அவர்கள் மறைவிடம் தேடி ஓடி ஒரு பழைய கோவிலைப் பார்க்கிறார்கள். சுவர்கள் கூட இல்லை. கூரை மட்டும் இருக்கிறது. நடுவில் ஒரு லிங்கம் இருக்கிறது. இவர்கள் குளிருக்கு அஞ்சி, மழைக்கு அஞ்சி அந்த கோவிலுக்குள்ளே நுழைந்தார்கள். மழை வலுக்க, வலுக்க லிங்கத்தை நெருங்கிக் கொண்டே வந்தார்கள். வேறு வழியில்லை. ஏனென்றால் நான்குபுறமும் மழை விசிறி அடிக்கிறது. ஒரு குறிப்பிட்ட நிலையில் மழையினுடய வீச்சு தாங்காமல் நால்வரும் அந்த லிங்கத்தைக் கட்டி அணைத்துக் கொள்ள, அப்போது ஒரு மகத்தான இருப்பை அங்கே உணர்கிறார்கள். ஒரு பிரம்மாண்டமான இருப்பை, ஐந்தாவது இருப்பை உணர்கிறார்கள். சிவனுடைய வருகை அங்கு நிகழ்வதை உணர்ந்து, 'இத்தனை ஆண்டுகளாக நாங்கள் தேடியும் வராத நீ இப்போ வந்திருக்கிறாயே, ஏன்?' என்று கேட்டபோது, 'நீங்கள் நால்வரும் இப்போதுதான் ஒன்று சேர்ந்திருக்கிறீர்கள். இதற்காகத்தான் நான் நீண்டகாலம் காத்திருந்தேன் என்று சிவன் சொன்னதாக அந்த கதை சொல்கிறது. உடல், மனம், உணர்வு, சக்தி என்கின்ற இந்த நான்கு அம்சங்களிலேயே உங்கள் தற்போதைய அனுபவங்கள் ஊன்றியிருக்கிறபோது அதைத் தாண்டி நீங்கள் செல்ல முடியாது. நீங்கள் இப்போது எங்கு இருக்கிறீர்களோ, அங்கிருந்தான் பயணம் தொடங்கமுடியும்.



**சத்குரு வாசுதேவ்**


## Inner Engineering Program

Date: ***August 11th to 17th***

Location: ***Toronto Botanical Garden,***
777 Lawrence Avenue East ,
(Lawrence & Leslie intersection), Toronto, ON M3C 1P2 - Canada

Free Introductory talk on August 11th at 6:30pm to 7:30pm
ALL ARE WELCOME

Session Info: ***Morning Session : 9:30 am to 12:30 pm*** OR
***Evening Session: 6:30 pm to 9:30 pm***

Website: www.ishafoundation.org / www.ishayoga.org

Email: toronto@ishafoundation.org Phone: 1-866-424 - ISHA (4742)



**என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்**



**Interest Rate going up soon best time to buy Real Estate**

**3 bedroom Condo. Markham / Eglinton Low Maintenance**

**INVESTMENT**
*Why Scarborough? Brampton, Milton, Mississaouga Near Airport $320,000*

Gas Stations 4 million litres / year in Peterborough, Oshawa, Hamilton with 6/49, good income

*2 Bedroom Condo Near 401, Mississauga $125,000 Low Mainteance good start*

***Bungalow***
*MEADOWALE /ELLESMERE U of T area big lot 3 bedroom*

***Big Lot***
*Bungalow House 3 Bedroom bsmt Apartment*

*Live Like Millionaive Estate Home with Natural 1 - 5 Acres Low tax. Build your dream home + pond*

***$50,000 Net profit in 5year term. Plus Rental income pay mortgage***

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு

அழையுங்கள் - Sitham Sam Shanmugam (Sales Rep.)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

**150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.**



**YARL WINDOW BLINDS & DRAPERY**
Since 1991
Tel.: 416-806-5397
905-201-7733
*We have experience to make your home more beautiful ...*
VENETIAN/VERTICAL ROLLER/WOOD/FORMWOOD BLINDS WOOD & VINYL SHUTTERS
We are specialized in Custom Made Drapery & Blinds



Call for Free Estimates



Call : N.SELVAM

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

கடந்த இதழ் தொடர்ச்சி

## முதலுதவி

ஒருவருக்கு பாம்பு கடித்தவுடன் உடனடியாக வாழைமரத்தை வெட்டி நன்றாக பிளிந்து சாற்றை எடுத்து உரியவருக்கு குடிக்க கொடுக்கலாம். இது ஒரு சிறந்த விஷ முறிவு ஆகும். அப்படிச் செய்யுமுன் செய்ய வேண்டிய முதலுதவி பாம்பு கடித்த இடத்தில் வாயால் விஷத்தை உறுஞ்சி எடுத்து வெளியில் துப்ப வேண்டும். பாம்பு கடித்தவருக்கு பல் கிட்டியிருந்தால் வாழை



மடலில் கிடத்தி வாயை இலகுவாக நீக்கி வாழை மட்டைச்சாறு கொடுத்தால் விஷம் முறிந்து சுகம் பெற முடியும்.

மேலும் பாம்பு கடிக்குச் செய்யும் முதலுதவிகளை பார்ப்போம்.

ஒருவருக்கு பாம்பு கடித்தவுடன் சரியான முறையில் முதலுதவி செய்யப்பட்டால் கொடிய விஷமுடைய பாம்பு கடித்தாலும் மரணம் வராது. தடுத்து நிறுத்த முடியும். எந்தப் பாம்பு கடித்தாலும் உடனே கடிபட்ட இடத்தில் செறிந்துள்ள விஷத்தை விைரவாக வெளியெற்ற முடியுமோ அவ்வளவுக்கு விரைவாக வெளியேற்ற வேண்டும். கடி வாயில் இருந்து உடலில் மற்ற இடங்களுக்கு விஷம் பரவாது தடுக்கப்படல் வேண்டும்.

> “ விஷம் தீண்டப்பட்டவருக்கு கோப்பி, தேனீரோ அல்லது இரத்தோட்டத்தைக் கூட்டக்கூடிய மதுபானங்களையோ கொடுக்கக்கூடாது. ”

### Dr. F. சிற்றம்பலம்

(விஷ வைத்திய சிந்தாமணி)

1. உடனடியாக கடி வாயை நல்ல நீரினால் கழுவுதல் வேண்டும். காரணம் சில சந்தர்ப்பத்தில் பாம்பு விஷம் வெளியே கொட்டப்பட்டிருக்கலாம். காயப்படாதபடியால் விஷம் பரவாமல் இருக்கலாம். கழுவுவதால் கொட்டப்பட்ட விஷம் துப்பரவு செய்யப்பட்டு விடும். அப்படியில்லாமல் முதலுதவிக்காகக் கடிவாயைக் கீறும்போது கீறிய காயத்தின் வழியாக விஷம் இரத்தத்தில் பரவித் துன்பம் விளைவிக்கலாம். ஆகவே முதலுதவி செய்பவர் விவேகமாகவும், திடமாகவும் விரைவாகவும் செயல்பட வேண்டும். கழுவுதற்கு நீர் கிடைக்காவிட்டால் சிறுநீரால் கழுவலாம். சிறுநீர் எப்பொழுதும் கிடைக்கும்.

2. கடிவாய்க்கு மேல் இரண்டு அல்லது மூன்று அங்குலத்திற்கு மேல் இறுக்கமாகக் கட்ட வேண்டும். இதற்குச் சேலையோ, கயிற்றையோ, றபர் துண்டையோ உபயோகிக்கலாம். இதனால் கடிவாயிலுள்ள விஷம் இரத்தத்தில் கலவாது தடுக்கப்படலாம். கட்டிய கட்டை முதலில் கட்டிய இடத்தில் இருந்து அவுக்கும் பொழுது கட்டுக்க மேல் கட்டுக்கட்டிய பின் முதல் கட்டிய கட்டை அவிழ்த்து திரும்பவும் கட்டலாம். அப்படி மாறி மாறிக் கட்டாதுவிட்டால், கட்டிய இரத்தம் கட்டி பட்டு வேறு பல வேதனைகளைச் செய்யக்கூடும். சில சந்தர்ப்பத்தில் வேறு உபாதைகளையும் உண்டாக்கலாம்.

3. கடிவாயை சுத்தம் செய்தபின் துருப்பிடியாத கூரான ஆயுதத்தை நெருப்புச்சுவாலையில் காய்ச்சி தொற்றி நீக்கி கடிவாயை கீறி இரத்தத்தைப் பிதுக்கி எடுத்தல் வேண்டும். கீறும்பொழுது கவனமாகக் கீறல் வேண்டும். கீறுவதென்று எண்ணி வெட்டக்கூடாது. அதனால் இரத்தப்பெருக்கு ஏற்பட்டுத் துன்பம் விளையலாம். ஆகவே கவனமாகக் கீறி இரத்தத்தை பிதுக்கி எடுத்தபின் விஷத்தை இழுக்கக்கூடிய விஷக்கல்லை வைத்துக் கட்டலாம். வாயில் புண் இல்லாதவர்கள் கடிவாயில் வாயை வைத்து இரத்தத்தை உறிஞ்சித் துப்பலாம்.

4. விஷம் தீண்டப்பட்டவருக்கு கோப்பி, தேனீரோ அல்லது இரத்தோட்டத்தைக் கூட்டக்கூடிய மதுபானங்களையோ கொடுக்கக்கூடாது.

5. கடிபட்டவரை தன்னம்பிக்கை வரக்கூடியதாக திடமான வார்த்தைகளை உபயோகித்து நம்பிக்கை வரக்கூடியதாக செயல்பட வேண்டும். பயப்பட வைக்கக்கூடாது. சிலர் பாம்பு கடித்துவிட்டது என எனக்கு மரணம் தான் என்று சிந்தித்து, பயந்து பயத்தினால் ஆபத்தை வரச்செய்யாது பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

6. கடிபட்டவரை நடக்கச் செய்யக்கூடாது. தூக்கிச் செல்ல வேண்டும்.

7. நாடித்துடிப்பை அதிகரிக்கச் செய்யும் செயல்களையோ, அவருக்குச் சினம் வரச் செய்யும் செயல்களையோ செய்யக்கூடாது.

8. உடனடியாக வைத்தியசாலைக்கோ அல்லது விஷகடி வைத்தியரிடமோ கொண்டு போய்ச்சேர்க்க வேண்டும்.

9. எல்லா பாம்புகளும் விஷமுள்ளவையுமல்ல. விஷப்பாம்பு (நாகபாம்பு) என்றால் அதன் படத்தைக் கண்டு அது கடிக்காது விட்டாலும் பயத்தால் மயங்கி விழுவதும் உண்டு. ஆகவே விஷத்தால் வந்த மயக்கமா அல்லது பயத்தால் வந்த மயக்கமா என்று அறிய பல வழிகள் உண்டு.

தொடரும்

வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013



**Computer Repair** Services

சகல விதமான கணனி சார்ந்த பழுதுபார்த்தல் மற்றும் Virus Removal உட்பட அனைத்து வேலைகளையும் செய்து கொள்ளலாம். Troubleshooting இலவசம். ஏற்படக்கூடிய செலவு பற்றிய விபரங்ளை முற்கூட்டியே அறிந்து கொள்ள முடியும்.

PC Repair, Upgrade, Anti-Virus & Fire-Wall Installation; Virus, Spyware, Malware Removal.

Data Recovery from infected or corrupted, & mistakenly formatted Computers.

Setup your Router & wireless security. Buy used and new computers. (Scanning, Browsing, Printing, Toner Cartridges & Refill etc..

**PRO-WIN COMPUTER SERVICES**

919 Ellesmere Road, Unit – 302 , Scarborough, ON, M1P 2W7.
*(KENNEDY & ELLESMERE- South East Corner )*
*(Besides Active Green + Ross & In front of Honda )*

**Tel: 647 340 5568/416 879 7489 (தமிழ் -English)**
**( Contact :** *Niruthan Nadarajah* **)**
**Mon-Sat 10 am – 8 pm / Sun 10 am – 6 pm**



*Residential and Commercial*
**Mortgages**
1st Mortgage
2nd Mortgage to 90%
Debt Consolidation
Invoice Financing
Construction Financing
Self Employed Expert
Commercial & Industrial
This Week
VARIABLE 3 YEARS
1.85%
This Week
FIXED 3 YEARS
3.95%
WINNER
416-283-2377 EXT 234
MOHAN CANAGASABAI
Mortgage Agent (lic# M08009713)
CMP Canadian Mortgage Awards 2010
OBSIDIAN
DIRECT 647-273-3766 FAX 416-283-5820
35 GRAND MARSHALL DRIVE, SCARBOROUGH ON M1B 5W9
Some Conditions Apply. Rates may chance without notice. Brokerage Lic # 10473



# தென்னாபிரிக்கா முதலிடம்???

## விளையாட்டுத் தகவல்கள் 282

## இந்தியாவை விட நாங்கள் தான் நம்பர்-1 அணி என்பதை நிரூபித்து விட்டோம் : ஸ்மித்

நாக்பூரில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா தென் ஆப்பிரிக்காவிடம் இன்னிங்ஸ் தோல்வியை சந்தித்தது. டெஸ்ட் போட்டி தர வரிசையில் தற்போது இந்தியா முதலிடத்தில் உள்ளது. அடுத்த டெஸ்ட் போட்டியிலும் இந்தியா தோற்றால் முதல் இடத்தை இழந்து விடும். தென் ஆப்பிரிக்கா முதலிடத்துக்கு வந்து விடும்.

இவ்வெற்றி குறித்து தென் ஆப்பிரிக்கா கேப்டன் ஸ்மித் கூறியதாவது:- முதல் போட்டியில் வெற்றி பெற்றுள்ள நாங்கள் 2 போட்டியிலும் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றுவோம். இந்த வெற்றியின் மூலம் எங்கள் திறமையை மீண்டும் வெளிப்படுத்தி உள்ளோம். இந்தியா தற்போது நம்பர்-1 இடத்தில் உள்ளது. அந்த இடத்தை மீண்டும் பிடிக்கும் பயணத்தை தொடங்கி உள்ளோம். இந்தியாவை விட நாங்கள் தான் நம்பர்-1 அணி என்பதையும் இதன் மூலம் நிரூபித்து உள்ளோம்.

சமீப காலமாகவே நாங்கள் டெஸ்ட் போட்டியில் சிறப்பான வெற்றிகளை பெற்று வருகிறோம். முன்னணி அணிகள் அனைத்தையுமே தோல்வி அடைய செய்துள்ளோம். எங்கள் சொந்த மண்ணில் மட்டும் அல்ல வெளி நாடுகளிலும் வெற்றி பெற்று வருகிறோம். 2008ல் இந்தியா வந்த போது வெற்றி பெற்றோம். இங்கிலாந்திலும், ஆஸ்திரேலியாவிலும் கூட வெற்றியடைந்து உள்ளோம்.

அடுத்த போட்டியிலும் வென்று நம்பர்-1 இடத்தை பிடிக்க வேண்டும் என்பதை எங்களுடைய ஒரே குறிக்கோள். நாங்கள் எங்களுக்கே உரிய முறையில் கிரிக்கெட் ஆடி வருகிறோம். எல்லா சூழ்நிலையையும் சாதகமாக்கி கொள்கிறோம். எதையுமே சாதகமாக எடுத்துக்கொண்டு வீரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சிறப்பாக விளையாடுவதால் வெற்றி கிடைக்கிறது என்றார் ஸ்மித்.

## தென் ஆப்பிரிக்காவிடம் இந்தியா இன்னிங்ஸ் தோல்வி

தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான முதல் கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியா ஒரு இன்னிங்ஸ், 6 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்டது. சச்சின் டெண்டுல்கர் அடித்த சதம் வீணானது.

நாகபுரி விதர்பா கிரிக்கெட் சங்க மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. தென் ஆப்பிரிக்கா முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 558 ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்தது. இதையடுத்து முதல் இன்னிங்ஸைத் துவங்கிய இந்தியா 233 ரன்களுக்கு ஆல்-அவுட்டாகி ஃபாலோ-ஆன் பெற்றது. 3-ம் நாள் ஆட்ட நேர இறுதியில் 2-வது இன்னிங்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 66 ரன்கள் என்ற நிலையில் இந்தியா இருந்தது. இந்நிலையில் 4-ம் நாள் ஆட்டம் நடைபெற்றது. முரளி விஜய் 27 ரன்களுடனும், சச்சின் 15 ரன்களுடனும் ஆட்டத்தைத் துவக்கினர். ஆனால் தென் ஆப்பிரிக்க வீரர்களின் சிறப்பான பந்துவீச்சினால் இந்திய வீரர்கள் மளமளவென ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பிய வண்ணம் இருந்தனர். சச்சின் மட்டும் சதமடித்தார். ஆனாலும் அது இந்தியாவின் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க போதுமானதாக அமையவில்லை.

இறுதியில் 319 ரன்களுக்கு இந்தியா ஆட்டமிழந்தது. இதையடுத்து தென் ஆப்பிரிக்கா ஒரு இன்னிங்ஸ், 6 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்டது. முன்னதாக இந்திய அணியின் இன்னிங்ஸின்போது நன்றாக விளையாடிக் கொண்டிருந்த முரளி விஜய் 32 ரன்களுக்கு வீழ்ந்தார். விஜய்-சச்சின் ஜோடி 3-வது விக்கெட்டுக்கு 72 ரன்கள் சேர்த்தது. அதைத் தொடர்ந்து வந்த அறிமுக வீரர் பத்ரிநாத் 6 ரன்களில் பெவிலியன் திரும்பினார். பத்ரிநாத், முதல் இன்னிங்ஸில் அரை சதமடித்தது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்த 5-வது விக்கெட்டுக்கு சச்சின்-கேப்டன் தோனி ஜோடி சேர்ந்தனர். இருவரும் சிறப்பாக விளையாடி அணியின் ஸ்கோரை மெதுவாக உயர்த்தினர். சிறப்பாக விளையாடிய சச்சின் அரை சதம் கடந்தார்.

அரை சதத்துக்குப் பின்னரும் தனது அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்திய சச்சின் 100 ரன்களை எட்டி, டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது 46-வது சதத்தைப் பூர்த்தி செய்தார். ஆனாலும் பால் ஹாரிஸின் பந்தில் ஸ்வீப் ஷொட் அடிக்க முயன்று ஆட்டமிழந்தார். அவரது ஸ்கோரில் 13 பௌண்டரிகள் அடங்கும். பின்னர் தோனி 25 ரன்களுக்கு வீழ்ந்தார். ஆனால் ரித்திமான் சாஹா 36, ஹர்பஜன் சிங் 39, ஜாகீர் கான் 33 ரன்கள் எடுத்து அணி கௌரவமான ஸ்கோரை எட்ட உதவினர். இறுதியில் மிஸ்ரா ஆட்டமிழக்க அணியின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.

இந்த வெற்றியையடுத்து 2 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் தென் ஆப்பிரிக்கா 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. தென் ஆப்பிரிக்காவின் ஸ்டெயின், ஹாரிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளும், பார்னெல் 2 விக்கெட்டுகளும், மோர்க்கெல், காலிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் சாய்த்தனர். சிறப்பாக விளையாடி இரட்டைச் சதமடித்த ஹஷிம் ஆம்லா ஆட்டநாயகனாகத் தேர்வு பெற்றார்.

கோல்கத்தாவில் 2-வது டெஸ்ட்: இந்நிலையில் கோல்கத்தாவில் 2-வது டெஸ்ட் போட்டி துவங்குகிறது. இந்தப் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றே ஆகவேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

மாறாக தோல்வி கண்டாலோ, டிரா செய்தாலோ, ஐசிசி தரவரிசைப் பட்டியலில் இந்தியா 2-ம் இடத்துக்குத் தள்ளப்பட்டு விடும்.

## லிவர்பூல் கால்பந்து அணி: அம்பானி ஆர்வம்?

ஐ.பி.எல்., கிரிக்கெட் அணியை வாங்கிய "ரிலையன்ஸ்" முகேஷ் அம்பானியன் பார்வை, தற்போது கால்பந்து பக்கம் திரும்பியுள்ளது. இவர், சர்வதேச அளவில் மிகப் பிரபலமான லிவர்பூல் கால்பந்து கிளப் அணியின் பங்குகளை வாங்க முயற்சிப்பதாக செய்திகள் வெளியாகின. இதனை முகேஷ் அம்பானி தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தை சேர்ந்த பிரபல கால்பந்து கிளப் லிவர்பூல். பிரிமியர் லீக், எப்.ஏ., கோப்பை, ஈஉய்பா, ஐரோப்பிய கோப்பை உட்பட 18 முறை பட்டம் வென்று சாதித்துள்ளது. ஸ்டீவன் ஜெரார்டு, பெர்னாண்டோ டோரஸ் போன்ற முன்னணி வீரர்கள் இந்த அணியில் இடம் பெற்றுள்ளனர். கடந்த 2008ல் "போர்ப்ஸ்" வர்த்தக பத்திரிகையின் கணிப்பின்படி, மான்செஸ்டர் யுனைடெட், ரியல் மாட்ரிட், ஆர்சனல் ஆகிய கால்பந்து கிளப் அணிகளுக்கு பிறகு நான்காவது விலையுயர்ந்த அணியாக லிவர்பூல் கருதப்பட்டது.

நிதி நெருக்கடி: இப்படி புகழின் உச்சியில் இருந்த லிவர்பூல் அணி, சமீப காலமாக சரிவை சந்தித்தது. இதற்கு அணியின் உரிமையாளர்களான அமெரிக்காவை சேர்ந்த ஜார்ஜ் கில்லட் மற்றும் டாம் ஹிக்ஸ் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு தான் முக்கிய காரணம். ரசிகர்களின் ஆதரவும் குறைந்த போக, சுமார் ஆயிரத்து 700 கோடி ரூபாய் கடனில் சிக்கியது. இதையடுத்து அணியின் 51 சதவீத பங்குகளை விற்க முடிவு செய்யப்பட்டது. இதனை வாங்க, இந்தியாவின் ரிலையன்ஸ் நிறுவன அதிபரும் உலகின் 7வது பணக்காரருமான முகேஷ் அம்பானி மற்றும் சஹாரா நிறுவனத்தின் சுப்ரதோ ராய் ஆகியோர் முயற்சி செய்வதாக லண்டனில் இருந்து வெளியாகும் "டைம்ஸ்" பத்திரிகை செய்தி வெளியிட்டது.

இதையடுத்து ஐ.பி.எல்., மும்பை இந்தியன்ஸ் அணியின் உரிமையாளராக உள்ள முகேஷ் அம்பானி, கால்பந்து அரங்கிலும் கால்பதிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், லிவர்பூல் தொடர்பான செய்தியை ரிலையன்ஸ் நிறுவனம் மறுத்துள்ளது. இதன் செய்தி தொடர்பாளர் சுதீப் புர்கயஸ்தா கூறுகையில், "லிவர்பூர் பங்குகளை வாங்குவது தொடர்பான செய்தி தவறானது. இதனை முழுமையாக மறுக்கிறோம்," என்றார். சஹாரா நிறுவன செய்தி தொடர்பாளர் அபிஜித் சர்கார் கூறுகையில், "தற்போது கருத்து தெரிவிக்கும் நிலைமையில் இல்லை"என்றார்.

## உதைபந்தாட்ட நட்சத்திரம் ரொனால்டீனோ உலக் கிண்ண கால்பந்தாட்ட போட்டிகளில் பங்கேற்ற முடியாத நிலை

உலகின் முக்கிய கால்பந்தாட்ட நட்சத்திரங்களில் ஒருவராகக் கருதப்படும் பிரேஸிலின் ரொனல்டீனோ தென் ஆபிரிக்காவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளில் பங்கு பற்ற முடியாத நிலை ஏற்படக் கூடுமென அறிவிக்கப்படுகிறது. ரொனால் டீனோ உலகக்கிண்ணக் கால் பந்தாட்டத்திற்கான தேசிய குழாமில் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

கடந்த 2009ம் ஆண்டில் ரொனால்டீனோ பிரேஸில் அணிக்காக எந்தவொரு போட்டியிலும் பங்குபற்றவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், ரொனால்டீனோ ரசிகர்கள் மற்றும் ஊடகங்கள் அவரை உலக் கிண்ண குழாமில் இணைத்துக்கொள்ளுமாறு வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 29 வயதான ரொனால்டீனோ ஏ.சீ. மிலான் கழகத்திற்காக விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 2002ம் ஆண்டு உலகக் கிண்ண போட்டிகளின் போது பிரேஸில் அணி உலகக் கிண்ணத்தை வென்றெடுப்பதற்கு ரொனால்டீனோ வழங்கிய பங்களிப்பு மிகவும் முக்கியமானதென்பது குறிப்பிடத்தக்குத

## அபார வெற்றியினால் மீண்டும் முன்னிலை வகிக்கும் அவுஸ்திரேலிய

மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் எதிரான முதல் ஒருநாள் போட்டியில் ஆவுஸ்திரேலிய அணி 113 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. ஆஸ்திரேலியா சென்றுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடரில் பங்கேற்று வருகிறது. முதல் ஒருநாள் போட்டி மெல்பேனில் நடந்தது. மேற்கிந்திய அணி தலைவர் கிறிஸ் கெய்ல் முதலில் பந்து வீச்சினை தெரிவு செய்தார்.

முதலில் துடுப்பாட்டம் செய்த ஆஸ்திரேலிய அணி 50 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 256 ஓட்டங்களை எடுத்தனர். போலார்டு 3 விக்கெட் வீழ்த்தினார். எட்டிவிடும் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணிக்கு வீரர்கள் வரிசையாக ஆட்டமிழப்புச் செய்யப்பட வெஸ்ட் இண்டீஸ் அணி 34.2 ஓவரில் 143 ஓட்டங்களுக்கு வீரர்கள் முழுவதும் ஆட்டமிழக்க தோல்வியடைந்தது.

ஆட்டநாயகனாக ஆஸ்திரேலிய சேன் வொட்சன் தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் 1க்கு 0 என ஆவுஸ்திரேலிய அணி முன்னிலை வகிக்கிறது. இரு அணிகள் இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நாளை அடிலெய்டில் நடக்கிறது.

## பந்தை சேதப்படுத்துவது தவறா?


கிரிக்கெட் அரங்கில் பந்தை சேதப்படுத்துவது தொடர்கிறது. கிரிக்கெட் வீரர்கள் பலர் அடிக்கடி இப்பிரச்னையில் மாட்டிக் கொள்கின்றனர். எதிரணி பேட்ஸ்மேன்களின் விக்கெட்டை கைப்பற்ற, பந்து வீசும் அணியின் வீரர்கள் பந்தை சேதப்படுத்துகின்றனர். தலை முடிக்கு பயன்படுத்தும் ஜெல், ஜெல்லி வகை மிட்டாய்கள் உள்ளிட்டவற்றை, பந்தின் மீது தடவுதல், பிளேட் மற்றும் கூரிய கருவிகளால் பந்தை சுரண்டுதல், பந்தை வாயினால் கடித்தல் போன்ற செயல்கள் சேதப்படுத்துதல் குற்றமாக கருதப்படுகிறது.
பெரும் தவறு: இவ்வாறு பந்தை சேதப்படுத்துதல் குற்றமாகும். சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வகுத்துள்ள கிரிக்கெட் விதிகளின் படி (விதி 42, பிரிவு 3) இதற்கு பல வகை தண்டனைகள் உள்ளன. பந்து சேதப்படுத்தப்பட்ட அளவின்படி, மைதானத்தில் உள்ள அம்பயர்கள் உடனடி தீர்ப்பு வழங்குவர். ஒரு வீரர் பந்தை சேதப்படுத்திவிட்டால், எதிரணிக்கு 5 ரன்கள் வழங்கப்படும். இச்சம்பவம் கடந்த 2006 ஆம் ஆண்டு இங்கிலாந்து-பாகிஸ்தான் மோதிய போட்டியில் அரங்கேறியது. அம்பயர்களின் முடிவை ஏற்க மறுத்த பாகிஸ்தான் வீரர்கள் போட்டியை தொடர மறுத்து விட்டனர். இதனால் இப்போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.
அபராதம்: ஒரு போட்டியில் அடிக்கடி ஒரு வீரர் பந்தை சேதப்படுத்திக்



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



**FRIDGE, WASHER, DRYER** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# ஆதனத்தின் விலை மாறுகின்றதா?

கனடிய ஆதனத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. 2009 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலும் 2008 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலும் ஏற்பட்ட விலை இறக்கத்தை தொடர்ந்து, மாதாமாதம் விலை அதிகரித்தே வருவதனை காணக்கூடியதாக உள்ளது. இவ்வருடம் ஆரம்பம் தொடக்கம் ஏப்ரல் 2010 வரைக்கும், ஏப்ரல் மாதத்தில் சாதனையாக விலைகளிலும், விற்கப்பட்ட ஆதனங்களின் எண்ணிக்கைகளிலும் காணப்படுகின்றது. கனடிய மத்தியவங்கியின் ஆளுனர் நாயகம் திரு. மார்க் கார்னியின் கூற்றுகளாலும், அடமானக்கடனில் ஏற்படுத்திய (April 19, 2010) இறுக்கமான சூழ்நிலைகளினாலும், எதிர்காலத்தில் ஆதன விற்பனையில் மாற்றம் ஏற்படலாமா என சிந்திக்க தோன்றுகின்றது.

இருந்த போதிலும், புதிதாக கட்ட ஆரம்பிக்கும் வீடுகளின் எண்ணிக்கை இந்த வருடம் கனடா ரீதியில் 201,700 ஆக இருக்கின்றது. ஆனாலும், தனியான வீடுகளின் எண்ணிக்கையில் இறக்கம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் முந்தைய வருடத்துடன் (2009) ஒப்பிடும்போது இவ்வருடம் (2010) புதிதாக வாங்க இருப்பவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாக ஆய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கனடிய மத்திய வங்கி அதிகாரிகளின் ஆய்வு அறிக்கையின் பிரகாரம் இப்பொழுது இருக்கும் விலை அதிகரிப்பைவிட குறையலாம் எனத் தெரியவருகின்றது.

அதிகரித்துச் செல்லும் அடமானக் கடனின் வட்டிவீதம், அடமானக்கடன் பெறுவதில் ஏற்பட்ட இறுக்கமான நிலைமை, யூலை 01, 2010ஆம் திகதியிலிருந்து புதிதாக கொண்டுவரப்பட இருக்கும் (ஒன்ராரியோ மற்றும் பிரிட்டிஸ்கொலம்பியா) இணைந்த விற்பனை வரி (HST: Harmonized Sales Tax) போன்றவற்றினால் இந்த வருடத்தின் இரண்டாவது பகுதியில் இறுதி 6 மாதத்தில் வியாபாரத்தில் மந்தநிலைமை ஏற்படலாம் எனவும் எதிர்வு கூறப்படுகின்றது. இதனால் தனியான குடி மனைகளின் வியாபாரத்தில் இறக்கம் ஏற்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு ஏற்பட்டால் எதிர்காலத்தில் கனடிய பொருளாதாரத்திலும் பாதிப்பு ஏற்படலாம் என எதிர்பார்க்கலாம். முக்கியமாக அதிகரிக்க இருக்கும் அடமானக் கடன் வட்டிவீதம் முக்கிய பங்கு வகிக்கலாம்.

கனடிய மத்திய வங்கியின் ஆளுனர் யூன் 01, 2010 ஆம்திகதி வங்கியின் வட்டி வீதத்தை அதிகரிக்கலாம் என கடந்த சந்திப்பில் தெரிவித்திருந்தார். இதற்கு முக்கிய காரணமாக கொள்ளக்கூடியது கனடிய மக்களின் வருமான அதிகரிப்பைவிட கடன் அதிகரிப்பு, அதிகரித்து வருவதை கட்டுப்படுத்த வட்டிவீத அதிகரிப்பு தேவை என்ற வகையில் தனது அறிக்கை மூலம் தெரியப்படுத்தியிருந்தார்.

**அடமானக்கடன் பற்றிய சில தகவல்கள்**

- கனடாவிலுள்ள வீட்டு உரிமையாளர்களின் எண்ணிக்கை 9.3 மில்லியன்
- அடமானக்கடனுள்ள உரிமையாளர்கள் 5.5 மில்லியன்
- அடமானக் கடனின் சராசரித்தொகை $138,000
- குடியிருக்கும் வீட்டிலுள்ள அடமானக் கடனின் மொத்ததொகை $770 மில்லியன்

(தகவல் CAAMP + CBA)

***GTA* பகுதி புதிதாக நிர்மாணம் செய்யும் அடுக்குமாடி கட்டிடத்திலுள்ள மனைகளின் சில தகவல்கள்**

2010 இன் முதல் கால்பகுதியில் (Q1 - 2010)

a. 2010 மொத்தமாக கட்டப்பட்டு கொண்டு இருக்கும் கட்டிடத்தொகுதி (Projects) - 127

b.மொத்த மனைகளின் எண்ணிக்கை 31, 115

2009 இன் முதல் கால் பகுதிகள் (Q1-2009)

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 319**

**HomeLife GTA Realty Inc., Brokerage***

Independently owned & operated

"கனவு உங்களுடையது
பொறுப்பு எங்களுடையது"



1711 McCowan Rd. #206, Toronto - Tel.: 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga - Tel.: 905.712.2666

**Raja M. Mahendran**, P. Eng. (Broker / Owner)

## Business For Sale
## $64,900+stock




- *HWY 401 & WESTNEY - Ajax*
- *Best location/ Main road exposure*
- *Over $7,000 weekly sales*
- *Lotto Commission over $1500 monthly*
- *Asking only $69,900*
- *Very reasonable rent.*
- *Easily converted into Grocery / Convenience store.*
- *Don't miss the chance*

## House for Sale
## Aurora



- Bayview/Springfarm
- Detached 2-Storey • 4 Bedrooms
- Finished Walkout Basement
- 5 washrooms • double garage
- 6 years old house • ceramic floor
- hardwood floor • granite
- Stainless Fridge, Stove, Dishwasher, Exhaust Fan, Gas Stove, Fridge, Washer, Dryer, All Elfs,Chandelier, California Shutters, Garage Door Opener, Granite, Hardwood Floor, Central Air,Hwt(R).

## House For Sale
## $288,888



- *Dixie & Finch*
- *2 storey detached house*
- *3 + 1 bedrooms*
- *2 washrooms*
- *All Elfs, Fridge, Stove, Washer, Dryer, Central Air, Garage Door Opener & Remote, Beautifully Decorated With Laminate Flooring & Broadloom, Finished Basement With Wood Burning Fireplace, Renovated Washroom.*

## Condo. For Sale
## $159,000



- *Finch/Warden*
- *2 +1 bedrooms*
- *2 Washrooms*
- *Fridge, Stove, Washer, Dryer, All Elfs, Cac, Parking (Tandem = 2 Cars May Be Parked)*
- *Security System*
- *Recreation Room*
- *Exercise Room*

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
*Cell: 613 850 9931*

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

**Relocation Service**
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

*Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555*

# விழி மூடாத வீரர் இறப்பிலும் பெறுவர் வெற்றி...

வில்லுக்கு விஜயன் என்று சொல்லுவார்கள். அப்படிப்பட்ட மகா மேதையான அர்ச்சுனனையே வெல்லுமளவிற்கு வில் வித்தையில் வல்லவனாக வருகிறான் ஏகலைவன் என்ற வேடன்.

மண்ணால் துரோணரின் சிலையைச் செய்து, அதையே குருவாக ஏற்று பக்தியுடன் சகல வித்தைகளையும் அவன் கற்றுக் கொண்டான். குருவாகிய துரோணர் வித்தையைக் கற்றுக் கொடுக்காவிட்டாலும், அவரே நேரில் வந்து கட்டைவிரலைத் தானமாகத் தரும்படி கேட்டதும், அதை அரிந்து கொடுத்தான் வேடனான ஏகலைவன். குருவின் மீதான மதிப்பிற்கும் பக்திக்கும் மேல் வித்தையோ வெற்றியோ பெரிதல்ல என்பதை உலகிற்கு உணர்த்திய உன்னதத்தின் உன்னதமான பண்பின் சிகரமே அந்தப் படிப்பறியா வேடன்.

அதுபோல,
ஆண் வீரர்களுடனேயே போரிடுவேன் என்ற இலட்சியம் கொண்டவர் அவன் குருவான துரோணர். அவரைக் கொல்வதற்கு ஆணும், பெண்ணுமில்லாத அலியாகிய ஒருவனை அனுப்புகிறான் கண்ணன். அவ்வளவுதான் வில்லையும் அம்பையும் வீசிவிட்டு போர்க்களத்திலேயே நிஷ்டையில் இருக்கிறார் துரோணர். அவருடைய தலையை போரின்றி அந்த அலி இலகுவாக வெட்டி விடுகிறான்.

போர் என்பது வெற்றி பெறுவதற்காக நடாத்தப்படுவதல்ல என்ற உண்மையை விளங்க இவைகளைவிட வேறென்ன உதாரணம் வேண்டும்..

ஏகலைவனும், அவனுடைய குருவாகிய துரோணரும் வெற்றிபெற வாய்ப்பிருந்தும், போரின் ஒழுக்க நெறி முறையைக் கடைப்பிடித்து தோல்வியடைந்தார்கள். அவர்களுடைய தோல்வியில் போர்க்களம் பெருமைப்பட்டது. களத்தில் நிற்கும் ஒவ்வொரு வீரனும் தனது வெற்றிக்காக எதையும் செய்யலாம் என்று கருதவே கூடாது. நாம் நடத்தும் போரினால் யாருக்கு பெருமை என்றே கருத வேண்டும். தமது போரினால் போர்க்களம் பெருமை பெற வேண்டுமெனறு வாழ்ந்த வீரர்களே உலகப் புகழ் பெற்ற பண்பாளர்களாக விளங்கினார்கள்.

இதைத் தெரியாத ஒருவன் கையில் ஆயுதத்தைக் கொடுப்பது அன்றய போர் மரபல்ல..
சங்கப்பாடலில் போர்க்களத்தின் பெருமை காத்த இளைஞன் ஒருவன் வருகிறான். களத்தில் நிற்கும் அவனுடைய மார்பை நோக்கி எங்கிருந்தோ ஓர் ஈட்டி பாய்ந்தபடி வருகிறது. தடுக்க முடியாதளவிற்கு அது அவனை நெருங்கிவிட்டது. அந்த கணத்திற்குள் கணமான அற்ப பொழுதில் அவன் ஆழமாகச் சிந்திக்கிறான். தனக்கு வரக்கூடிய அவமானத்தை இப்படியெல்லாம் பட்டியலிடுகிறான்..

நான் இறப்பது உறுதியாகிவிட்டது, ஆனால் கண் இமைகளை மூடியபடி இறந்து கிடந்தால் அது என்னைப் பெற்றவளுக்கு அவமானம்..
உயிருக்குப் பயந்து கண்களை மூடினால் நான் பிறந்த தமிழ் மானத்திற்கு அவமானம்.. எல்லாவற்றிலும் மேலாக மரணபயத்தால் கண்களை மூடினால் பிறந்த பிறப்பிற்கே அவமானம்.. அதைவிட முக்கியம் நான் நிற்கும் போர்க்களம்.. கண்களை மூடியபடி நான் இறந்தால் நான் நிற்கும் போர்க்களத்திற்கே அவமானம்.. பயந்து கண்ணை மூடுவதால் வரக்கூடிய அவமானம் ஒன்றா இரண்டா ஓராயிரம் என்பதை ஒரே நொடியில் உணர்கிறான். கண்களை மூடாமலே அந்த ஈட்டியை மார்பில் ஏந்தி களத்தில் விழுகிறான்.

விழித்தபடி வீரமரணமடைந்த அவனுடைய உடலை பார்த்தவர்கள் அனைவரும், வென்றவனை விட பெரும் புகழ் இவனுக்கே என்று போற்றி, அவன் வீர உடலத்தில் வாகை மாலையைச் சாற்றி, அவன் விழுந்த மண்ணை கண்களில் ஒற்றி முத்தமிடுகிறார்கள்..

அன்றைய போரில் மரணத்தால் வெற்றி பெற்றான் அந்த வீரத் தமிழ் இளைஞன். அவன் விழுந்த விழுகையை 2000 ம் வருடங்களாக உலக மாந்தரால் அழிக்க முடியவில்லை. அன்று அவன் மீது ஈட்டியை எறிந்தவன் யாரென்று தெரியவில்லை, அதனால் அவன் என்னதான் பெற்றான் என்பதும் தெரியவில்லை. ஆனால் விழி மூடாத இந்த வீரனே போர்க்கள மானத்தை காத்த வீரனாகி யாருமே பெற முடியாத வெற்றியைப் பெற்றான்..

இதுபோல அன்று!

புதுமாத்தளனில் இறந்துகிடந்த எத்தனையோ புலி வீரர்களின் உடலங்களை நீங்கள் இணையத்தில் பார்த்திருப்பீர்கள்.. பலருடைய தலைகளில் பாய்ந்த குண்டு மிக அருகில் வைத்து சுடப்பட்டிருப்பதையும் பார்த்திருப்பீர்கள்.. ஆனால் இவ்வளவு அருகில் வைத்து சுடப்பட்ட போதும் இந்த வீரர்களின் கண்கள் குவளை மலர் போல திறந்தபடியே இருக்கின்றனவே ஏன்..? இவர்கள் சங்கப்பாடலில் வரும் வீரன் புகழை அறிந்தா இப்படி விழித்திருந்தார்கள்.. அன்று வீழ்ந்த அந்தத் சங்கத்தமிழ் இளைஞனின் வீரத்தை இன்று வீழ்ந்த இந்தப் புலி வீரர்கள் கண்களில் காண்கிறோம்.

என்னே ஒற்றுமை.. பார்க்கப் பார்க்க ஆன்றவிந்த தமிழ் மனம் பெருமையால் இறும்பூதடைகிறது.. தாம் நின்ற போர்க்களத்தின் பெருமையை குலைய விடாமல் மரணத்தைத் தேடியிருக்கிறார்கள் இந்தப் புலி வீரர்கள்.. ஆயிரம் ஆண்டுகள் போகட்டும் இந்த வீரர்களின் களப் பெருமையை யாரால் அழிக்க முடியும் ?

போருக்கு ஒரு நெறி முறை இருக்கிறது. சிறீலங்கா அரசு புதுமாத்தளனில் நடாத்தியதைப் போன்ற தர்ம நெறி முறைகள் குலைந்த ஒரு போரை இந்தியா நடத்தப் போவதில்லை என்று ப.சிதம்பரம் என்ற இந்திய உள்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

நடாத்தப்பட்டது நெறி முறை குன்றிய மோசமான போர் என்பதை சிறீலங்கா அரசின் உற்ற நண்பர் ஒருவரே கூறியிருப்பது வரலாற்றில் மிக நல்ல பதிவாகும்.

ஆம்..
சிறீலங்காவின் போர் நெறிமுறைகள் பண்டைத் தமிழ் வீரத்தின் இலக்கணங்களுக்கு இணையானதல்ல. சிங்கள இராணுவம் போல நெறி முறை குன்றிய போரை நடாத்துவது வீரப்புலிகளின் வாழ்வில் கிடையாது.. அதைவிட மரணமே மேல் என்ற முடிவிற்கே அவர்கள் வருவார்கள்..

இதோ ஓர் உதாரணம்,

சிங்கள மன்னனும் தன் தந்தையுமான தாதுசேனனை பதவிக்காக கற்சுவரில் வைத்து கட்டிக் கொல்கிறான் அவன் பெற்ற மகனான காசியப்பன். அப்போது கடைசிக் கல்லை வைத்து அவன் கண்களை மூடுகிறார்கள் சுற்றி நின்ற சிங்களப் படையினர். அந்தக் கணம், மகனே கண்.., என்று ஓலமிடுகிறான் தாதுசேனன். இங்கே நாம் கவனிக்க வேண்டிய இடம் கண் என்று ஓலமிடும் இடமாகும். அன்று கண்ணை மூட மறுத்த சங்கத்தமிழ் வீரனுக்கும், கண்களில் மண் அடிக்கப்பட்டதால் , மகனே கண்.., என்று அலறிய தாதுசேனனையும் இணைத்துப் பார்த்தால் இரு இனங்களுக்குமான போர் மரபின் வேறுபாடு புரியும்.


இத்தோடு இன்னொரு அழகிய உதாரணம்..
அன்று கற்சிலையான சிவபெருமானின் கண்ணில் இரத்தம் வடிகிறதே என்று தெரிந்ததும் தன் கண்ணையே பிடுங்கி அந்தச் சிலையில் வைத்தான் தமிழ் வேடனான கண்ணப்பன். சிலையான போது கண்ணுக்கு அழுதான் சிங்கள மன்னன்.. சிலையான சிவன் அழுதபோது தன் கண்ணையே பிடுங்கி கொடுத்தான் தமிழ் கண்ணப்பன்.

இதுதான் சிங்களவருக்கும் தமிழருக்கும் உள்ள வேறுபாடு.
கண்ணை மூடாத, கண்ணுக்காக அஞ்சாத கண்ணான வீரர்களைப் பெற்ற நாம், மரணித்த நம் வீரரின் திறந்த கண்களைப் பார்த்துச் சிரிப்பதா.. இல்லை புதுமாத்தளன் சோகமென்று கண்ணீர் விட்டு புலம்புவதா..

அழுது.. புரண்டு.. அரும் பெரும் சங்கத்தமிழ் வீரனின் புகழை அன்றைய நம் தமிழ் மக்கள் அழிக்கவில்லை.. அதே புகழ்ப் போரை நடாத்திய நம் புலி வீரர்கள் கண்களைப் பார்த்து புலம் பெயர் தமிழரான நாம் புலம்புவது சரியா?

சிந்தித்துப் பாருங்கள்..

நன்றி: அலைகள்



# இடம்பெயர்ந்த...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

யுத்தத்தினால் சிந்தப்பட்ட இரத்தம் காய்வதற்கு முன்பாக, யுத்தத்தின் கோரப் பிடிக்குள் சிக்கி சாவின் விளிம்பிற்கே சென்று திரும்பியுள்ள பொதுமக்களின் மன உளைச்சல்கள், மனவடுக்கள் பசுமையாக இருக்கின்ற நிலையிலேயே தேர்தல்களில் அவர்கள் வாக்களிக்க வேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

அதுமட்டுமன்றி, இந்த மே மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரையிலான ஒரு வாரத்தை அரசாங்கம் வெற்றி விழா வாரமாக அறிவித்திருக்கின்றது. நாடெங்கிலும் வெற்றிவிழாக்கள் கொண்டாடப் பட்டு வருகின்றன. யுத்தத்தின் கோரச் சம்பவங்களை நேரில் கண்ட சாட்சிகளாக, யுத்தத்தில் சிக்கி நூலிழையில் உயிர் தப்பியுள்ள மக்களின் மனதிற்கு ஆறுதல் கூறத்தக்க வகையில் எந்தவிதமான நடவடிக்கைகளையும் இந்த அரசாங்கம் மேற் கொள்ளவில்லை. உறவுகளையும் குடும்பத்தி னரையும் பறிகொடுத்து, அவயவங்களை இழந்தும், கண்களைப் பறிகொடுத்தும் அல்ல லுற்றிருக்கின்ற அந்த மக்களின் துன்பத்தில் பங்குகொள்ளும் வகையில் யுத்தத்தின்போது கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் ஆத்ம சாந்திக்காக அரசாங்கத்திடமிருந்து எந்தவிதமான அறிவிப்பும் வெளியாகவில்லை. வெறும் வெற்றிவிழாக் கொண்டாட்ட அறிவிப்பு மாத்திரமே பூரிப்போடு வெளியிடப்பட்டிருக்கின்றது.

அரசாங்கத்தின் இந்தச் செய்கையானது, போரினால் பாதிக்கப்பட்டு வேதனையால் வெந்து கொண்டிருக்கின்ற தமிழ் மக்களின் மனங்களில் வேல்கொண்டு பாய்ச்சியதைப் போன்று அமைந்திருக்கின்றது. நல்லிணக் கத்திற்குப் பதிலாக பிணக்கு ஏற்படுவதற்கான ஒரு வழியைத் திறந்து விட்டது போலவே இந்தச் செயல் அமைந்திருக்கின்றது. இந்த நிலையில் அரசாங்கம் தமிழ் மக்கள் மீது அனுதாபம் கொண்டு அல்லது அக்கறை கொண்டு அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக நேர்மையாகச் செயற்படுமா என்ற சந்தேகம் பலமாகத் தலை தூக்கியிருக்கின்றது. பல்வேறு அரசியல் நடவடிக்கைகளின் மூலமாக இலங்கை அரசாங்கங்களிடமிருந்து ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்வதற்காகப் போராடிய தமிழ் மக்கள் தமது ஆயுதப் போராட்டமும் முறியடிக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் இணக்கப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் நடந்து கொள்ளும் என நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் அந்த நம்பிக்கை இப்போது சிதறடிக்கப்பட்டு வருவதையே காணக்கூடியதாக இருக்கின்றது.

கிட்டத்தட்ட 3 லட்சம் பேர் போரினால் இடம் பெயர்ந்து இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள்ளே அனுமதிக்கப்பட்டு, மனிக்பாம் முகாமில் அவர்களுக்கு அபய மளிக்கப்பட்டது. அங்கு அவர்கள் அரசாங்கத்தினால் சொந்தநாட்டுப் பிரஜை களாக நடத்தப்படவில்லை. சந்தேகத்திற்குரிய கிரிமினல்களைப் போல முட்கம்பி வேலிகளுக்குள் அடைக்கப்பட்டிருந்தார்கள். மனிதாபிமானத்தோடு அவர்கள் நடத்தப்பட வில்லை. கூடாரங்களுக்குள் கொளுத்தும் வெயிலின் கோர வெப்பத்தினுள் அவர்கள் வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தது. சீரான குடிநீர், அடிப்படை சுகாதார வசதிகள், சுதந்திரமான நடமாட்டம் என்பன மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருந்தன. இப்பொழுது மீள்குடியேற்றத்திற்காக அவர்களுடைய சொந்தப் பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தில் எந்தவிதமான பெரிய மாற்றமும் ஏற்படவில்லை. முகாம்களில் வாழ்ந்ததைப் போலவே கூடாரங்களிலும் தகரக் கொட்டில்களிலுமே அவர்கள் இன்னும் தங்கியிருக்கின்றார்கள். அவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வில்லை. வாழ்வாதாரத்திற்குத் தேவையான தொழில் வசதிகள் செய்யப்படவில்லை. இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

அதுமட்டுமல்லாமல், மன்னார் மாவட்டத்தின் சின்ன பண்டிவிரிச்சான் தட்சணாமருதமடு, தொடக்கம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டம் வரையிலான பிரதேசங்களின் பல பகுதிகளில் முழுமையாக காணிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை. வீடுகள் அமைந்துள்ள இடங்களில் மாத்திரம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. ஏனைய விவசாயம் செய்யக் கூடிய இடங்களில் அவைகள் அகற்றப்படவில்லை. மாறாக அந்த இடங்களில் மஞ்சள் பட்டிகள் சுற்றி கட்டப்பட்டு கண்ணி வெடி அபாயத்தைக் குறித்து காட்டுகின்ற அடையாளங்கள் இடப்பட்டிருக்கின்றன.

இதனால் மீள்குடியேறியுள்ள மக்கள் தங்களுக்கு வழங்கப்படுகின்ற உலர் உணவை உட்கொண்டு, வெறுமனே காட்டுப்பாங்கான பகுதிகளில் பாம்புக்கடி, மிருகங்களின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாழ்க்கையை ஓட்ட வேண்டியவர்களாக இருப்பதாக மீள்குடியேற்றப் பகுதிகளுக்கு அடிக்கடி சென்று வருகின்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி, கிளி-நொச்சி மாவட்டத்தின் பூனகரி போன்ற சில சில பிரதேசங்களைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்


## பொதுசன அறிக்கை

# ஒன்டாரியோவில் வாழும் நீரிழிவு உள்ள வயது வந்தோருக்கானது

நீரிழிவுடன் வாழ்வது சுலபமானதல்ல, ஆனால் தினசரி வாழ்க்கையில் அதை சமாளிப்பதென்பது, உங்கள் உடல்நலத்திற்கு நல்ல கவனம் செலுத்துவதைத்தான் குறிக்கும்.

நீரிழிவு பரிசோதனை அறிக்கையானது உடல்நல மற்றும் நீண்டகாலப் பராமரிப்பு அமைச்சுவினால் உங்கள் மருத்துவருக்கு அனுப்பிவைக்கப்படும். முக்கியமான மூன்று பரிசோதனைகளை நீங்கள் எப்போது கடைசியாகச் செய்தீர்கள் என்பதை இது அவருக்குத் தெரியப்படுத்தும்: இரத்தத்தில் சர்க்கரைக்கான பரிசோதனை (A1C), கொலஸ்டிரோல் பரிசோதனை (LDL), மற்றும் விழித்திரை கண் பரிசோதனை. நீரிழிவு வியாதி உள்ளவர்கள் இந்தப் பரிசோதனைகளை ஒழுங்காக செய்யும் போது அவர்களால் இந்த வியாதியை நன்கு சமாளிக்க முடிவதோடு மருத்துவ சிக்கல்களை தவிர்க்கவும் முடிகின்றதென்பதை நாங்கள் அறிகின்றோம். உங்களுக்கு நீரிழிவு வியாதியிருக்கின்றது ஆனால் இந்த மூன்று பரிசோதனைகளையும் செய்துவிட்டீர்களா என்பதில் நிச்சயம் இல்லாதிருந்தால் உடல்நல பராமரிப்பாளருடன் பேசவும்.

### விளையும் நன்மைகள்

- நீங்களும் உங்கள் மருத்துவரும் நீரிழிவுப் பராமரிப்பை மேம்பட்ட விதத்தில் செய்ய உதவுதல்
- A1C பரிசோதனை, LDL பரிசோதனை, மற்றும் விழித்திரை கண் பரிசோதனை ஆகியவற்றைச் செய்வதற்குரிய நாள் கடந்துவிட்டதா என்பதை உங்களுக்கும் உங்கள் மருத்துவருக்கும் தெரியப்படுத்துதல்.
- நீரிழிவு பராமரிப்பைப் பற்றி நீங்களும் உங்கள் மருத்துவரும் கலந்து பேசுவதை சுலபமாக்குதல்.

### உங்கள் அந்தரங்கத்திற்கு மதிப்பளித்தல்

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்காக, உடல்நல மற்றும் நீண்டகால அமைச்சுவும் உங்கள் மருத்துவரும், நீங்கள் கடைசியாக A1C பரிசோதனை, LDL பரிசோதனை, மற்றும் விழித்திரை கண் பரிசோதனை செய்த திகதியை அந்தரங்கமான முறையில் பகிர்ந்து கொள்வார்கள்.

உங்கள் மருத்துவரின் நீரிழிவு பரிசோதனை அறிக்கையில் சேர்த்துக்கொள்ளப்படுவதை நீங்கள் விரும்பாதிருக்கலாம். இந்த நீரிழிவு பரிசோதனை அறிக்கையில் நீங்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான சம்மதத்தை நிறுத்திவைக்க அல்லது வாபஸ்பெற விரும்பினால், சேர்விஸ் **ஒன்டாரியோ**வை **1-800-291-1405, TTY: 1-800-387-5559** என்ற இலக்கத்தில் அழைக்கவும். உங்கள் சம்மதத்தை நீங்கள் நிறுத்திவைக்க அல்லது வாபஸ்பெற முடிவுசெய்தால் மருத்துவர் தொடர்ந்தும் உங்களுக்கு உடல்நலப் பராமரிப்பு வழங்குவார்.

நீரிழிவு பரிசோதனை அறிக்கையின் நோக்கத்திற்காக உங்கள் தனிப்பட்ட உடல்நலத் தகவலின் சேகரிப்பு, பாவனை மற்றும் வெளியீடு பற்றிய மேலதிக தகவலுக்கு, அல்லது எதிர்காலத்தில் நீரிழிவு பரிசோதனை அறிக்கைகளில் உங்களுடைய தகவல் சேர்த்துக்கொள்வது தொடர்பாக உங்கள் முடிவை எப்போதாவது நீங்கள் மாற்றினால், மேலே தரப்பட்டுள்ள இலக்கங்களில் சர்விஸ் கனடாவை அழைக்கவும். நீரிழிவு பற்றிய மேலதிக தகவலுக்கு
**Ontario.ca/diabetes** க்கு செல்லவும்.

கட்டணம் ஒன்டாரியோ அரசால் செலுத்தப்பட்டது.

Ontario

# கல்வி தேர்வுக்கு மட்டும் உரியதன்று

(கடந்த இதழ் தொடர்ச்சி ...)

விநாயகப் பெருமான் பெற்றோரைச் சுற்றி வந்த கதை உங்களுக்குத் தெரியும். நாரத முனிவர் கயிலைக்கு ஒரு கனியுடன் வந்தார். சிவசக்தியின் குழந்தைகளாகிய விநாயகரும் ஆறுமுகனும் பெற்றோருடன் இருந்தனர். கனியைப் பெற இருவரும் ஒரே நேரத்தில் கைகளை நீட்டியதால் யாருக்குக் கனியை முதலிற் கொடுப்பது என்ற சங்கடத்தைத் தீர்க்க நாரதர் சிவபெருமானிடம் கனியைக் கையளித்தார். சிவபெருமான் உலகத்தை யார் முதலிற் சுற்றிவருகின்றாரோ அவருக்கே கனி என்று திருவாய்மலர்ந்தார்.

உடனே முருகப் பெருமான் தனது மயில்வாகனத்தில் உலகத்தைச் சுற்றிவரப் புறப்பட்டார். விநாயகப் பெருமான் என்ன செய்யப்போகிறார் என்று தேவர்கள் அவரையே பார்த்தவண்ணம் இருந்தனர். விநாயகப் பெருமான் தம்பியாரின் வேகத்தைப் பற்றிக் கவலை கொள்ளாத-வராக, எந்தவித பதற்றமும் இன்றி ஆறுதலாக எழுந்து கைகளைக் கூப்பிய வண்ணம் அம்மை அப்பரைச் சுற்றிவந்து கனியைத் தரும்படி கையை நீட்டினார். சிவபெருமான் எல்லாம் அறிபவர். கனியை விநாயகப் பெருமானுக்குக் கொடுத்தருளினார்.

இந்தக் கதையின் உட்பொருள் என்ன வென்றால், பெற்றாரே ஒரு பிள்ளைக்கு உலகம் என்பது. இன்றல்ல நேற்றல்ல என்றோ உங்களைப் போன்ற சிறுவர்களுக்கு பெற்றவர்களின் முக்கியத்துவத்தை விநாயகப் பெருமான் உணர்த்தியிருக்கின்றார். அதனாலேதான் விநாயகரின் அருள்பெற்ற அவ்வைப்பிராட்டியாரும் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று கொன்றைவேந்தனில் முதல் வாக்கியமாகவே கூறிவிடுகின்றார்.



அருணோதயாவில் திருமதி தவமணி கந்தவனம், அதிபர் நா. கேதீஸ்வரன், திரு. வி. கந்தவனம், திரு. வ. கிருஷ்ணசாமி (முன்னாள் சமூகசேவை ஆணையாளர்), உப அதிபர் திருமதி சாந்தி அமிர்தலிங்கம்.

ஆம். நாம் முதன்முதலாகக் கண்ட தெய்வங்கள் எம்மைப் பெற்றவர்தாம். அவர்களை நாளாந்தம் வணங்கி அவர்கள் சொல்லை மந்திரமாகக் கேட்டு வளருகின்ற பிள்ளைகளுக்கு வாழ்க்கையில் எந்தக் குறைகளும் வரமாட்டா.

அடுத்து நாம் மதித்து நடக்கவேண்யவர்கள் பெரியோர்கள். ஊரிலே பல பெரியவர்கள் இருப்பார்கள். 'பெரியோர் என்போர் செயற்கருஞ் செயல்களைச் செய்பவர்' என்று வள்ளுவர் பெருமான் விளக்கம் அளித்தாலும், உங்களைப் பொறுத்த வரையில் உங்களுக்கு மூத்தவர்கள் எல்லோருமே பெரியவர்கள்தாம். அவர்களில் கற்றவர்களை, கல்லாதுபோனாலும் நல்லவர் களை, நல்ல ஒழுக்கமுள்ளவர்களை நீங்கள் மதிக்க வேண்டும். அவர்கள் உள்ளம் புண்படாதவாறு அவர்களுடன் நீங்கள் மரியாதையாகப் பேசுதல் வேண்டும். அளவெட்டிப் பிள்ளைகளின் சிறந்த பண்புகளில் ஒன்று பெரியோரை மதித்தல், பெரியோர் சொற்கேட்டல், பெரியோரைப் பேணுதல்.

> "கல்வி என்பது தேர்வுக்கு மட்டும் உரியதன்று. அது உண்மையில் வாழ்க்கைக்கு உரியது."

பேணுதல் என்றால் அவர்களுக்கு உதவி செய்தல். உதாரணமாக, ஒரு பேருந்தில் நீங்கள் பயணம் செய்துகொண்டிருக்கையில் இடையில் ஒரு பெரியவர் ஏறினால், அவருக்கு இருப்பதற்கு இடம் கிடைக்கவில்லை என்றால் நீங்கள் எழுந்து உங்கள் இடத்தை அவருக்குக் கொடுத்து உதவுவது உங்கள் கடமை. மிகவும் முக்கியமாக, பொது இடங்களில் பெரியவருக்குரிய மதிப்பையும் மரியாதையும் நாம் கொடுத்தல் வேண்டும்.

அடுத்து நீங்கள் மதிக்கவேண்டியவர் ஆசிரியர். மாதா பிதா குரு தெய்வம். அதாவது மாதா பிதாவையடுத்து குரு தெய்வமாகப் போற்றப்பட வேண்டியவர். எழுத்தறி வித்தவன் இறைவன் ஆவான். மாணவருக்குக் குருமார் அவர்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள்தாம்.

மாணவர் என்றவகையில் நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் பாடசாலைக்கு ஒழுங்காக வருதல். ஒழுங்காக வந்து பாடங்களைப் படித்தல். முக்கியமாக ஆசிரியர் சொல்வதை அவதானமாகக் கேட்டல், விளங்காதவற்றை அவர்களிடம் கேட்டுத் தெளிந்து கொள்ளுதல்.

பாடங்களைக் குருவிடத்தில் எப்படிக் கேட்க வேண்டும் என்பதற்கு இராமகிருஷ்ணர் ஒரு நல்ல கதை சொல்லியிருக்கிறார். ஒரு குருவானவர் சைவசமயம் பற்றிப் படிப்பிக்கையில் சொன்னார், "சிவபெருமான் எல்லாம் வல்லவர், எல்லாம் அறிபவர், எங்கும் உள்ளவர். எல்லா உயிர்களிடத்தும் இருப்பவர். அவர் கருணை மிகுந்தவர். எல்லா உயிர்களையும் காத்தருள்பவர் அவர்தான்."

பாடம் முடிந்து மாணவர் வீட்டுக்குச் சென்றனர். ஒரு மாணவன் வீட்டுக்குச் செல்லும் வழியில் எதிர்ப் பக்கமாக யானை ஒன்று வந்துகொண்டிருந்தது. அது கிட்ட வந்தபொழுது, யானைப் பாகன், தம்பி யானை அடிக்கும், விலத்திப்போ என்று சத்தமிட்டான். அப்பொழுது அந்த மாணவனுக்கு குருவானவர் படிப்பித்த பாடம் நினைவுக்கு வந்தது. இறைவன் எல்லா உயிர்களிடத்தும் இருக்கிறார். யானையிலும் இருக்கிறார். அதனால் அவர் தனக்கு ஒன்றும் செய்யமாட்டார் என்று அவன் நினைத்துக்கொண்டு, பாகன் சொன்னதைக் கேளாது யானைக்குப் பக்கமாகத் தன்பாட்டிற் சென்றான். அந்த நேரம் யானை தும்பிக் கையால் அவனை அடித்து விழுத்தியது. வேலிப் பக்கமாக விழுந்த அவனது மேனியை முட்கள் கீறிக் காயப்படுத்தின. அவனுக்குக் குருமீது கோபம் வந்தது. அவரது பாடத்தில் சந்தேகமும் எழுந்தது.

அடுத்தநாள் வகுப்பிலே முதல்வேலையாக அந்த மாணவன் இறைவன் எல்லா உயிர்களிடத்திலும் இருக்கிறார் என்பதைத் தன்னால் நம்பமுடியாது என்று குருவிடத்தில் கூறி, அதற்கு ஆதாரமாக முதல்நாள் நடந்ததை விவரித்தான்.

குருவானவர் அமைதியாக எல்லாவற்றையும் கேட்டுவிட்டுக் கூறினார், "மகனே! நீ யானையிடத்தில் கடவுள் இருக்கவேண்டும் என்று நினைத்தது சரி. ஆனால் கடவுள் எல்லா உயிர்களிடத்திலும் இருக்கிறார் என்றுதானே கூறினேன். நீ கடவுள் யானைப் பாகனிடத்திலும் இருக்க வேண்டும் என நினைக்கத் தவறிவிட்டாய். வாய்பேசக்கூடிய பாகனைக்கொண்டு இறைவர் உன்னுடன் பேசியிருக்கிறார். நீ அவரின் சொல்லைக் கேட்கவில்லை. அதனாலேதான் உனக்கு அந்த விபத்து நேர்ந்தது."

இந்தக் கதை வகுப்பிலே ஆசிரியர் நடத்தும் பாடங்களை மாணவர் ஐயம் திரிபறக் கேட்டுத் தெளிய வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றது. மாணவப் பருவம் படிப்பதற்குரிய பருவம். உற்றுக் கேட்டலும் கற்றுத் தெளிதலும் அவர்களைத் தேர்வுகளில் எளிதிலே வெற்றிபெற வைக்கும்.



கவிஞர் வி. கந்தவனம்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS • SKIN PROBLEM • RESPIRATORY PROBLEMS • DIGESTIVE PROBLEMS • VARICOSE VEINS • BACK PROBLEM /NECK PROBLEM • TENNIS ELBOW PROBLEM • TREAT WITH MASSAGE THERAP • ALLERGIES • SEXUAL PROBLEMS • SEXUAL PROBLEMS • CHOLESTEROL • TUMOR • FOOT PROBLEM

Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# கியூபெக் மகாநாடு - 1864



# கனடாவின் கதை - 21

சாலற்ரவுன் மகாநாட்டிலிருந்து திரும்பி வந்த ஜோன் ஏ மக்டொனால்ட், கனடிய மாகாத் தேசாதிபதி வைக்கவுண்ட மொங் என்பவரை மூன்று கடலோர மாகாணங்களையும் நியூபவுன்லாந்தையுஞ் சேர்ந்த பிரதிநிதிகளை இன்னுமொரு மகாநாட்டுக்கு வரும்படி அழைக்குமாறு கேட்டுக் கொண்டார். அதன்படி ஒக்டோபர் 1864 இல் கியூபெக்கில் மகாநாடு கூட்டப்பட்டது.

- துறையூரான் -

இம்மகாநாடு புறொன்ரெனாக் மாளிகையில் நடைபெற்றது. இதன் தலைவராக எற்றியன் பாஸ்கல் தக்கே தெரிவு செய்யப்பட்ட போதிலும் மக்டொனால்டே முன்னனியில் நின்று நடத்தினார். சாலற்ரவுன் மகாநாட்டைத் தொடர்ந்த இம் மகாநாட்டில் பிரதி மகாநாட்டைத் தொடர்ந்த இம் மகா நாட்டில் பிரதி நிதிகளுக்கிடையில் சில கருத்து வேறுபாடுகள் இருந்தபோதும், இதன் நோக்கமும் பங்கு பற்றியோரின் தேசப்பற்றும் வெளிப்படையாகத் தெரிந்தது. ஜோர்ஜ் பிறவுணைத் தலைவராகக் கனடா மேற்கு சீர்திருந்தவாதிகள் பிரெஞ்சுக் கனேடியர்கள் தமது பிரதேச அலுவல்களில் தலையிடுவது போன்று உணர்ந்தனர். ஆனால் நோவாஸ்கோசியாவின் ரப்பரும், நியூபிறண்விஸ்கின்ரிலியும், வியாபாரஞ் செய்து நாடு வளம் பெறுவதற்கான புதிய வழி பிறந்திருப்பதாக எண்ணினர்.

அரசாங்க மேலவை (Senate) யில் தமக்குச் சமமான இடங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென கடலோர மாகாணங்கள் வலியுறுத்தின. நியூபவுண்லாந்து இக்கூட்டாட்சியில் சேர்வதால் தமக்கு ஒதுக்கப்பட்ட மேலவை இடங்கள் குறைந்து போவதை மூன்று கடலோர மாகாணங்களும் விரும்பவில்லை. இதனால் மாகா நாட்டு நிகழ்வுகள் சீர்குலையக் கூடிய அறிகுறிகள் தென்பட்டன. இதனைச் சமாளிப்பதற்காக மக்டொனால் தமது மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட மேலவை இடங்களில் நான்கை, நியூபவுண்லாந்து கூட்டாட்சியில் இணைந்தால், கொடுப்பதற்கு முன்வந்தார்.

அடுத்து கடலோர மாகாணங்கள் அமையவிருக்கும் அரசாட்சி, முறை பற்றியும் கேள்வி எழுப்பினர். வரையறுக்கப்படாத அதிகாரங்கள் மத்திய அரசிற்கா, மாநில அரசிற்கா அளிக்கப்படும் எனக் கேட்டனர். இவையாவும் மத்திய அரசுக்கே ஒதுக்கப்படுமென மக்டொனால்ட் கூறினார். இதனை ரப்பரும் ஆதரித்தார். இறுதியில் 72 தீர்மானங்களுடன் மகாநாடு ஒக்டோபர் 26 இல் முடிவடைந்தது. இத்தீர்மானங்களின் அடிப்படையில் இனிவரும் மகாநாடுகள் நடைபெறும் எனவும் சம்மதிக்கப்பட்டது.

இம்மகாநாட்டிலிருந்து பிறின்ஸ் எட்வேட் தீவு பிரதிநிதிகள் மிகவும் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். அமையவிருக்கும் பிரதிநிதிகள் சபையில் (House of Commons) ஆறு பிரதிநிதிகளுக்கான ஒதுக்கீடு உறுதி செய்யப்படவில்லை. அத்துடன் சமூகமளிக்காத நிலப்பிரபுக்களின் சொத்துக்களை வாங்குவதற்கு சாள்ற்ரவுண் மகாநாட்டில் ஒதுக்கப்பட்ட 2 இலட்சம் டொலரும் மறுக்கப்பட்டது.

### இலண்டன் மகாநாடு - 1866

கியூபெக் மகாநாட்டின் பின் கனடா மாகாணச்சட்டசபை கூட்டாட்சியை அங்கீகரித்து ஒரு சட்டநகலொன்றைத் தயார் செய்தது. கடலோர மாகாணங்கள் பல இழுபறிகளுக்குப் பின் கூட்டாட்சியை 1860 இல் அங்கீகரித்தன. பிறின்ஸ் எட்வேட் தீவும் நியூபவுன்லாந்தும் சேர மறுத்தன.

1866 டிசம்பரில் கனடா மாகாணம் நியூபிறவுண்ஸ்விக், நோவாஸ்கோசியா ஆகியவற்றின் 16 பிரதிநிதிகள் இலண்டனுக்குச் சென்றனர். அங்கே விக்டோரியா இராணி அவர்களை மாகாண ரீதியாகச் சந்தித்தார். வெஸ்ற்மினிஸ்டர் பலஸ் ஹோட்டலில் நடைபெற்ற கூட்டத்தில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட 72 தீர்மானங்களும் மீள்பார்வை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டன. நோவா ஸ்கோசியாவின் சில எதிர்பார்பாளர்களுக்கு சாள்ஸ் ரப்பர், தீர்மானங்களில் திருத்தங்களைக் கொண்டு வருவதாக வாக்களித்திருந்த போதும், ஒன்றுமே செய்யமுடியாது போயிற்று. ஏற்றுக் கொள்ளப்பட்டவை இலண்டன் தீர்மானமென அழைக்கப்பட்டு கொலனிகள் காரியாலயத்துக்கு அனுப்பப்பட்டது.

கிறிஸ்மஸ் விடுமுறையின் பின் ஜனவரி 1867 இல் பிரதிநிதிகள் கூடி பிரித்தானிய வடஅமெரிக்கச் சட்டத்தை வரைந்தனர். புதிய நாடு கனடா எனவும் கனடா கிழக்கு கியூபெக் என்றும் மேற்கு ஒன்ராரியோ என்றும் பெயரிடப்பட வேண்டுமெனப் பிரேரிக்கப்பட்டது. இதில் பல கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. இறுதியில் கனடா இராச்சியம் எனப் பெயரிடப்பட வேண்டுமென யாவரும் ஏற்றுக் கொண்டனர். இப்பெயரைத் தெரிவு செய்தவர் சேர் சாமியல் லொனாட் ரிலி என்பது குறிப்பிடத்தகுந்தது.

1867 பெப்ரவரியில் பிரதிநிதிகள் சட்டவரைபை செய்து முடித்தனர். பெப்ரவரி 11ஆம் நாள் அது மகாராணிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அடுத்த நாள் பிரபுக்கள் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே பிரதிநிதிகள் சபையாலும் விரைவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. மார்ச் 29, 1867 இல் இது சட்டமாக இராணியிடம் அங்கீகாரம் பெற்றது. மாகாணங்களின் இணைப்பு நாளாக ஜுலை01, 1867 தீர்மானிக்கப்பட்டது.

### பிரித்தானிய வடஅமெரிக்கச் சட்டங்கள்

வடஅமெரிக்கச் சட்டமானது, 1840 ஆம் ஆண்டு கூட்டாட்சிச் சட்டத்தை செல்லுபடியற்றதாகச் செய்தது. புதிய மாகாணங்களாக கியூபெக்கும் ஒன்ராரியோவும் உருவாக்கப்பட்டன. ஜுலை முதலாம் திகதி கனடா நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

கனடாவின் அரசமைப்பு தெற்கிலிருந்த அமெரிக்க முறையைத் தழுவியதெனினும் ஏகாதிபத்திய முறைப்படி இருக்க வேண்டுமென மக்டொனால்ட் வலியுறுத்தி,

தொடர்ச்சி 14ஆம் பக்கம்




# நாடு கடந்த...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

## TRANSNATIONAL GOVERMENT OF TAMIL EELAM

**2. New Zealand** - Elected uncontested

1. Thevarajan ARUMUGAM uncontested Elected
2. Sivapatham NAGULASWARAN (Dr.) uncontested Elected

**3. Norway** – 3,511 votes polled - (Referendum Results - 5,633 votes polled)

1. Jeyasri BALASUBRAMANIAM 2342 Elected
2. Murali SIVANANDAN 2321 Elected
3. Sivakanesan THILLAIAMPALAM 2449 Elected

**4. Denmark** Election Results – 3,102 votes polled
(Referendum Results on 2009 – 4,147 votes polled)

1. Sukenthini NIMALANATHAN (B.A) 2626 Elected
2. Remmon WASHINGTON 2738 Elected
3. Maheswaran PONNAPALAM 2550 Elected

**5. Sweden** Election Results on May 02, 2010 - Elected uncontested

1. Ruban SIVANESAN uncontested Elected

**6. Switzerland** Election Results – 12,243 votes polled
(Referendum Results on Jan 2010 – 16,441 votes polled)

1. Suganya PUTHIRASIGAMANI 1880 Elected
2. Suntharalingam VIRAKATHI 1846 Elected
3. Jeyam SELVARAJAH 1058 Elected
4. Thayananth ALVAIPILLAI 854 Elected
5. Balan SIVAPATHAM 515 Elected
6. Srisajeetha SIVARAJAH 1002 Elected
7. Mahenthirampillai SELLATHURAI 110 Elected
8. Baskaralingam MAHALINGAM uncontested Elected
9. Rajinithevi SINNATHAMBY uncontested Elected
10. Sukinthan MURUGAIAH uncontested Elected

**7. USA** Election Results – N/A votes polled

1. Jeyaprakash JEYALINGAM Elected
2. Suba SUNTHARALINGAM (M.A) uncontested Elected
3. Shan SUNDARAM uncontested Elected
4. Prabharan PONNUTHURAI uncontested Elected
5. Ranjan SELVA uncontested Elected
6. Thave THAVENDRAJAH (Dr.) uncontested Elected
7. Siva SANGARY (P.Eng) uncontested Elected
8. Alex DOSS uncontested Elected
9. Visvanathan RUDRAKUMARAN uncontested Elected
10. Gerard FRANCIS (Dr.) uncontested Elected

**8. France** Election Results – 10,000 votes polled

1. Mahintan SIVASUBRAMANIAM 547 Elected
2. Balachandran SIVAGURU 165 Elected
3. Subashini KURUPARANATHAN 1448 Elected
4. Sutharsan SIVAGURUNATHAN 912 Elected
5. Balachandran NAGALINGAM 986 Elected
6. Sasikumar SARAVANAMUTHU uncontested Elected
7. Krisanth THARMENDRAN uncontested Elected
8. Re-election 9. Re-election 10. Re-election

**9. Britain** Election Results – N/A votes polled

1. Arthi ARUMUGAN 4154 Elected
2. Kaviraj SHANMUGANATHAN 3758 Elected
3. Sasithar MAHESWARAN 3796 Elected
4. Selvarajah SELLATHURAI 2796 Elected
5. Karan MURUGAVEL 2641 Elected
6. Jeyavani ATCHUTHAN 5446 Elected
7. Senathirajah JEYANANTHAMOORTHY 8357 Elected
8. Deluxon MORRIS 6434 Elected
9. Balambihai MURUGADAS 5879 Elected
10. Lalithasorubini PRATHEEPARAJ 5521 Elected
11. Nicholas MANORANJAN uncontested Elected
12. Janarthanan PULENTHIRAN uncontested Elected
13. Re-election 14. Re-election 15. Re-election
16. Re-election 17. Re-election 18. Re-election
19. Re-election 20. Re-election

**10. German** Election Results – 630 votes polled

1. Vithiya JEYASHANKAR (B.Eng) 441 Elected
2. May 16, 2010 - Election 3. May 16, 2010 - Election
4. May 16, 2010 - Election 5. May 16, 2010 - Election
6. May 16, 2010 - Election 7. May 16, 2010 - Election
8. May 16, 2010 - Election 9. May 16, 2010 - Election
10. May 16, 2010 - Election

**11. Australia** Election Results on May 2010 – N/A votes polled

1. Janani BALACHANDRAN uncontested Elected
2. Dominic Savio SANTHIAPILLAI uncontested Elected
3. Thuraisingam SHANMUGANATHAKUMAR uncontested Elected
4. Eliyathamby SELVANATHAN uncontested Elected
5. Apiramy VISUVANATHAN uncontested Elected
6. May 22, 2010 - Election 7. May 22, 2010 - Election
8. May 22, 2010 - Election 9. May 22, 2010 - Election
10. May 22, 2010 - Election

**12. Italy** Election Results on May 2010 – N/A votes polled
1. N/A 2. N/A 3. N/A

**13. South Africa** Election Results on May 2010 – N/A votes polled
1. N/A 2. N/A 3. N/A

**14. Netherland**, Belgium, Luxemburg Election Results on May 2010 – N/A votes polled
1. N/A 2. N/A 3. N/A

**15. Finland** Election Results on May 2010 – N/A votes polled
1. N/A

**16. Ireland** Election Results on May 2010 – N/A votes polled
1. N/A

# நாடு கடந்த...

நாடு கடந்த தமிழீழ அரசை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இலங்கை அரசு தயாரென ஊடக அமைச்சர் ஹெகிலிய றம்புக்கல்ல மே 14, 2010 அன்று தெரிவித்துள்ளார். ஐரோப்பா மற்றும் தென்னாசிய நாடுகளில் இயங்கிவரும் புலம்பெயர் தமிழ் தலைவர்கள் இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து போதிய விளக்கமின்றி செயற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கைத் தமிழர்களின் தற்போதைய நிலைமை குறித்து புலம்பெயர் தமிழர்களுக்கு தெளிவு படுத்த வேண்டியது அத்தியவசியம் என்றார்.

நோர்வேயைத் தளமாகக் கொண்டு இயங்கும் நெடியவனின் நெறிப்படுத்தலில் இலண்டனில் செயல்படும் உலகத்தமிழர் பேரவை (GTF) தான் புலிகளின் மறுபிறப்பு என்றும் அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் விசுவநாதன் உருத்திரகுமாரனின் நெறிப்படுத்தலில் செயல்படும் நாடு கடந்த தமிழீழ அரசு (TGTE) தெளிவான அரசியல் விளக்கமுள்ள ஓர் அரசியலமைப்பு என்றும் பேராசிரியர் றோகண குணரட்ண தெரிவித்துள்ளார். இவர் சிங்கப்பூரில் உள்ள Nanyang பல்கலைக்கழகத்தில் அரசியல் அநீதி மற்றும் பயங்கரவாதத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் சர்வதேச நடுவத்தின் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் 'எக்பிறஸ்' இணையத்தளத்திற்கு மேலும் தெரிவிக்கையில் அரசியல் தெளிவுள்ள நாடு கடந்த தமிழீழ அரசுடன் இலங்கை அரசாங்கம் இலங்கை தமிழர் பிரச்சைனை பற்றி ஒரு தீர்வுக்கு வரவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

"நாடுகடந்த தமிழீழ அரசிற்கான தேர்தல் நிதியத்தை திரட்டுமுகமாக விற்பனை செய்யப்பட்டுவந்த அதிஸ்டலாபச் சீட்டுக்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 6ம் திகதி மாலை 6.30க்கு 3150 எக்லிங்ரன் வீதியிலமைந்துள்ள றோயல் குவீன் மண்டபத்தில் குலுக்கி அதிஸ்டம் பார்க்கப்படும். இதுவரை அதிஸ்டலாபச் சீட்டுக்களை விற்பனை செய்யவென நிர்வாகிகளிடம் பெற்றுக்கொண்டவர்கள் விலைப்பட்ட சீட்டுக்களின் விபரங்களை மே 12ம் திகதிக்கு முன்பாக நிர்வாகிகளிடம் மீளக் கையளிக்குமாறு பணிவுடன் கேட்கப் படுகின்றீர்கள்."
தொடர்புகட்கு 416 995 0152

நிதி சேகரிப்பு உப குழு
நாடு கடந்த தமிழீழ அரசின் கனடிய செயற்பாட்டுக் குழு

# தூண்டில் மீன்கள்

## ஓடும் நீர் உறைவதில்லை 01
## இரண்டாம் பாகம்

நாம் அனைவரும் நமது வாழ்க்கையைச் சிறப்பாக நகர்த்த வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டே ஒவ்வொரு கணப்பொழுதையும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அவ்வாறு நகர்த்தும் பொழுது அதிபெரும்பாலும் சுயபலனை முன்னிறுத்திக் கொள்கிறோம். ஒவ்வொரு வாழ்வியல் நகர்வும் எமது எதிர்பார்ப்புக்குச் சாதகமாக அமைய வேண்டும் என்பதில் மிகவும் அவதானமாக இருக்கின்றோம். நமது எதிர்பார்ப்புக்கள் மற்றவர்கள் பார்வையில் எவ்வாறு அமைகின்றன என்பதில் கூட அதிக நாட்டம் நாம் கொள்வதில்லை. அதாவது தனிப்பட்ட முறையில் ஒருவருக்குப் பாதிப்பில்லாத வகையில் எமது நன்மைக்காக எதையும் செய்யலாம் என எண்ணுகிறோம்.

சிறப்பாக வாழ்தல் என்பது இரு வகைப்பட்டது. முதலாவது இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் முறை. இரண்டாவது இருப்பதைவிட சிறப்பாக வாழ வேண்டும் என்பதாகும். இருப்பதைக் கொண்டு சிறப்பாக வாழ்வதற்குச் சிறந்த மனப்பக்குவம் வேண்டும். பொருத்தமான திட்டமிடல் வேண்டும். சிறந்த புரிந்துணர்வு கொண்டவர்களது ஒத்துழைப்பு வேண்டும்.

மறுபுறத்தில், இருப்பதை விடச் சிறப்பாக வாழவேண்டும் என்பதற்கு மாற்றமடைந்து கொண்டிருக்கும் சுய திருப்தியின் அளவு அடிப்படையாக அமைகின்றது. இந்தச் சுய திருப்தியானது ஒரு எல்லையை அடையுமாயின் அந்த எல்லையுடன் வாழ்வின் சிறப்பு அல்லது எதிர்பார்க்கப்படும் சிறந்த வாழ்க்கை என்பது நிர்ணயிக்கப்படும். ஆனால் தொடர்ச்சியாக மாற்றமடையும் அல்லது அதிகரித்துக் கொண்டிருக்கும் இந்தச் சுய திருப்தியானது ஒரு எல்லையை நிர்ணயிப்பதற்கு அனுமதியளிப்பதில்லை.

ஒவ்வொரு மனிதனும் சிறப்பாக வாழ வேண்டும் என்பதில் இரட்டைக் கருத்துக் கிடையாது. வாழ்வியல் முன்னேற்றம் என்பது தவிர்க்கப்பட முடியாத ஒன்று. ஆனால் இந்த முன்னேற்றமானது எவ்வாறு அமைய வேண்டும் என்பது தான் நாம் புரிந்து கொள்ள வேண்டிய ஒன்றாக அமைகின்றது. ஒரு மனிதனது உண்மையான முன்னேற்றம் என்பது நேர்மையான உழைப்பால் மட்டுமே நிர்ணயிக்கப்படுகின்றது. ஒருவரது உண்மையான உழைப்பின் வியர்வைக்குள்

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

நன்றியுடன் KG Master

வெற்றிக்கான வித்துகள் விதைக்கப்பட்டுத் தொடர்ச்சியான முன்னோக்கிய நகர்வின் மூலம் அந்த விதைகள் விருட்சங்களாக்கப் படுகின்றன. இங்கே விருட்சங்கள் என்பவை நிரந்தரமான பலன்களைத் தருபவையாக அமைகின்றன. அதுமட்டுமன்றி அந்த விருட்சத்தின் உரிமையாளராக ஒருவர் இருந்தாலும் அந்த விருட்சத்தால் இயற்கை யாகவே பயனடையக் கூடியவைகளுக்கும்

கொண்டிருக்க வேண்டும். அந்த எதிர்பார்ப்புக்கள் படிப்படியான வளர்ச்சிக்குரிய படிகட்டுக்களாக அமைக்கப்படல் வேண்டும். இவைகளைப் புறந்தள்ளி இலகுவானவைகளையும் இலவசமானவைகளையும் தேடுபவர்கள் தூண்டில் மீன்களாகி விடுகிறார்கள் என்பதுதான்.



> "சிறப்பாக வாழ்தல் என்பது இரு வகைப்பட்டது. முதலாவது இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் முறை. இரண்டாவது இருப்பதைவிட சிறப்பாக வாழ வேண்டும் என்பதாகும். இருப்பதைக் கொண்டு சிறப்பாக வாழ்வதற்குச் சிறந்த மனப்பக்குவம் வேண்டும். பொருத்தமான திட்டமிடல் வேண்டும். சிறந்த புரிந்துணர்வு கொண்டவர்களது ஒத்துழைப்பு வேண்டும்."

வாய்ப்புக்கள் இல்லாமலில்லை. உழைப்பால் உயர்பவர்களும் அவர்களது உயர்வால் மற்றவர்கள் உயர்வதற்கு வாய்ப்பளிப்பவர்களும் தூண்டில் மீன்களாகி விடும் மனிதர்களுக்கு கொடுக்கும் தகவல்கள் என்ன?. எந்தவொரு மனிதனுக்கும் உழைப்பில்லாமல் உயர்வு என்பது இல்லை. உழைப்பால் உயர்வதற்கு அந்த உழைப்பை வேண்டி நிற்கும் குறிக்கோள் அவசியமாகின்றது. அந்தக் குறிக்கோளானது நீதியானதும் நியாயமானதுமான எதிர்பார்ப்புக்களைக்

தூண்டில் மீன்கள் எமக்குக் கற்பிக்கும் பாடம் என்ன? இந்தப் பூவுலகில் வாழும் சகல உயிரினங்களுக்கும் இயற்கையானது தனது முழுமையான பங்களிப்பைச் செய்கின்றது. இயற்கையின் பங்களிப்பு உயிரினங்கள் ஒவ்வொன்றினதும் முயற்சியினால் பயன்படுத்தப்பட்டு வாழ்வு நகர்த்தப்படுகின்றது. ஒவ்வொரு உயிரினமும் தனது உணவை உழைப்பின் மூலமே பெற்றுக் கொள்கிறது. சிங்கத்தின் வாயில் முயல் ஒன்று தானாக வந்து விழுவதில்லை. தனது வயிற்றுப்பசியைத்

தீர்ப்பதற்கு அதற்கேற்ப உழைப்பை மேற்கொள்ளுகின்றது அந்தச் சிங்கம். இவ்வாறே ஒவ்வொரு உயிரினமும் உழைக்க வேண்டியுள்ளது. மீன்களுக்கும் இந்த விதி பொதுவானது தான். ஆனால் இந்த விதியில் இருந்து விலகுகின்ற மீன்களும், இந்த விதியைப் புரியாத மீன்களும் தூண்டில் மீன்களாகி விடுகின்றன.

இலகுவாகவும், இலவசமாகவும் கொடுக்கப்படும் உணவுக்காக இயற்கை விதியை மறந்து அல்லது மறைத்து அல்லது மறுத்து அனாவசியமாகத் தமது உயிரை மாய்த்துக் கொள்ளும் பரிதாப நிலைக்கு உட்படுபவைகள் தான் இந்தத் தூண்டில் மீன்கள். தூண்டிலில் இணைக்கப்படும் இந்த இலவச உணவு மீன்களுக்கு இரண்டு வகையில் அவற்றின் வாழ்வுக்கு முடிவு கட்டுகிறது. முதலாவது வகையானது உணவை விழுங்குவதால் ஊசியையும் விழுங்கி நீருக்கு வெளியே இழுக்கப்பட்டு உயிரை இழந்து விடுகின்றது. இன்னொருவகையானது தூண்டிலில் அகப்படாவிட்டாலும் மீனைக் கொன்று விடுகின்றது. ஆச்சரியமாக இருக்கின்றதா? சில மீன்கள் தங்களைப் புத்திசாலிகள் என நினைத்து மிகவும் சாதுரியமாக அந்த ஊசியில் இணைக்கப்பட்டிருக்கும் உணவை உண்டுவிடுகின்றன. தூண்டிலை வீசுபவர் தொடர்ச்சியாக உணவை இணைத்து விடுகிறார். மீன்களும் தொடர்ச்சியாகத் தமது சாதுரியத்தைத் தொடர்கின்றன. பாவம், இலகுவாகவும், இலவசமாகவும் கிடைத்ததை அளவுக்கதிகமாக உண்டு தாமாகவே இறந்து விடுகின்றன.

KG Master-kgmaster@rogers.com

வியர்வையை விலையாகக் கொடுக்காமல் வெற்றி இல்லை. வெற்றி கொள்ள வேண்டிய நிலையைப் பொறுத்தும் அதன் அளவைப் பொறுத்தும் வியர்வையின் அளவு அமைகின்றது. வியர்வையின் பெறுமதியை அளவிட முடியாதவர்கள் தான் இலகுவானதிலும் இலவசமானதிலும் அகப்பட்டுக் கொள்கிறார்கள். இயற்கையின் விதியையும், வியர்வையின் விலையையும் அறியாமல் மீன்கள் தூண்டில் மீன்களாக-லாம். ஆனால், வியர்வையை விலையாகக் கேட்காது நமக்குத் தரப்படும் இலகுவானவைகளும் இலவசமானவைகளும் மிகவும் ஆபத்தானவைகள் என்பதை நாம் மறந்து விடலாகாது. மறப்போமாயின் நாம் தூண்டில் மனிதர்களாகிவிடுவோம். தூண்டில் மீன்கள் இழப்பது அவற்றின் உயர்வான உயிரை தான். ஆனால் தூண்டில் மனிதர்கள் இழப்பதோ அவர்களது உயர்வான மனோபாவங்களையே. அடிப்படையில் இந்த இரண்டு இழப்புகளுக்கும் இடையில் வேறுபாடு கிடையாது.

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

மஹாராஜியின் உரைகள்



**On DVD**

இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

**On TV**

Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# ஆதனத்தின்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

a. மொத்தமாக கட்டப்பட்டு கொண்டு இருந்த கட்டிடத்தொகுதிகள் (Projects) - 154
b. மொத்த மனைகளின் எண்ணிக்கை 36,255

2009 இல் விற்கப்பட்ட புதிய அடுக்குமாடி (Brand new Condo. Units) மனைகளின் எண்ணிக்கை 14,792
2010 இல் விற்கலாம் என எதிர்வு கூறப்பட்ட அடுக்குமாடி மனைகள்: 19,000

2009 இல் உறுதிபெற்ற (Resale) அடுக்குமாடி மனைகளின் எண்ணிக்கை 16,147
2010 இல் விற்கலாம் என எதிர்பார்க்கும் உறுதிபெற்ற விற்கப்படும் அடுக்குமாடி மனைகளின் எண்ணிக்கை 18,000

2010 ஏப்பரலில் விற்கப்பட்ட வீடுகளின்
1. சராசரி விலை 437,600
2. ஆதனத்தின் எண்ணிக்கை 10,898



# கல்வி தேர்வுக்கு...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

கல்வி என்பது தேர்வுக்கு மட்டும் உரியதன்று. அது உண்மையில் வாழ்க்கைக்கு உரியது.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

என்றார் வள்ளுவர் பெருமான்.

வாழ்க்கைக்குரிய கல்விதான் பெற்றோர் சொற்கேட்டல், பெரியோரை மதித்தல், வையத்தில் வாழ்வாங்கு வாழ்தல். கல்வியால் நல்ல பண்பாளராகவும் உயர்ந்த ஒழுக்கசீலராகவும் நீங்கள் வளரவேண்டும். எதிர்காலத்தில் நீங்கள் சிறப்பாக வாழ இக்கல்லூரி உங்களுக்கு வழிகாட்டிக்கொண்டிருக்கின்றது. நீங்கள் அதனை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

உங்கள் வளர்ச்சி அருணோதயாவின் வளர்ச்சி. அருணோதயாவின் வளர்ச்சி உங்கள் வளர்ச்சி. அருணோதயா வளர்ந்து வருகின்றது. இன்னும் அது மேலோங்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன். எனக்கு எதில் நம்பிக்கை இல்லாது போனாலும் எனது வாழ்த்தில் நம்பிக்கை இருக்கிறது. அருணோதயா வளர்ந்து வடமாநிலத்தில் மட்டுமல்ல அகில இலங்கையிலேயே சிறந்த கல்லூரியாகத் திகழும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பது உறுதி.

வாழ்த்துக்கள்! வணக்கம்.

- தொடரும் ...

# இடம்பெயர்ந்த...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

நெற்செய்கையில் ஈடுபடுவதற்கான வசதிகளை அரசு இன்னும் செய்யவில்லை.

மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கு ஆறு மாதங்களுக்கு மாத்திரமே உலர் உணவு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் நான்கு ஐந்து மாதங்களுக்கு முன்னர் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் இதனால் அடுத்தடுத்த மாதங்களில் தமது உணவுத் தேவைக்கு என்ன செய்வது என்பதுபற்றி கவலையோடு சிந்திக்க நேர்ந்திருப்பதாகவும் செல்வம் அடைக்கல நாதன் கூறியுள்ளார்.

பதவி வகிக்கக் கூடிய வகையில் அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சியை நீடிக்கச் செய்வது போன்ற நோக்கங்களுக்கான முயற்சிகளாகவே இந்த அரசியலமைப்பு மாற்றத்திற்கான முயற்சி பலராலும் கருதப்படுகின்றது. இத்தகைய மாற்றங்கள் சிறுபான்மையினராகிய தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் எதிர்கால அரசியல் செயற்பாடுகளுக்கு ஆபத்தை விளைவிக்கின்ற ஒரு நடவடிக்கையாகவே ஆய்வாளர்களினாலும், சிறுபான்மை இன அரசியல் தலைவர்களினாலும் நோக்கப்படுகின்றது.

தேர்தல் முடிந்ததும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற



நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்று நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் அரசியலமைப்பை மாற்றி அமைக்கப் போவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தவாறு கூடிய பெரும்பான்மை பலம் அவருக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் எதிர்க்கட்சிகளில் உள்ள 6 உறுப்பினர்களை ஒருவாறு தமது தரப்பிற்குத் தாவச் செய்வதன் மூலம் ஓர் அறுதிப்பெரும்பான்மை பலத்தை நாடாளுமன்றத்தில் அடைய முடியும் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

அதேநேரத்தில் அரசியலமைப்பில் மாற்றம் செய்வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளில் ஏற்கனவே அரசாங்கம் இறங்கியிருக்கின்றது. நடைமுறையில் உள்ள விகிதாசாரத் தேர்தல் முறையை மாற்றியமைப்பதுடன், ஜனாதிபதி ஒருவர் இரண்டு பருவகாலத்திற்கு மேலாகவும்

நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அரசியல் தீர்வு தொடர்பில் பேச்சுக்கள் நடத்தப்படும் என ஜனாதிபதி ராஜபக்ச அறிவித்திருந்தார். வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பை மக்கள் வெற்றியடையச் செய்துள்ள போதிலும், ஏற்கனவே வாக்களித்திருந்ததன் படி தமிழ் மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டுள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் பேச்சுக்கள் நடத்துவதற்கான எந்தவித முன் முயற்சியையும் அரசாங்கமோ ஜனாதிபதியோ இன்னும் எடுக்கவில்லை என தமிழ்த்தேசிய கூட்டமைப்பு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

யுத்த வெற்றியின் முதலாம் ஆண்டு நிறைவை கோலாகலமாகக் கொண்டாடுகின்ற அரசாங்கத்தின் போக்கைப் பார்க்கும்போது, சிறுபான்மையின மக்களுக்கு நல்லதோர் எதிர்காலம் இருக்கின்றதா என்பது பெரிய கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.

# கியூபெக்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

அமெரிக்க ஜனாதிபதி முறையிலுள்ள சில குறைபாடுகளை எடுத்துக் கூறினார். கூட்டாட்சி முறையாய் இருப்பினும் இது ஒரு இராச்சியமெனக் கூறப்பட்டது. இச்சட்டம் கனேடிய இராச்சியத்துக்கு முன்னரில்லாத சுதந்திரத்தைக் கொடுத்த போதும் பூரண சுதந்திரம் கொடுக்கப்படவில்லை. வெளிநாட்டுக் கொள்கை பிரித்தானியாவின் கட்டுப்பாட்டிலிருந்தது. மேன்முறையீட்டு விண்ணப்பங்கள் பற்றித் தீர்மானிப்பதும் பிரித்தானிய ஆலோசனைச் சபையினதும் சட்டவரைஞர் சபையினதும் கட்டுப்பாட்டிலிருந்தது. அத்துடன் கனடா யாப்பு மாற்றங்கள் பிரித்தானியாவில் மட்டுமே செய்யப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் படிப்படியாக கனடா முழுச் சுதந்திரம் பெற்றது. வெஸ்ற் மினிஸ்ரர் சட்டத்தின்படி பிரித்தானிய பொதுநலவாய நாடுகளுள் ஒன்றாக 1931 இல் பெருமளவு சுதந்திரம் கனடாவுக்கு கிடைத்தது. கனேடிய மாகாணங்கள் யாவும் ஒரு யாப்பு முறைக்கு ஒத்துவராத காரணத்தாலேயே பூரண சுதந்திரம் வழங்கப்படவில்லை. 1982 ஆம் ஆண்டுக் கனடாச் சட்டப்படி இராணி எலிசபெத்தின் அங்கீகாரத்தின்படி ஆட்சி கனடாவுக்கு முழுதாக மாற்றப்பட்டது. கனடாவின் யாப்பு பல குறியிடப்பட்ட சட்டங்களையும் குறியிடப்படாத மரபு முறைகளையும் கொண்டுள்ளது. இச் சட்டம் 1867 ஐ, யாப்புச் சட்டம் 1867 என ஆவணமாக கருதப்படுகிறது.

**விளைவுகள்**

கனடாவின் முதலாவது நாடாளுமன்றப் பிரதிநிகளைத் தெரிவு செய்யும் தேர்தல் ஓகஸ்டிலும் செப்ரெம்பரிலும் நடத்தப்பட்டது. செனட்சபைக்கு 72 பிரதிநிதிகள் விதந்துரைக்கப்பட்டனர். ஒன்ராரியோவும் கியூபெக்கும் 24 என்ற அடிப்படையில் 48 பேரையும், நியூபிறவுண்ஸ்விக்கு 12 பேரையும், நோவாஸ்கோசியா 12 பேரையும் பிரேரித்தன.

நோவாஸ்கோசியாவில் 1867 இல் நடந்த மத்திய அரசு தேர்தலில் 19 இடங்களுக்கு 18 கூட்டாட்சிக்கு எதிரான பேர் வெற்றி பெற்றனர். மாகாணத்தேர்தலில் 38 இடங்களில் 36 எதிர்கட்சியினர் தெரிவு செய்யப்பட்டனர். கூட்டாட்சியிலிருந்து நோவாஸ்கோசியாவை விடுவிக்குமாறு வில்லியம் அன்னன்ட்டும் ஜோசப் ஹொவேயும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.



# கருந்துளைகள் -16

இரண்டு கருந்துளைகள் அருகருகே வந்து ஒன்றிணையும் போது அக்கருந்துளைகளைச் சூழவிருக்கும் விண்வெளியில் ஈர்ப்பலைகள் வேகமாகப் பரவும். பெரும் திணிவுக் கருந்துளைகளின் சேர்க்கையை இனம் காணுவதற்கும், இருண்ட கருந்துளைகளைப் பற்றியறிவதற்கும் இந்த ஈர்ப்பலைகளையே பெருதும் நம்பியிருக்கும் விஞ்ஞானிகள், இப்பொழுது ஈர்ப்பலைகளை இனம் காணக் கூடியதான கருவிகளை, தொழில்நுட்ப முறைகளைக் கண்டறிவதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். 'அதெல்லாம் சரி, அது என்ன ஈர்ப்பலை' என்கின்றீர்களா? மிக அழகான அறிவியற் பின்னணியைக் கொண்டுள்ள ஈர்ப்பலைகள் (Gravitational waves) பற்றிச் சுருக்கமாகவும் ஆனால் தெளிவாகவும் பார்ப்போம்.

## ஈர்ப்பலைகள்



ஈர்ப்பலைகளை விளங்கிக் கொள்வதற்கு இயற்கையில் நாம் காணும் சிறு நிகழ்வினைப் பார்ப்போம். அமைதியாக இருக்கும் நீர் தடாகம் ஒன்றின் நீர்ப்பரப்பின் மத்தியில் சிறு கல்லொன்றினைப் போட்டால் என்ன நிகழும் என்பது எங்களுக்குத் தெரியும். கல் விழுந்தவிடத்தினை மையமாகக் கொண்டு வட்டமாக நீரலைகள் வெளிநோக்கிச் செல்வதைக் காணலாம். போடப்படும் கல் பெரியதாகவோ அல்லது வேகமாகவோ போடப்பட்டால் உருவாகும் நீரலைகள் பெரியதாக இருக்கும். மேலும் ஆழம் குறைந்த கரைப் பகுதிக்கு அலைகள் வரும்போது ஒப்பீட்டளவில் ஆழம் கூடிய பகுதியில் இருந்த அலைகளை விடப் பெரிய தாக இருப்பதையும் நாம் காணலாம். இங்கு என்ன நிகழ்கின்றது என்பதனைப் பார்ப்போம். நீர்ப்பரப்பின் மேல் விழுகின்ற கல், நீர்ப்பரப்பில் விழும்போது அது கொண்டிருக்கும் சக்தியின் ஒருபகுதியை தடாகத்தின் நீருக்குக் கொடுக்கின்றது. கல் விழும்போது அதன் இயக்கத்தின் காரணமாக இயக்கசக்தியைப் பெற்றிருக்கும். அச்சக்தி யின் ஒரு பகுதியைத்தான் அது நீருக்குக் கொடுக்கின்றது அல்லது அச்சக்தியின் ஒருபகுதி தண்ணீரினால் எடுக்கப்படுகின்றது அச்சக்தியானது நீர்ப்பரப்பில் கடத்தப்பட, அங்கே நீரலைகள் அக்கல் விழுந்த இடத்தினை மையமாகக் கொண்டு நீரின் மேற்பரப்பின் எல்லா திசைகளிலும் பரவுகின்றன. கல்லினால் கொடுக்கப்படும் சக்தியின் அளவுக்கு ஒத்ததாக நீரலைகளின் வலிமை இருக்கும். அதாவது கல்லிலிருந்து நீரலைகள் சக்தியை இழுத்துச் செல்கின்றன எனலாம்.

இவ்வலைகள் குற்றலைகள் எனப்படும்.

**பேரண்டம் - 64**

அலை போகின்ற திசைக்குச் செங்குத்தாக தண்ணீரின் துணிக்கைகள் மேலும் கீழுமாக அசைவதாலேயே இவற்றைக் குற்றலைகள் (அதாவது குறுக்கலைகள் என்கின்றோம். உண்மையில் சக்தியானது ஊடகம் ஒன்றின் ஊடாகக் கடத்தப்படுகையில், அது செல்கின்ற பாதையைத்தான் அலை என்கின்றோம். இந்த அலைகள் நீரில்தான் இருக்கவேண்டும் என்றில்லை. காற்றில், பொருட்களில் என எங்கும் இருக்கலாம். ஒருவேளை வெற்றிடங்களில் கூட இருக்கலாம். காற்றின் ஊடாக வரும் அலைகள் ஒலியலைகள் ஆகும். இவை நீள்பக்க அலைகள் அல்லது நெட்டலைகள் எனப்படும். இங்கே அலைகளின் பண்புகளுக்கு அமைய, அவை பெறும் அல்லது அவற்றினால் கடத்தப்படும் சக்தியின் அளவுக்கு ஏற்ப பெரிய அலைகளாகவோ அல்லது சிறிய அலைகளாகவோ இருக்கும்.

சுனாமி அல்லது ஆழிப்பேரலை இந்த மாதிரி யான நிகழ்வே சுனாமியின் போதும் நிகழ்கின்றது. கடலின் அடியில் ஏற்படும் நிலநடுக்கத்தின் (பூகம்பம்) காரணமாக வெளிவிடப்படும் பெருமளவு சக்தியானது கடல் நீரினால் கடத்தப்படுகையிலேயே சுனாமி – ஆழிப்பேரலை – ஏற்படுகின்றது. கடத்தப்படும் சக்தியின் அளவுக்கு ஏற்றதாயும், அச்சக்தியை கடத்தும் நீரின் அளவுக்கு ஏற்றதாகவும் ஆழிப்பேரலையின் உயரம் இருக்கும். கடற்கரைகளில் நீரின் உயரம் குறைவாக இருப்பதனால், அவ்வலை கொண்டுள்ள சக்தியின் அளவிற்குத் தேவையான நீரின் உயரம் தேவையாக இருப்பதனால், சூழவுள்ள நீரையெல்லாம் இழுத்து பெரிய அலையை உண்டாக்கு கின்றது. அதனாலேயே ஆழிப்பேரலை வருவதன் முன்னராக கடற்கரையில் கடல்நீர் கடலின் உள்ளே செல்கின்றது. பெருமளவு சக்தியைக் காவிக் கொண்டுவரும் அப்பெரிய அலை, கரையில் மோத, நீர் கடத்திக் கொண்டு வந்த சக்தி முழுவதும் கரையில் சடுதியாக விடப்படுகின்றது. அதனாலேயே அந்த அலை வலிமை வாய்ந்ததாக இருந்து கரையை ஒட்டிய பகுதிகளில் பேரழிவை ஏற்படுத்துகின்றது. ஆனால் கடலின் ஆழமான பகுதிகளில் பெருமளவு நீர் இருப்பதாலும் கடல் ஆழமாக இருப்பதாலும் சக்தியைக் கடத்தும் அலைகள் பெரிய அழலில் அவ்விடங்களில் தெரிவதில்லை. சிலசமயங்களில், கரையில் பெரிய அழி வினை ஏற்படுத்தப் போகும் ஆழிப்பேரலை ஒன்று அவ்விடத்தால் போய் கொண்டிருக்கின்றது என்று கூடத் தெரியாது.

ஆழ்கடலில் கூடப் பேரலைகள் எழுவதுண்டு. நூறடி உயரத்திற்கும் மேலாக எழும் அலைகள் பெரிய கப்பல்களைக் கூடக் கவிழ்த்து பெரிய அழிவுகளைக் கடலின் மத்தில் ஏற்படுத்திவிடும். இவ்வலைகள் கரையை அண்மிக்கும் போது சுனாமி போன்று பெரிய அழிவுகளை ஏற்படுத்துவ தில்லை. ஏனெனில் அவ்வலைகள் பெற்ற சக்தியின் பெரும் பகுதியானது பெரிய அலை எழுச்சியினால் கடலினுள்ளேயே இல்லாமற் போய்விடும். ஆனாலும் கரையிலும் பாதிப்புக்கள் ஏற்படத்தான் செய்யும். இவ்வகை அலைகள் கடலின் நடுப்பகுதிகளில் ஏற்படுவதற்கான சரியான காரணங்கள் தெரியவில்லை. ஒருவேளை வேகமான நீரோட்டங்களின் குறுக்கீடுகளின் போது ஏற்படலாம் என்கின்றனர் சிலர். கடலின் அடியில் இருக்கும் எரிமலை சீறி எழுவதால் இப் பெரிய அலைகள் உருவாகுவதற்கும் சாத்தியம் உள்ளது எனவும் கூறுகின்றார்கள்.

சுனாமி போன்ற சக்தியைக் காவும் நிகழ்வினால் வான்வெளியில் ஏற்படும் நிகழ்வே ஈர்ப்பலைகள் ஆகும். அலைகள் பற்றிய இந்த அடிப்படை அறிவினை கொண்டு ஈர்ப்பலைகள் பற்றி அடுத்த தடவையில் பார்ப்போம்.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம்.




**- கனி -**
416.261.1348
kani1vimal@hotmail.com

# தென்னாபிரிக்கா...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

கொண்டிருந்தால், பவுலிங் செய்வதற்கு அவருக்கு தடை விதிக்கப்படவும் வாய்ப்பு உள்ளது. அதற்குப் பின் இவ்வகை குற்றத்துக்கான தண்டனை அதிகப்படுத்தப்பட்டது. அதிக அளவில் அபராதம் விதிக்கப்பட்டது. கடந்த 1994 ம் ஆண்டு தென் ஆப்ரிக்காவுக்கு எதிராக லார்ட்சில் நடந்த போட்டியில், இங்கிலாந்து கேப்டன் மைக்கேல் ஆதர்டன் பந்தை சேதப்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு ரூ. ஒரு லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. தற்போது "ரிவி", கேமரா உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் கிரிக்கெட்டில் அதிக பயன்பாட்டில் உள்ளன. இதனால் பந்தை சேதப்படுத்துவோர் எளிதில் கண்டுபிடிக்கப்பட்டு விடுகின்றனர்.

போட்டி தடை: பெரும்பாலும் அனைத்து அணிகளைச் சேர்ந்த வீரர்களும் பந்தை சேதப்படுத்திய குற்றத்துக்கு உள்ளாகி உள்ளனர். கிரிக்கெட்டில் பல்வேறு சாதனைகளை படைத்துள்ள இந்திய மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சினும், பந்தை சேதப்படுத்தி உள்ளார் என்றால் நம்ப முடிகிறதா? கடந்த 2001 ஆம் ஆண்டு தென் ஆப்ரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில், சச்சின் மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டு ஒரு போட்டி தடை விதிக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டு இவ்வகை குற்றத்துக்காக மற்றொரு இந்திய வீரர் ராகுல் டிராவிட்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.



# கனடாவில் சர்வதேச சாரதி அனுமதி பத்திரம் பெறுவது எப்படி? கனடாவுக்கு இப்பத்திரத்துடன் வருபவர்களுக்கு என்ன அனுகூலம்?

***INTERNATIONAL DRIVING PERMIT***

**'சர்வதேச சாரதி அனுமதி பத்திரம்'**

1949 ஆம் ஆண்டு ஜெனிவாவில் நடந்த ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஒப்பந்தப்படி (1949 Convention on Road Traffic) ஒரு நாட்டின் சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர் இன்னொரு நாட்டுக்கு விஜயம் செய்யும்போது அந்த நாட்டில் தற்காலிகமாக வாகனம் ஓட்டுவதற்காக கைச்சாத்திடப்பட்ட ஒரு ஒப்பந்தமாகும்.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஏராள-மான நாடுகள் தங்கள் தங்கள் நாட்டு சாரதி அனுமதி பத்திரங்கள் வைத்திருப்பவர்களுக்கு தங்கள் நாட்டு அதிகார வரம்பிற்குள் நின்று இச்சாரதி அனுமதி பத்திரங்களை வழங்கி வருகின்றனர்.

இது ஒரு பாஸ்போட் வடிவத்தில் இருக்கும். ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ரஷ்யா, சீனா, ஜேர்மனி, அராபிக், இத்தாலியன், போத்துக்கல், ஸ்கண்டினேஷியன் ஆகிய பத்துமொழிகளிலும் இப்பத்திரத்தின் தகவல்கள் மொழிபெயர்க்கப்பட்டு வழங்கப்பட்டதாக இருக்கும்.

கனடாவில் இச்சர்வதேச சாரதி அனுமதி பத்திரம் வழங்கும் அதிகாரத்தினை கனடிய மத்திய மாகாண அரசுகள் கனடா முழுவதும் இயங்கும்.

'கனடியன் ஆட்டோமோபைல் அசோசியேசன்' (Canadian Automobile Association) என்னும் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

சீ.ஏ.ஏ (C.A.A) என சுருக்கமாக அழைக்கும் இந்நிறுவனம் கனடாவில் வாகனம் ஓட்டுபவர்களுக்குரிய சகல சேவைகளையும் நூறு ஆண்டுகளுக்கு மேலாக வழங்கி வருகின்றது. வாகனம் ஓட்டுபவர் இந்நிறுவனத்தில் அங்கத்தவராக சேர்ந்தால் பல அனுகூலங்கள், சேவைகளை பெறும் வசதிகள் உண்டு.

ரொறொன்ரோவில் இந்நிறுவனத்தின் முகவரி இதுவாகும்.

**CAA - SOUTH CENTRAL ONTARIO**
**60, COMMERCE VALLEY DRIVE EAST**
**THORNHILL, ONTARIO L3T 7P9**
தொலைபேசி - 416.221.4300
1.800.268.3750
இணையதளம் - www.caasco.com

இங்கு நேரடியாக அழைத்து, தொடர்பு கொண்டு விண்ணப்படிவத்தினை எடுத்து நிரப்பி வழங்குவதன் மூலம் சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரத்தினை இங்கு பெறலாம்.

கனடாவில் இதனை விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள விரும்புவர் பின்வரும் தகைமைக்குள் இருத்தல் வேண்டும்.

- கனடாவில் வலிமையான சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும். விண்ணபிக்கும் போது இதன் பிரதிகள் சமர்ப்பித்தல் வேண்டும்.
- விண்ணப்பிப்பவர் பதினெட்டு வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- இரு பாஸ்போட் அளவு படங்கள் சமர்பித்தல் வேண்டும்.
- தற்போதுள்ள கட்டணமாக $15 டொலர் செலுத்துதல் வேண்டும்.

## கனடிய தகவல் தொடர் 125

> "சீ.ஏ.ஏ (C.A.A) என சுருக்கமாக அழைக்கும் இந்நிறுவனம் கனடாவில் வாகனம் ஓட்டுபவர்களுக்குரிய சகல சேவைகளையும் நூறு ஆண்டுகளுக்கு மேலாக வழங்கி வருகின்றது. வாகனம் ஓட்டுபவர் இந்நிறுவனத்தில் அங்கத்தவராக சேர்ந்தால் பல அனுகூலங்கள், சேவைகளை பெறும் வசதிகள் உண்டு."

இவற்றுடன் சேர்ந்து கனடியன் ஆட்டோமோபைல் அசோசியோசன் (CAA) நிறுவனத்தின் சர்வதேச சாரதி அனுமதி பத்திரத்திற்கு மனு செய்யும் விண்ணப்படிவம் (Canadian International Driving Permit Application Form) எடுத்து நிரப்பி கொடுத்தல் வேண்டும்.

இவ்விண்ணப்படிவத்தில் பின்வரும் தகவல்கள் வழங்கப்படல் வேண்டும்.

- விண்ணப்பிப்பவரின் பெயர்
- பிறந்த இடம், பிறந்த திகதி, கனடாவில் முகவரி.
- கனடாவிலுள்ள சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பான விபரங்கள்.
- கனடாவினை விட்டு புறப்படும் திகதி.
- எந்த நாட்டில் வாகனம் செலுத்தப் போவது?

இப்படி சில தகவல்கள் வழங்க வேண்டும்.

சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரத்துக்குரிய தகவல்களை இந்நிறுவனத்தின் பின்வரும் இணைய தளத்தினுள் பார்வையிட்டு பெற்று கொள்ளலாம். அவ் இணையதளத்தின் முகவரி பின்வருமாறு.

www.caa.caltravel/travel-permits-application-e.cfm

விண்ணப்படிவத்தினை பின்வரும் இணைய தளத்தில் பதிவு செய்து பெற்றுகொள்ளலாம். www.caa.ca/travel/travel-permits-application-e.shtml.

விண்ணப்பம் தபால் மூலம் அனுப்பினால் மூன்று கிழமைகளில் சர்வதேசசாரதி அனுமதி பத்திரத்தினை தபாலில் பெற்றுக்கொள்ளலாம். நேரடியாக அலுவலகத்திற்கு தேவையான தகவல்களுடன் சென்றால் உடனடியாகவே பெற்றுக்கொள்ளலாம்.

**சில நிபந்தனைகள்** - (இதே நிபந்தனையே சகல நாடுகளிலும் இருக்கலாம்)

- கனடாவில் வைத்திருக்கும் சாரதி அனுமதி பத்திரம் வாகனமோட்ட கற்றுக்கொள்ளும் சாரதி அனுமதி பத்திரமாக (G(1) License) இருந்தால் அதனை வைத்து சர்வதேச சாரதி அனுமதி பத்திரம் பெறமுடியாது.
- சர்வதேச சாரதி அனுமதி பத்திரம் கனடா உட்பட பல நாடுகளில் ஒரு வருடங்களுக்கு மட்டுமே அனேகமாக வலிமையுடையதாக வழங்கப்படும். விரும்பினால் இப்பத்திரம் வழங்கப்பட்ட நாட்டில் மட்டும் தொடர்ந்து புதுப்பித்து கொள்ளலாம்.
- கனடாவில் வழங்கப்படும் சாரதி அனுமதி பத்திரம் காலாவதியானால் (Expiry) கனடாவில் இருந்து பெறப்பட்ட சர்வதேச சாரதி அனுமதிபத்திரம் பின்னர் செல்லுபடியாகாது.
- கனடாவில் சாரதி அனுமதி பத்திரம் தடை-செய்யப்பட்டவர் இதற்கு விண்ணபிக்க முடியாது.
- கனடாவில் வழங்கப்பட்ட சர்வதேசசாரதி அனுமதி பத்திரத்தினை வைத்து கனடாவில் வாகனம் செலுத்த முடியாது.
- இச்சர்வதேச சாரதி அனுமதி பத்திரம் என்பது ஒருவர் விஜயம் செய்யும் நாடுகளில் தற்காலிகமாக வாகனம் செலுத்துவதற்கு என அனுமதிக்கும் பத்திரம் ஆகும்.

நிரந்தரமாக அந்த நாட்டில் வாகனம் செலுத்த விரும்பினால் அந்த நாட்டுக்குரிய சாரதி அனுமதி பத்திரத்தினை அந்தந்த நாட்டுக்குரிய ஒழுங்கு விதிகளுடன் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். கனடாவுக்கு சர்வதேச சாரதி அனுமதி பத்திரத்துடன் வருபவர்கள் அதன் காலாவதியாகும் திகதி வரை வாகனம் வாடகைக்கு எடுத்து செலுத்தலாம்.

வாகனங்களை வாடகைக்கு வழங்கும் கனடாவின் சகல கம்பனிகளும் சர்வதேச அனுமதி பத்திரம் வைத்திருந்தவுடன் வாடகைக்கு வாகனம் வழங்க தயாராக இருப்பார்கள் என சொல்லமுடியாது.

அதுபோல சொந்தமாக இச்சர்வதேசசாரதி அனுமதி பத்திரத்துடன் மட்டும் வாகனம் வாங்கி செலுத்த விரும்பினால் சகல வாகன காப்புறுதி கம்பனிகளும் காப்புறுதி வழங்குவார்கள் எனவும் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் வலிமையான கனடாவின் சாரதி அனிமதிப்பத்திரம் இருந்தால் மட்டுமே இது சாத்தியப்படும்.

இவ்வாறு தொடர்ந்து கனடாவில் இருந்து வாகனம் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டால் அவர்கள் இருக்கும் மாகாணத்தில் காலதாமதம் இல்லாது வீதி பரீட்சைக்கு தோற்றும் ஒரு வசதியினை மட்டும் ஏனைய நாட்டு சாரதி அனுமதி பத்திரங்கள் வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

பின்வரும் நாடுகளின் சாரதி அனுமதி பத்திரங்கள் வைத்திருப்பவர்கள் மட்டும், தொடர்ந்து கனடாவில் குறிப்பாக ஒன்ராரியோ மாகாணத்தில் வசிக்கும் நோக்கம் இருந்தால் எதுவித எழுத்துப்பரீட்சை, வீதிப்பரீட்சை என இல்லாது தங்கள் நாட்டு சாரதி அனுமதி பத்திரங்களை இங்கு கையளித்து ஒன்ராரியோ மாகாண சாரதி அனுமதி பத்திரமாக மாற்றிக்கொள்ளலாம்.

அந்த நாடுகள் பின்வருமாறு

1. அவுஸ்திரேலியா (Australia)
2. ஆஸ்திரியா (Austria)
3. பெல்ஜியம் (Belgium)
4. பிரான்ஸ் (France)
5. இங்கிலாந்து (Great Britain)
6. ஜேர்மனி (Germany)
7. ஜப்பான் (Japan)
8. கொரியா (Korea)
9. சுவிற்சலாந்து (Switzerland)
10. ஐஸில் ஒவ் மான் (Isle of Man)
11. அமெரிக்கா (U.S.A)
12. கனடாவின் ஏனைய மாகாணங்கள்

மேற்குறிப்பிட்ட நாடுகளில் இரு வருடங்களுக்கு உட்பட்ட அனுபவமுள்ள சாரதி பத்திரமாக இருந்தால் G(2) சாரதி அனுமதி பத்திரமாகவும் இரு வருடங்களுக்கு மேலான அனுபவமுள்ள பத்திரமாக இருந்தால் G சாரதி அனுமதி பத்திரமாகவும் வழங்கப்படும்.

இந்நாடுகள் தவிர ஏனைய நாடுகளின் சாரதி அனுமதிப்பத்திரங்கள் சில குறிப்பிட்ட காலத்திற்கு மேலாக வைத்திருப்பவர்கள் காலதாமதமின்றி வீதி பரீட்சைகளுக்கு தோற்றலாமே தவிர வேறு எந்த அனுகூலங்களையும் பெறமுடியாது. இந்த நாடுகளிலிருந்து சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் பெற்று வந்திருந்தாலும் இங்கு சாதகமாக அமைய மாட்டாது.



**சிவ. பஞ்சலிங்கம் B.Com.,**
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# மூட்டு வலிகளை விரட்டுவோம்

40 வயதினை தாண்டியவர்கள் மூட்டு வலியினால் அவதியுறுவது, மூட்டுவலி பற்றி ஒருவருக்கொருவர் கருத்துக்கள் பரிமாறிக்கொள்வது இன்று சகஜமாகிவிட்டது. நாம் வாழும் கனடா நாட்டில் பரவியிருக்கும் பலவிதமான நோய்களினால் மூட்டுவலியானது முதலிடம் பெறுகிறது. இங்கு மூட்டு வலிக்கு மருந்தாக உடற்பயிற்சி, உடம்புக்குத் தேவையான சக்திகளை சரியான அளவுக்குத் தரக்கூடிய சரிவிகித உணவினை மட்டும் சிபாரிசு செய்கின்றனர்.

நரம்பு பலயீனம், தசை பலயீனம், இரத்த ஓட்டப்பாதிப்பு, எலும்புகளின் உறுதி குறைதல், உடல் இயக்கக்கோளாறுகள் காரணமாக எலும்புகளின் தேய்மானம் இவற்றின் ஒட்டு மொத்த பாதிப்பாக மூட்டுவலிகள் உருவாகின்றது என்பதுதான் யோகா மருத்துவத்தின் கருத்து. எனவே மூட்டு வலியை விரட்ட உதவும் சில மருத்துவ முறைகளில் மிக இலகுவானவற்றை இங்கு பகிர்ந்து கொள்கிறோம்.



(1) உணவில் புளி சேர்ப்பதை தவிர்த்துக்கொண்டு எலுமிச்சைச்சாறு, தக்காளி அதிகம் சேர்க்கவேண்டும்.

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய


(2) அவரை, முட்டைக்கோசு, கரணைக்கிழங்கு போன்றவைகளை உணவில் சேர்க்க மூட்டுவலி குறையும்.

(3) உப்பு, இனிப்புக்களவாக எலுமிச்சை சாற்றினை தண்ணீரில் கலந்து அருந்த இரத்த ஓட்டம் சீராகி நரம்புகள் வலுவாகி மூட்டுவலி குறையும்.

(4) முட்டுவலி உள்ளவர்கள் வாழைத்தண்டுச் சாற்றினை வாரம் ஒருமுறை அருந்தினாலே வலியின் தாக்கம் குறையும்.

(5) வெங்காயச்சாறுடன் கடுகு சிறிது சேர்த்து விழுதாக அரைத்து மூட்டுவலியுள்ள இடத்தில் பூசிவர மூட்டுவலி குணமாகும்.

(6) கீரைவகைகளை உணவில் சேர்த்துவருதல் நன்மை தரும்.



உட்கட்டாசனம்
UTTKATTASANAM

(7) மிளகு, சீரகம், திட்பிலி என்பனவற்றை சமசீராக பொடியாக்கி வாரம் ஒரு தடவை உணவில் சேர்த்து வர மூட்டு வலி தீரும்.

(8) இஞ்சிச் சாற்றினை மாதம் ஒரு முறை வெறும் வயிற்றில் அருந்த வலி கட்டுப்படும் என்கிறது சித்த மருத்துவம்.

(9) எதற்கும் பொடி கலந்து சோறு உண்ண மூட்டுவலி குறையும்.

(10) அன்னாசிப்பழம், பப்பாளிப்பழம் என்பவற்றுக்கு உடல் உள் உறுப்புக்களைச் சீராக்கும் சக்தி இருப்பதால் அவற்றை உணவில் அடிக்கடி சேர்த்துவர மூட்டுவலி குணமாகும்.

(11) அரிசியும் கொள்ளும் கலந்து கஞ்சி செய்து வாரம் ஒரு முறை உண்டால் வலி குறையும்.

(12) அகத்திக்கீரை பறங்கிக்காய், பெருங்காயம், பூசனி விதை என்பவற்றிற்கு மூட்டுவலியை முறியடிக்கும் சக்தி உண்டு.

எனவே நமது உணவுப்பழக்கத்தை மாற்றும் போது நரம்பு, எலும்பு, தசை போன்றவற்றைப் பலம்பெறச் செய்வதன் மூலம் மூட்டு வலியை முற்றாக விரட்டலாம்.



### யோகாசன சிகிச்சையும் நிரந்தர தீர்வும்.


மூட்டுவலி அல்லது ஆர்தரைடிஸ் என்னும் தீல்வாத நோய்கள் சாகும்வரை நம்மை அணுகவிடாது காப்பதற்கு ஒரே வழி யோகாசனம்தான். இளமையிலிருந்தே செய்து வந்தால் இதுமட்டுமன்றி எந்த நோயும் அணுகாது. யோகாசனக் கலைகளினால் குறிப்பிட்ட சில ஆசனங்கள் உடலிலுள்ள 44 மூட்டுக்களையும் இளகச்செய்து அவற்றைச் செம்மைப்படுத்தி வலுவடையச் செய்கின்றன.

(1) உட்கட்டாசனம்
(2) கருடாசனம்
(3) பவனமுத்தாசனம்
(4) பாதஹஸ்தாசனம்
(5) விபரீதகரனி
(6) தனுராசனம்
(7) வஜ்ராசனம்
(8) பத்மாசனம்

இவற்றை ஒரு யோகாசன நிபுணரின் உதவியுடன் பயின்று தினமும் 15 நிமிடங்களாவது பழகி வந்தால் இரண்டு மூன்று வாரங்களிலேயே குறிப்பிட்ட பலன்களை அடையலாம்.

### மூலிகை மருத்துவம்.

இயற்கை மூலிகைகளின் உபயோகாத்தால் நாட்பட்ட மூட்டு வலிகளையும் குணமாக்கலாம். ஆனால் அவற்றை இங்கு பெறுவது கடினம். அவை பற்றி அறிய என்னுடன் தொடர்பு கொள்ளவும்.




விபரீதகரணி
VEEBAREETHA KARANI



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm



YOGA - MEDITATION CLASSLESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்





மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# தூறல்

## வானரன்

# Atom Egoyan

உலகின் தலை சிறந்த திரைப்படங்கள் தயாரிக்கும் நாடுகளுள் கனடாவும் ஒன்று. ஹொலிவூட்டிற்கு அருகில் இருப்பதனால் அதன் நிழலுக்குள் கனடிய திரைப்படவுலகம் மறைந்து விடுகின்றது. ரைட்டானிக், அவற்றார் இயக்குனர் ஜேம்ஸ் கமரோனும் ஒரு கனடியர். இவரது படங்களும் ஹொலிவூட் பாதையில் பயணிப்பதனால் கனடிய திரைப்பட படைப்பாளிகளது பெயர்கள் நிழலிலேயே உள்ளன. சர்வதேச அரங்கில் தீபா மேத்தா போன்ற வர்த்தக இயக்குனர்களுக்கு இருக்கும் பிரபல்யம் விமர்சகரீதியாக வரவேற்பு பெற்ற படைப்பாளிகளுக்கு இருப்பதில்லை. அவ்வாறு விமர்சகரீதியாக பலத்த வரவேற்பை பெற்ற கனடிய திரைப்பட படைப்பாளிகளை அறிமுகப் படுத்த



வேண்டிய தேவை ஒன்றுள்ளது. அவ்வப் போது இத்தேவையை பூர்த்தி செய்யும் நோக்கு டன் எடுத்து வைக்கும் முதல் காலடியே இது.

கனடிய திரைப்படங்கள் என்றவுடன் பல விமர்சகர்கள் மத்தியில் உடன் நினைவுக்கு வரும் பெயர் Atom Egoyan. இவரது பெயரின் முதல் பகுதி அணு குண்டை மையமாகக் கொண்டது. எகிப்தின் முதலாவது அணு குண்டு பரிசோதனை முயற்சியின் நினைவாக சூட்டப்பட்டது. ஆம் இவரது பெற்றோர் எகிப்திய-ஆமேனியர். எகிப்தில் இருந்து பிரிட்டிஸ் கொலம்பியாவிற்கு குடிபெயர்ந்தது இவர்களது குடும்பம். பின்னர் ரொரன்ரோ பல்கலைக் கழகத்தில் தனது பட்டப்படிப்பை மேற்கொண்டார். படிக்கும் காலங்களில் Samuel Beckett, Harold Pinter போன்றோரது படைப்புக்களில் ஆர்வமேற்பட்டு தனது தேடலை வளர்த்துக் கொண்டார்.

இவர் தனது முதலாவது படமான Next of Kin 1984ல் வெளிவந்தது. இப்படம் ரொரன்ரோ சர்வதேச திரைப்படவிழாவில் திரையிடப்பட்டது. இவரது அடுத்த படமான Family Viewing என்ற படம் ரொரன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த கனடிய திரைப்படமாக தெரிவு செய்யப்பட்டது. இவரது மூன்றாவது படம் Speaking Parts Director's Fortnight என்ற பிரவில் கான்ஸ் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. இதே பிரிவில் பிரான்ஸைச் சேர்ந்த தமிழர் பிரதீபனின் குறும்படம் இவ் ஆண்டு திரையிடப்படுகின்றது. இவரது மற்றொரு திரைப்படமான EXOTICA கான்ஸின் பிரதான போட்டியில் 1994ல் போட்டியிட தெரிவானது. பத்து வருடங்களின் பின்னர் ஒரு கனடிய படம் இப் பிரிவில் தெரிவானது. இப் படம் கான்ஸின் சர்வதேச நடுவர்களின் விருதைப் பெற்றது. The Sweet Hereafter படம் ஒஸ்காரில் சிறந்த இயக்குனருக்கும், திரைக் கதைக்குமான இறுதிப் போட்டிக்கு தெரிவானது. 1996ல் கான்ஸின் நடுவர் குழுவில் ஒருவராக அங்கம் வகித்தார். இவ் வருடம் கான்ஸின் குறும்பட பிரிவின் தலைமை நடுவராக கடமையாற்று கின்றார். இசை மீது அதிக நாட்டம் கொண்ட இவர் மூன்று ஒப்பிரா நிகழ்ச்சிகளையும் இயக்கியுள்ளார்.

இவரது படங்களில் Ararat ஆர்மேனியரது படுகொலைகளை மையமாகக் கொண்டது. இக் கட்டுரையில் இவரது Exotica படம் பற்றி விரிவாக பார்ப்போம். இப் படத்தின் பெயர் வயது வந்தவர்களுக்கு மட்டும் என்ற குறிப்பெதுவுமின்றியே குறிக்கும் பெயர். வாக்களிக்கும் வயதடைந்தவர்களே பார்ப்பதற்கு கனடிய மத்திய அரசு அனுமதியளித்துள்ளது.

பிரான்ஸிஸ் ஓர் அரச நிதிக் கூட்டுத்தாபன பரிசோதகர் (றிவினியு கனடா ஓடிட்டர்). இவர் தனது மாலைப் பொழுதுகளை எக்ஸ்ஓரிக்கா கிளப்பில் கழிப்பதே பொழுது போக்கு. கிரிஸ்ரீனா என்ற இளம் பெண்ணையே தனது மேசையில் நடனமாட இவர் அழைப்பார். கிரிஸ்ரீனாவின் முன்னால் காதலன் எரிக். இந்த கிளப்பின் நடனமாடும் பெண்களின் கட்டுப்பாட்டாளர் (platter spinner). இந்த கிளப்பின் முதலாளி சோயி என்ற பெண். சோயி ஒப்பந்த அடிப்படையில் தாயாகியுள்ளார். இவர் தனது தாய்மைக்காக எரிக்கை ஒப்பந்த அடிப்படையில் பயன்படுத்தியுள்ளார். கிரிஸ்ரீனா பாடசாலை உடுப்புடன் பிரான்ஸிஸ்க்கு நடனமாடுவார். இது எரிக்கு பொறாமையை ஏற்படுத்துகின்றது. தோமஸ் ஒரு பாலியலாளர். இவர் ஒரு வீட்டு வளர்ப்பு பிராணிகள் வளர்க்கும் கடை ஒன்றை நடத்தி வருகின்றார். இதனை பரிசோதனை செய்வதற்காக தோமஸ் வருகின்றார். முதல் நாள் தோமஸின் கணக்கு வழக்குகளை ஆய்வு செய்யும் பிரான்ஸிஸ் தோமஸின் மேசையினுள் ஒரு துவக்கு இருப்பதை காண்கின்றார். அன்றைய நாள் முடிவில் சாதாரணமாக கூறுவது போல் இத் துவக்கைப் பற்றி கூறுகின்றார். தோமஸ் அது தனது தந்தையினது என்றும் பாதுகாப்பிற்காக வைத்திருக்கின்றார் எனவும் கூறுகின்றார். ஏரிக் கூறியது போல் பிரான்ஸிஸ் கிரிஸ்ரீனாவை தொட, எரிக் பிரான்ஸிசை கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுகின்றார்.

எரிக் பிரான்ஸிஸ் மலசல கூடத்தினுள் அமர்ந்திருக்கும் பொழுது பிரான்ஸிசை கிரிஸ்ரீனாவை தொடுமாறு தூண்டிவிடுகின்றான். சாதாரணமாக அங்கு வருபவன் போல் தனது குரலை காட்டிக் கொள்ளும் எரிக் உள்ளே இருக்கும் பிரான்ஸிசுக்கு தனது முகத்தை தெரியப்படுத்தவில்லை. பிரான்ஸிஸின் வாழ்க்கை சற்று விசித்திரமானது. பிரான்ஸின் நண்பனின் இளம் மகள் ஒவ்வொரு நாளும் பிரான்ஸின் வீட்டிற்கு வந்து சில மணி நேரம் தங்குவாள். அப்பொழுது அங்கு பிரான்ஸிஸ் இருக்கமாட்டார். வீட்டில் எவரும் இருக்க மாட்டார்கள். குழந்தைகளை பாப்பதற்கு என ஒவ்வொரு நாளும் இப் பெண்ணிற்கு காசு வழங்குவார்.

தோமஸின் கடையில் வருடந்தோறும் 200000 டொலர்கள் கள்ளக் கடத்தல் பொருட்கள் பதுக்கப்படுகின்றன என்பதை உறுதி செய்யவே நான் இங்கு வந்துள்ளேன் என பிரான்ஸிஸ் கூறி நீ உதவி செய்தால் நான் உதவி செய்வேன் எனக் கூறுகின்றார். மறுநாள் தோமஸ் விடுதிக்கு செல்கின்றான். கிறிஸ்ரீனா வுடன் கதைக்கின்றார். இவர்கள் கதைப்பதை பிரான்ஸிஸ் கேட்டுக் கொண்டிருக்கின்றார். எரிக் தோமசையும் கிறிஸ்ரீனாவை தொடுமாறு தூண்டுகின்றான். பிரான்ஸிஸ் சோயிடம் தன்னை விடுதிக்குள் செல்ல அனுமதி கேட்கின்றார். சோயி மறுத்து விடுகின்றார். விடுதி சட்ட திட்டங்களின் படி எந்த ஒரு பெண்களையும் தொட அனுமதியில்லை எனவே அனுமதிக்க முடியாது எனக் கூறுகின்றார். கிரிஸ்ரீனாவிற்கு எரிக் திட்டங்கள் தெரிய எரிக்கை திட்டுகின்றாள். இதனையறிந்த சோயி எரிக்கை வேலையை விட்டு நீக்குகின்றார். பிரான்ஸிஸ் தோமஸ் மூலம் எரிக்கை கொல்ல முயற்சிக்கின்றார். தோமஸ் கிரிஸ்ரீனாவை தொட, தோமசை எரிக் வெளியே பிடித்து தள்ள எரிக்கை சுடுவதே பிரான்ஸிஸின் திட்டம். தோமஸ் கிரிஸ்ரீனாவை தொட, கிரிஸ்ரீனா தோமஸின் கைகளை தள்ளி விட்டு தொடர்ந்து நடனமாடுகின்றாள். வெளியே காத்து நிற்கும் பிரான்ஸிசை எரிக் சந்தித்து உனது மகளின் உடலை நாங்கள் தான் முதலில் கண்டோம் எனக் கூறுகின்றான். இருவரும் கை குலுக்குகின்றனர்.



இவரது படங்கள்

| Year | Film | Notes |
|---|---|---|
| 1984 | Next of Kin | First met Arsinée Khanjian |
| 1987 | Family Viewing | |
| 1989 | Speaking Parts | Best Motion Picture nomination, including five others, at the 1989 Genie Awards |
| 1991 | The Adjuster | |
| 1993 | Calendar | |
| 1994 | Exotica | Won the FIPRESCI Prize at Cannes[5] |
| 1997 | The Sweet Hereafter | Won three awards at Cannes[6] |
| 1999 | Felicia's Journey | Palme d'Or nomination at Cannes[7] |
| 2002 | Ararat | |
| 2005 | Where the Truth Lies | Palme d'Or nomination at Cannes[8] |
| 2008 | Adoration | |
| 2009 | Chloe | |

பிரான்ஸின் மகள் சில காலங்களின் முன் கொல்லப்படுகின்றார். பொலிஸ் பிரான்ஸிசை கைது செய்கின்றது. பொலிஸ் கூறும் காரணம் பிரான்ஸிசின் தம்பிக்கும், பிரான்ஸின் மனைவிக்கும் பல வருடங்கள் தொடர்பிருந்த தாகவும், பிரான்ஸிக்கு, தனது மகள் தனது தான் என ஐயம் இருந்துள்ளது என்பதே. சில காலங்களின் பின்னர் கொலையாளியை கண்டு பிடித்தவுடன் பிரான்ஸிஸ் விடுதலை செய்யப்படுகின்றார். இதன் பின்னர் ஒரு கார் விபத்தில் பிரான்ஸின் மனைவி இறந்து விடுகின்றார்.

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

எட்டாவது
சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா
June 12, 2010
Scarborough Civic Ctr.
11a.m – 6p.m
இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், பிரான்ஸ், இங்கிலாந்து, சுவீடன், நோர்வே, அமெரிக்கா, கனடா
INDEPENDENT ART FILM SOCIETY
416-450-6833, 416-804-3433, www.iafstamil.com

# தூறல்

காரினுள் இருந்த பிரான்ஸின் சகோதரன் இப்பொழுதும் உயிருடன் உள்ளார். கிறிஸ்ரீனா பிரான்ஸின் மகளின் வகுப்புத் தோழி. பிரான்ஸிஸ் யார்? தனது மகளின் நினைவுகளுடன் வாழும் ஒரு ஜடமா? ஒருவரும் அற்ற வீட்டில் ஒவ்வொரு நாளும் தனது மகளை ஒத்த வயதுடைய பெண் கழிப்பதற்கு பணம் கொடுக்கின்றார். மகளின் வெற்றிடத்தை நிரப்பிடவா? மகளின் தோழி கிறிஸ்ரீனாவுடன் ஒவ்வொரு மாலையையும் கழிக்கின்றார். இருவரும் கதைப்பதில்லை. பார்வைகளின் சந்திப்புடன் முடிந்துவிடும் அன்றைய மாலை. கிறிஸ்ரீனாவிற்கு பாதுகாப்பளிக்கின்றரா? பிரான்ஸிஸ். தனது மகளின் நினைவுகளை வேறு ஒரு பெண் மூலம் தேட முயற்சிக்கின்றாரா? சாமுவேல் பெக்கட்டின் Krapp's Last Tape போல் பிரான்ஸிஸ் காணப்படுகின்றார்.

இயக்குனர் ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளது முக்கியமானது To me, the obvious definition of the exotic is something outside our immediate experience..But ultimately, what really drives the film is the exoticism that we feel towards our own experience, that point at which our own memory, and our own relationship to the things that are closest to us become exotic. அடுத்ததாக இப் படத்தில் பிரான்ஸிஸ் ஒரு கணக்கு பரிசோதகர். இயக்குனரின் வாழ்வில் ஏற்பட்ட அனுபவமே இப் பாத்திரம். அவரது மொழியில் அவர் கூறியது CF: I thought that as soon as someone comes to audit you...

AE: Yes. There's something really pedantic about it. No one can think of an audit without some sort of terror, because of what power that they have to reveal and discover things that you might not have even known you'd done wrong. When I was audited [before writing this film], at first I thought, I have nothing to hide, and I made my books open to this person. But the moment that you get that first question about this lunch that you had two years ago, and as you go over the details of this lunch that you've long forgotten, this person looks at you very blankly, and he nods. And you think, is he onto something? Are they onto something that I don't even know about myself? It was really irresistable, to have this man going to the club, so we were auditing him, taking stock of his private life, and of course during the day he's doing that to someone else.






இப்படத்தில் பிரான்ஸிஸ் ஒவ்வொரு பெண்ணிடமும் பணம் கொடுப்பார். இறுதியில் தோமசுடன் வியாபாரமும் பேசுவார். இயக்குனரின் நோக்கமும் அதுவே. பணமே பல விடயங்களை தீர்மானிக்கின்றது. ஒப்பந்த அடிப்படையில் பிள்ளை பெறுதல். தாயாக, தந்தையாக பணத்துக்காக இயங்குதல். விந்து, முட்டை போன்றனவும் இன்று பணத்தால் பெறலாம். இந்த விடுதிக்குள் வருவோரும் வேலை செய்வோரும் ஏதோ ஒன்றை இழந்து ஒன்றைத் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். பார்வையாளர்கள் கூட இந்த தேடலுக்காகத் தான் திரையரங்கு வருகின்றார்கள். இந்த அனுபவத்தை படம் பார்க்கும் ஒவ்வொருவரும் உணரக் கூடியதாகவுள்ளது. மனித உள்ளத்தின் இழப்புக்களின் மீதான ஒரு வலியை உணரக் கூடியதாகவுள்ளது. Andrei Tarkovsky's description of film as "sculpting in time," Atom Egoyan இப் படத்தை செதுக்கியுள்ளார். இவருது மற்றைய படங்களை பிறிதொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம். இவரது அனைத்து படங்களும் கனடிய நூலகங்களில் இலவசமாக பெறலாம்.







# சக்கர ஊர்திப் பயணங்கள் - 4

கதவு தட்டப்பட்டது. காத்திருந்தவன் திறந்தேன். வந்தவர் 'வணக்கம்' என்றார். அட்சரசுத்தமான உச்சரிப்பு. நம் ஊராராக இருக்க வேண்டும் அல்லது தமிழகத்தவராக இருக்கலாம் என எண்ணினேன். தெரிய வில்லை.. ஏதோ நெருக்கமான ஒருவரைக் கண்ட உணர்வு. 'வணக்கம் தம்பி', என்றேன் 'இல்லை இல்லை நான் புலி இல்லை, பஞ்சாபி' என்றார் ஆங்கிலத்தில். எனக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது. காளமேகப் புலவர் கேட்ட மாதிரி " முகத்தில் முறுக்குடன் வீற்றிருக்கும் மீசை எங்கே? தாடிதான் எங்கே?, தலைப்பாகை எங்கே, கையின்லே கம்பியாலான காப்புதான் எங்கே? நீர் பஞ்சாபி எனறுரைக்கக் கால்" என்றேன் 'ஓ அதுவா? 'நான் பஞ்சாப்பி, ஆனால் இந்திரா காந்தி கொலையுடன் அந்த வேசம் எல்லாம் களைந்து விட்டேன். அநியாயமாகக் கொலைகள் செய்வதை நான் விரும்புவ தில்லை என்றார். அட அங்கேயும் இப்படி ஒருத்தர்!! ஊர்தியில ஏறிக் கொண்டேன். எனது வேண்டுகோள் எப்பொழுதுமே முன் ஆசனம். முழங்கால் நன்றாக மடிப்பது கொஞ்சம் கஷ்டம். ஆகவே அந்த வேண்டுகோள். ஆசனம் கிடைத்தது.

என்னை நினைவில்லையா? சென்ற வருடம் கோடை காலத்தில் உன்னை ஒரு முறை ஏற்றிச் சென்றுள்ளேன் என்றார். போன வருஷத்திலும் பார்க்க இந்த வருஷம் ஒரு வயது கூடிவிட்டதல்லவா அப்போ இன்னும் ஒரு பத்த வீதமாவது ஞாபக மறதி கூடியிருக்கும் தானே என்றேன். சென்ற வருடம் நான் வந்த போது முன்னே அழகாகப் பூக் கன்றுகள் பூத்துக் குலுங்கியபடி நின்றன. இந்த வருடமும் பூந்தோட்டம் செய்கிறாயா? என்றார். செய்யாமல் பின்னே. அங்கே பார் எருவெல்லாம் போட்டுச் சாறி



வைத்துள்ளேன். இனிமேல் நடவேண்டியது தான். கடைகளில் இன்னும் கண்டு காலிகள் வந்து சேரவில்லை. இந்த வருடம் கொஞ்சம் வெள்ளணவே நடலாம் போலத் தெரிகிறது,' என்றேன். 'உந்தக் காலோடு எப்படிச் எப்படிச் சமாளிக்கிறாய்' என்றார். 'கோலோடு சமாளிக்கிறேன்' எனச் சிரித்தார். 'உனக்கு என்ன நடந்தது" என்றார். 'எனது நடத்தைப் பிழையாலே எனது நடை பிழைத்து விட்டது' என்றேன். பேந்தப் பேந்த முழித்தார். மோட்டார் சயிக்களை மொக்குத் தனமாக ஓட்டி வலது காலை முறித்தேன். வானொலிப் பேட்டி ஒன்றிற்குப் போய் வீடு திரும்புகையில் அங்கே. படியைக் காணாமல் படியிறங்கி இடது காலை முறித்தேன் இப்போ இங்கே. முடவனாய் நிற்கிறேன். 'போகட்டும் விடு' என்றவர். 'அந்த மத்தியிலே நீள்சதுரமாக இருந்த இடம் நிறைய நிறம் நிறமான பூக்கள் காணப்பட்டனவே அவற்றினை Asiatic lily என்கிறார்கள் ஆனால் நம்ம ஊர் லில்லி அப்படி இல்லையே. அங்கே கிழங்கு மண்ணுக்குக் கீழே இருக்கும் அதிலிருந்து நீளமான இலைகள் வரும் ஒரு தண்டினிலே பூக்கள் தோன்றும். இங்கே என்னடா என்றால் கிழங்கிலிருந்து ஒரு செடி வளர்ந்து வருகிறது. அது வளர்ந்து வரும் பொழுது இலைகளின் கக்கங்களிலிருந்து பூக்கள் வருகின்றன." என்றார். 'உண்மைதான் ஆனால் அப்படி சிறு செடி போல் வளர்பனவற்றினை Tiger lily என்று அழைப்பார்கள். கொஞ்சம் பரட்டையாக

தொடர்ச்சி 21ஆம் பக்கம்


REALTY EXECUTIVES ®
GTA LTD.
Brokerage.

9889 Markham Rd. (Hwy 48),
Suite 209
Markham ON L6E 0B7

Office: 905-209-7500
Fax: 905-209-7501

EXPERIENCE the advantages of working with an EXECUTIVE

Arnold/St.Moonrock



3600 Sq Ft Of Living Space. 5 Bedrooms & 4 Washroom House In Sought After Moonglo Area. Quality Appointments Throughout; Custom Built.
$439,000

Whites/Finch



Curb Appeal!! Spacious Fully Finished Home On A Child Safe & Friendly Street! Prime & Convenient Location! Gorgeous 16'X32' Inground Heated Pool
$419,800

Bathurst/Lakeshore



Downtown Living!!!!!!Beautiful 1 Bdrm + Den With 9 Feet Ceilings, Hardwood Floors,Granite Counter Top In Kitchen & Washroom. Beautiful City & Lake Views.
$305,000

Yonge/401



Luxury 1300 Sq Ft 2 Bedroom Two Bath Condo. Ensuite Bathroom With Seperate Shower.Granite Washroom Floor. Stunning Unobstructed Sw View.
$469,000



Sri Jayasiri
Broker of Record/President
Direct: 416-939-4343



Yoga Sivagnanasundaram*
(647)-836-0844



Pravisha Nagaretnam*
(416)-727-7686



Kay Visvanathan*
(647)-801-2969



Kumaran Pathmanathan*
(647)-273-7359

MLS MULTIPLE LISTING SERVICE

Each Office is Independantly Owned and Operated. *Sales Representative




# சக்கர ஊர்தி...

உள்ளவைக்குத்தான் நம்ம இடப் பெயரால் கௌரவிக்கிறார்கள். அங்கிருந்துதான் இங்கே வந்ததாம், ஆகவே நன்றி மறக்கவில்லை. என்னவோ எங்கள் வீட்டிலும் அந்த லில்லி இருந்தது. ஆனால் ஒரு சிவப்பு நிற வண்டு அதனைப் படாதபாடு படுத்தி விட்டது. இலை எல்லாம் பொத்தல் பொத்தலாக வலை போன்று அரித்துத் தொலைத்து விட்டது. அதற்கு ஒன்றும் செய்ய முடியவில்லை' என்றார். அந்தச் சிவப்பு நிற வண்டினை Lady bird Beetle (Liliocens lilii) என்பார்கள்.



அது ஒரு பயங்கரப் பேர்வழிதான். இலையினை தின்று கபளீகரம் செய்து விடும். அதனை அழிப்பது மிகவும் கஷ்டம். இரு வருடங்களுக்கு முன்னர் Toronto Star பத்திரிகையில் பூக்கன்றுகள் பற்றி எழுதுகின்ற Soniya Day எனும் பெண்மணியிடம் இது பற்றிக் வாசகர் கேட்டிருந்தார். சோனியா டே அதனைப் பத்திரிகையில் எழுதியிருந்தார். அவருக்கு நான் கடைப் பிடிக்கின்ற முறையினை மின் அஞ்சல் செய்திருந்தேன். சோனியா டே அந்த வழி சிறந்த வழி எனவும் என் பெயரைக் குறிப்பிட்டு தான் அதனை சிபார்சு செய்வதாகவும் பத்திரிகையில் எழுதியிருந்தார். நான் கையாளும் வழி இது தான், ஒரு சின்னப் புட்டியுடன் மதிய வேளை போவேன். அந்த வண்டுகள் இலைகளின் கக்கங்களிலேதான் மறைந்திருப்பார்கள். பின்னர் மதியம் போல் இந்த இடத்திலிருந்து இலையின் பரப்பினுக்கு வருவார்கள். ஆகவே சுலபமாகப் பொறுக்கி எடுத்துக் குப்பியில் போட்டு எறிந்து விடுவேன். ஓரளவுக்கு



தொடர்ந்து இருவாரங்கள் வரை செய்தமையால் வண்டினைக் கட்டுப் படுத்த முடிந்தது. தொடர்ந்து இரு வாரங்களாவது செய்ய வேண்டும். அதன் முட்டைகள் பொரித்து அடுத்த அடுத்த தலைமுறைகள் வந்து விடும். இலைகளின் கீழ்ப்புறத்திலும், கக்கங்களிலும் வண்டுகள் தங்கி இருக்கின்றமையால் பூச்சி கொல்லிகளால் சுலபமாக அவற்றினை அழிக்க முடியாது என்று விட்டு, உனக்கு ஒரு விசயம் தெரியுமா?' என்றேன். 'என்ன'? என்றார். 'அதாவது இந்த வண்டினங்கள் உங்கள் பொலிவூட் நட்சத்திரங்களிலும் மோசம்' என்றேன். 'எப்படி?' என்றார். 'எந்த நேரமும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்தபடியே தான் அவற்றினைக் காணலாம்' என்றேன் 'உண்ணுவது அடுத்து கலவுவது இவைதான் அவர்கள் நாளாந்த வேலை. ஆகவே தான் எக்கச் சக்கமாக முட்டை போடுகின்றன. அதனால் அவற்றினை அழிப்புது கஷ்டம்.' என்றேன். சிரித்தார். சிலர் வேப்பம் எண்ணையை விசுறுவார்கள். ஆனால் அதனாலும் பெரிதாக வெற்றி கிட்டியதில்லை. ஐரோப்பாவில் இதன் கொடுமையைக் கட்டுப்படுத்துவதற்கு உயிரியல் கட்டுப் பாட்டினை (Biological Control) அரசு கையாள்கிறது. உயிரியல் கட்டுப்படுத்தல் என்பது ஒரு உயிரினத்தினை அதனை உண்ணும் தன்மையுள்ள இன்னொரு உயிரினத்தினால் கட்டுப்படுத்தல். ஐரோப்பாவில் இந்த வண்டுகளை ஒரு வகைக் குளவி இனத்தின் மூலம் கட்டுப்படுத்துகிறார்கள். அரசாங்கம் இதனை அங்கீகரித்தமையால் இந்தக் குளவி இனத்தினை கடைகளிலேயே வாங்கிக் கொள்ள முடியும் என்றேன். 'அப்படி என்றால் குருவிகளுக்கு இந்த நிறம் துலாபரமாகத் தெரியுமே குருவிகள் இவற்றினைக் கொத்திக் கொண்டு போக மாட்டாதா? என்றார். 'இங்கே கூட ஒரு விநோதம் உள்ளது' என்றேன். என்ன? என்றார். "இந்தப் பூச்சி நல்ல கடும் சிவப்பு நிறமென்றமையால் குரவிகள் சுலபமாகக் கண்டு கொள்ளலாம் அல்லவா. ஆனால் குருவிகள் அந்தப் பக்கம் கூடத் திரும்பிப் பார்ப்பதில்லை. அதாவது இந்தச் சிவப்பு நிறம் எச்சரிக்கை நிறம் (Warning colouration) எனப் படுகிறது. எனது உடல் சுவையற்றது என்ற செய்தியை இந்தக் கடும் சிவப்பு நிறம் விளம்பரப் படுத்துகிறது, சூடு கண்ட பூனை பின்னர் அடுப்படிக்கு வருமா' என்றேன். 'போதுமடா சாமி உனது புராணம்' என்றார். அது போகட்டும் உனது வேலிக்கரை முழுவதும் காணப்பட்டதே டாஹ்லியா (Dahlia) செடிகள். அவை இன்னும் முளைக்கவில்லையா?' இப்போதான் கிழங்குகளை நட்டுள்ளேன் இன்னும் இரண்டொரு வாரங்களில் முளைக்கும். அப்போ ஒவ்வொரு வருடமும் நட வேண்டுமா: அப்படியே விட்டு விடலாம் என்கிறார்களே. சிலர் அப்படிச் செய்வதாகச் சொல்கிறார்கள் தான். இங்கிலாந்தில் எல்லோருமே அப்படித்தான் செய்வார்கள். இங்கே குளிர் அதிகம் என்பதால் மண்ணுக்குள் கிழங்குகளை விட்டால் அவை அழுகிப் போய் விடும் என்ற பயத்தில் நான் அந்த முயற்சியில் ஈடுபட்டதில்லை. 'அப்போ நீ என்ன செய்கிறாய். வருடம் வருடம் வாங்கி நடுவாயா' என்றார். கொஞ்சம் கொஞ்சம் வாங்குவேன். சென்ற வருடத்துக் கிழங்குகளைப் பாதுகாப்பாக வைப்பேன். அரக்கரைவாசியாவது தேறும் என்றேன். 'எப்படி?' கிழங்குகளை ஒரு பேப்பரினால் நன்கு சுற்றியபின் ஒரு பெட்டியில் போட்டு அப்பெட்டியைப் Peat Moss போட்டு நிரம்பி



**பொ. கனகசபாபதி**

Email: vlambaram@sympatico.ca

**தொடர்ச்சி 26ஆம் பக்கம்**


Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
For All your Real Estate & Investments Needs!
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga -905.712.2666


TRAFFIC TICKETS - MOTOR VEHICLE ACCIDENTS - CRIMINAL MATTERS
summary
SKT PARALEGAL SERVICE
வாகன விபத்து
MOTOR VEHICLE
ACCIDENTS
416-803-5296
sktheesan@gmail.com
SKTHEESAN
எஸ்.கே.தீசன்
கலகலப்பு தீசன்
KALAKALAPPU THEESAN


Sonic Auto Care Ltd
Auto Collision
Warranty Approved
சகல விதமான வாகனத் திருத்த வேலைகளும் அனுபவமுள்ள வாகனத் திருத்துனர்களால் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.
10 Min Oil Change
Castrol
5th oil change FREE with Castrol
COMPLETE CAR REPAIR
COMPLETE BODY WORK
BUY & SELL USED VEHICLES
AUDIO SYSTEM
INSURANCE CLAIMS APPROVED
Oil Change with Brake Inspection $ 27.99
Under Coating $ 75.00
Wiper Blade $ 8.00
Car Detailing $ 50.00
Spend $100 and over and you get a FREE car clean up with flyer.
Ellesmere Rd
Munham Gate
Birchmount Rd.
Kennedy Rd.
Lawrence Ave.
SONIC
OPEN HOURS
Mon-Fri: 8am-8pm
Sat-Sun: 9am-5pm
CREATIONS RENTAL CAR 24 HOURS
No Appointment Necessary
25 Munham Gate, Scarborough, Ontario M1P 2B3
Bus: 416-285-8700


EUROKERB & INTERLOCKING
Operated By: GM VIDI
call mike for free estimate
gmvidi@rogers.com
1035 Brock Rd, Unit 5B, Pickering, ON L3W-1T7 905.201.1465 416.903.4509
FENCE & DECK NEW / REPAIRS
COFFEE CREEK
NEW YORK
MUSKOKA GRANITE
EXECUTIVE
TERRA COTTA
Antique Bronze
Cinnamon Shale
PAVER COLORS*
• Driveways
• Walkways
• Pool Decks
• Interlocking Repairs

# மகுடம் 2010

இவ் ஆண்டு நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் யாழ்/கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கனடாக்கிளையின் பதினாறாவது ஆண்டு மகுடம் விழா மே 01, 10 ஆம் நாள் சனிக்கிழமை கனடா ஐயப்பன் கோயிலின் கலை மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு அமெரிக்காவில் வைத்தியராக பணிபுரியும் கொக்குவில் இந்துகல்லூரியின் பழையமாணவருமான படிகலிங்கம் ஞானேந்திரன் அவர்களும் அவர்களுடைய பாரியாரும் பிரதம விருந்தினராக வருகை தந்திருந்தனர். பிரதம் விருந்தினரை வரவேற்று மங்கள விளக்கேற்றலுடன் விழா சரியாக மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகியது.

கனேடிய தேசியகீதம், கனேடிய தேசியக்கொடியேற்றலும், கல்லூரி கீதம், கல்லூரி கொடியேற்றலையும் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்தும் அமைதி வணக்கமும் நடைபெற்றது.

கலை நிகழ்ச்சிகளில் முதலாவதாக மிருதங்க சேஷ்திர வாசுதேவன் இராஜலிங்கத்தின் மாணவர்களின் வாத்தியக் கச்சேரி நடைபெற்றது. இந் நிகழ்வில் எமது இளைஞர்கள் நாதஸ்வரம், தவில், மிருதங்கம், கடம், தபேலா, மோர்சிங் போன்ற கீழைத்தேய இசைக் கருவிகளை வாசித்து அவர்களது திறனை வெளிக்காட்டினர். இதனைத் தொடர்ந்து செல்வி ரூபினி தெய்வேந்திரனின் வரவேற்பு நடனம், அவரின் மாணவிகள் வழங்கிய நடனம் மற்றும் சதங்கை நர்தனாலய மாணவிகள் வழங்கிய நாட்டிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

நிகழ்ச்சிகளின் இடைஇடையே CMR மற்றும் TVI ஊடகங்களில் மக்களை சிரிக்க வைக்கும் கலைஞர்களான கமல் பாரதியும் K. V. கலைரூபனும் மேடையில் வந்து




பார்வையாளர்களை சிரிக்க வைத்துச் சென்றார்கள். சுப்பிரமணியம் சுரேஸ்குமாரின் தெய்வீக இசை நிகழ்வு பார்வையாளர்களை பரவசத்தில் ஆழ்த்த தவறவில்லை.

சிதம்பரக்கலை மன்ற நாட்டியாலய திருமதி கௌரி பாபுவின் "பங்காரா" நிகழ்வு அதில் பங்கு பற்றியோர் தமிழ்ப்பிள்ளைகளோ அல்லது பஞ்சாபியர்களோ என்ற ஐயத்தை தோற்றுவித்தது.

இந்நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து மூன்று திரையிசை நடனங்கள் நடைபெற்றன.

இவற்றைத் தொடர்ந்து கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்சங்கக் கனடாக் கிளையின் தலைவரான திரு.சி.எஸ். சண்முகநாதன் தலைவர் உரையை நிகழ்த்தினார். பிரதம விருந்தினர் உரையாற்றிய படிகலிங்கம் ஞானேந்திரன் தனது பாடசாலை காலத்தை நினைவு கூர்ந்தார். தான் கொக்குவில் இந்துக்கல்லூரியில் உயர்தர வகுப்பில் படிக்கும் போது செய்த தவறு ஒன்றுக்கு பஞ்சலிங்கம் மாஸ்ரர் எவ்வாறு தண்டனை தராமல் அறிவுரை கூறியது இன்றும் தனது மனதில் ஆணித்தரமாக பதிந்துள்ளது என்றார். கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்களும் நாடு கடந்த தமிழீழ அரசிற்கான வேட்பாளர்களுமான திரு. தேவா சபாபதியினதும் திரு. சாம். சங்கரசிவத்தினதும் அறிமுகம் பிரதம விருந்தினர் உரையை தொடர்ந்து நடைபெற்றது.

இவற்றைத் தொடர்ந்து கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்சங்க கனடாக் கிளையின் செயலாளரான திரு. பொ. ரவிச்சந்திரன் நன்றியுரையை நிகழ்த்தினார். இவ்விழாவின் நிகழ்ச்சிகளை செல்வி. ரம்யா நித்தியானந்தனும் திரு. பிரசன்னா ஜெயராமும் தொகுத்து வழங்கினார்கள்.

விழாவின் நிறைவு நிகழ்வாக பல இந்தியக் கலைஞர்களுக்கு இசைவழங்கிய "மெகா ரியூனர்ஸ்" இனுடைய இன்னிசை கானமும் நிகழ்வு நடைபெற்றது.

## கொக்குவில் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம் - கனடா

2010/ 2011 ஆண்டுக்கான நிர்வாகசபை உறுப்பினர்கள்

வருடாந்த பொதுக்கூட்டம் மே மாதம் 08, 2010 (May 8th, 2010) ஆண்டு சனிக்கிழமை மாலை 3:30 மணிக்கு இலக்கம் 3011 மார்க்கம் வீதியில் (3011 Markham Road, Scarborough) அமைந்துள்ள சந்திர மௌலீஸ்வரர் சிவாலய மண்டபத்தில் நடைபெற்றது. கீழ்வரும் அங்கத்தவர்கள் எமது 2010 / 2011 ஆண்டுக்கான நிர்வாகசபை உறுப்பினர்களாக பொதுச்சபையால் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர் என்பதை அறியத்தருகின்றோம்.

President
Mr. Rajathungam Mahendran
Home (416) 296-7037
Cell (647) 700-7882

Art & Culture
Mr. Anantharajah Premananth
Home (905) 477-0659
Cell (416) 856-8055

Vice Presidents
1. Mrs. Sukirthaluxmi Supramaniam
Home (416) 431-1060
2. Mr.C.S.Shanmuganathan
Home (905) 472-4194

Youth Affairs
Mr. Manickanadarasa Jeyamanohar
Cell (416) 788-7102

Secretary
Mr. Ponnampalam Ravichanthiran
Home (905) 654-4283
Cell (416) 318-6195

Committee Members

1. Mr. Namasivayam Mahendran
Home (416) 754-4864
2. Mr. Thevarajah Rabimohan
Home (416) 291-9956
3. Mr. Yogaraja Thavalingam
Home (416) 901-2632
4. Mrs. Jeyaranee Poopalasingam
Home (416) 431-9929
5. Mr. Arulpiragasam Muraleetharan
Home (647) 351-6167

Asst.Secretary
Mrs. Jaya Pararajasingam
Home (416) 283-5265

Treasurer
Mr. Sinnathurai Kuganendran
Home (416) 621-6308

Asst.Treasurer
Mr. Nadarajah Ravichandran
Home (905) 471-0906

Sports Secretary
Mr.Shanmugavadivel Puvanendran

Patron - Mr. Kandasamy A. Tharmendran

Auditor - Mr. S. Ketheeswaran

**COMPLETE MAINTENANCE SERVICES**

Cleaning - We come to your home door

(Interior Exterior) - Van, car, bus, carpet upholstery - Area Rug

உங்கள் வீட்டிற்கு நாங்கள் நேரடியாக வருகின்றோம்

**416.829.0970**

***Complete Basement Works***

Hard Wood, Laminate, Title Flooring, Pluming, Electrical works.

குறித்தநேரத்தில் வேலைகள் முடித்துத் தரப்படும்

**416.666.5627/647.269.0912**

**Complete Painting Works**

Interior & Exterior - Houses, Basement, Offices

**416.666.5627 / 416.319.1106**

19 வருட கூட்டு அனுபவமிக்கவர்களின் சேவை

# BASEMENT RENT

**MORNINGSID & MCLEVIN**
2 Bedroom walkout bsmt apt. with sep. entrance. Parking, laundry, babysitting available. Close to malls, Wal-mart, nofrills, medical, library, 4 elementary schools, 3 Highschools, U of T, Centennial college, 30 seconds to, TTC 24 hrs., hwy 401. Ideal for small family's, seniors. Also 1 bedroom bsmt for ladies available. Avail. June 01, 2010.
தொடர்புகளுக்கு:416.834.1081

**SCAR. GOLF CLUB & LAWRENCE**
1 Large bedroom & medium size room bsmt for rent. Kitchen, living room, full washroom, laundry, Sep. entrance. Avail. July 01, 2010. Close to TTC, school, mall, etc.
தொடர்புகளுக்கு: 416.438.2660

**WARDEN & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, mall, school. Avail. Anytime. Girls preferred. தொடர்புகளுக்கு: 647.502.8486 (after 6.00 pm)

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC. Utilities, bills included. Avail. July 01,2010
தொடர்புகளுக்கு: 647.887.8839

**WESTERN & RUTHERFORD**
1 Big bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately.
416.402.3947/416.726.2425

**BRIMLEY & STEELES**
1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking & laundry. Close to doctors, mall, tamil stores & school. Avail. immediately.
416.301.1387/905.604.0814

**WARDEN & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. July 01, 2010
தொடர்புகளுக்கு: 416.494.0850

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school, bank. Avail. July 01, 2010
தொடர்புகளுக்கு: 416.523.1312

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall. Avail. June 15, 2010. Couple preferred.
905.201.9014 / 416.389.1737

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.349.5566/647.406.5749

**MARKHAM & STEELES**
1 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. June 01, 2010.
647.703.1314 / 647.703.1343

**MORNINGSIDE & ELLESMERE COLINES & CANMORE**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to university. அறைகள் தனித்தனியாக கொடுக்கப்படும். Single person preferred. Avail.immediately.
416.208.7328 / 416.315.8016

**MCCOWAN & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Avail. Anytime
தொடர்புகளுக்கு: 905.910.9972

**KENNEDY & EGLINTON**
Very convenient location with all facilities. 3 Rooms, living / dinning, kitchen with stove and fridge. Sep. entrance, laundry, parking etc. Suitable for small family.
416.285.4695/416.264.3899
Please call after 6.00pm

**GORE & HWY 07**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to college. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.732.9808

**MORNINGSIDE & SHEPPARED**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.616.1403

**BRIMLEY & LAWRENCE**
2 Rooms for rent in a basement. Sep. entrance & parking, laundry. Close to TTC, stores & other facilities. Very quiet place. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: 416.264.8177

**ORTON PARK & LAWRENCE**
ஒரு படுக்கையறை கொண்ட bsmt வாடகைக்கு உண்டு. Kitchen, washroom, sep. entrance. Close to TTC, shopping, school. Avail. immediately. பெண்கள் or Young couple விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.320.6156

**MORNINGSIDE & LAWRENCE**
1 Large bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall. Avail. immediately.
416.994.7849 / 647.344.3419

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, hospital. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.836.5482

**McCOWAN & DENISON**
New 1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, laundry & cable. Close to all amenities. Avail. immediately.
905.472.8156 / 416.998.8156

**EGLINTON & MIDLAND**
2 Big bedroom bsmt for rent. Sep. entrance, parking. Bills inclusive. Close to Kennedy subway, school, TTC.
416.750.0363 / 416.759.9675

**MARKHAM & PAINTED POST DR.**
2 bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry, cable. Close to school, mall. Avail. immediately. Single family preferred.
தொடர்புகளுக்கு: 416.400.8125

**KENNEDY & EGLINTON**
2 Bedroom available for rent. Sep. entrance. Cooking facilities. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.930.1171

**MCLEVIN & NEILSON**
2 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.883.1054

**MORNINGSIDE & STAINS RD**
New 2 bsmt walkout for rent. Very convenient location.
தொடர்புகளுக்கு: 416.970.3404

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. Anytime. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.996.6977

**BRIMLEY & LAWRENCE**
2 Bedroom walkout bsmt for rent. 2 parking. All facilities available. Close to TTC, school & mall. Avail. immediately.
416.879.6801 / 416.293.6253

**BRIMLEY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep entrance, parking, laundry. Close to bus, mall, school. Avail. immediately. தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.846.8394

**MCCOWAN & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry inclu.. Close to 24 hrs. bus service, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.272.4921

**McCOWAN & STEELES**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Large kitchen & living room. Parking & laundry included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.828.6510

**MCCOWAN & 16TH AVE.**
இரண்டு அறைகள் கொண்ட bsmt Apt. வாடகைக்கு உண்டு. Sep. entrance. Parking, cable, laundry. Close to bus, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.414.5562

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc. தொடர்புகளுக்கு: 416.551.8379

# SPACE FOR RENT

**KENNEDY & LAWRENCE**
2 Space for rent.
416.755.8354/647.836.9255

***Scarborough*** இல் ***MIDDLEFIELD & FINCH*** சந்திப்பில் அமைந்துள்ள ***GTA Square*** இல் உள்ள வியாபார நிலையத்தில் சிறிய இடம் வாடகைக்கு உண்டு. Real estate, accounting office, insurance brokers... போன்ற நிறுவனங்கள் நடத்தக்கூடிய இடம் (Clothing & Fancy Jewellery)
***Siva: 647.885.2478***

# OFFICE SPACE FOR RENT

**KENNEDY & ELLESMERE**
Rent $395. All inclusive.
தொடர்புகளுக்கு: 416.575.5055

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

# CONDO. FOR RENT

**SHEPPARD & MARKHAM**
1 Bedroom + den brand new condo for rent. Close to TTC, bank, mall, school, day care. Avail. immediately. Student & small family preferred.
416.522.1629/416.522.2995

# HOUSE FOR RENT

**MARKHAM & ELSON**
4 Bedroom house for rent. Close to all facilities. Avail. July 01,2010. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்டும்.
தொடர்புகளுக்கு: 647.272.2909

**NEILSON & ELLESMERE**
4 Bedroom town house. All hard wood floors. 2 full & 2 half washrooms. 2 parking. Close to TTC, school, HWY 401 & University. Cable & water included. Rent $1350. Available immediately.
தொடர்புகளுக்கு: 289.232.1513

**MCCOWAN & LAWRENCE**
3 Bedroom upper level house for rent. Laundry, kitchen, living room. Avail. Anytime. Close to TTC, hospital.
தொடர்புகளுக்கு: 647.206.8145

**MORNINGSIDE & SHEPPARED**
2 Bedroom house for rent. Close to all facilities. Avail.immediately.
தொடர்புகளுக்கு: 416.300.7595

**MIDLAND & SHEPPARED**
4 Bedroom + 1 bedroom bsmt for rent. Close to school, mall, go train, TTC.
தொடர்புகளுக்கு: 647.448.6464

# HOUSE FOR SALE

ஹெந்தல வத்தளையில் 4 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. 14.5 பரப்பு கொண்டது. 2000 sq.feet. 3 Bathrooms, Air condition in one bedroom. With all facilities. Urgent sale. Quiet neighborhood.
தொடர்புகளுக்கு: 780.908.0112
E - mail : ar25th@gmail.com

வெள்ளவத்தையில் 3 படுக்கையறைகள் கொண்ட தொடர்மாடிவீடு ஒன்று விற்பனைக்குள்ளது. சகலவசதிகளும் கொண்ட வீடு.
தொடர்புகளுக்கு: 416.629.9601

# CARS FOR SALE

Honda 98 CRV car for sale. Automatic, black colour. Good condition.
தொடர்புகளுக்கு: 416.688.8364

2002 BMW X5 Blue colour $13,900,
2002 Toyota Corolla - 80K, $4,700,
2007 BMW X3 - $34,900,
2002 BMW X5 - $13,500, 200 km,
2005 Toyota Corolla - $9,800,
2005 Honda Accord - 2 door - $ 9,500,
தொடர்புகளுக்கு: ***416.575.5055***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கம் 25, 26

# ROOM RENT

**WARDEN & SHEPPARD**
ஒரு அறை basement இல் இரு நேரச் சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள் விரும்பத்தக்கது. Avail. mmediately. அழையுங்கள் 416.299.4895 / 416.201.1222

**MARKHAM & LAWRENCE**
Room available for rent in main floor. Cable inclusive. Close to TTC & plaza. Room $275. 416.439.4076/416.728.0807

**MIDDLEFIELD & ELSON**
2 Rooms for rent. Attached washroom. Close to TTC, No Frills, school, tamil stores, Doctor. Avail. immediately. தொடர்புகளுக்கு: 905.471.5340 / 905.209.7359

**BRIMLEY & STEELES**
தனி வீடு ஒன்றின் மேல் தளத்தில் அறை ஒன்று வாடகைக்கு உண்டு. Parking, Laundry, cooking facilities. Close to bus, school, தமிழ் கடைகள். Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.844.7550

**DANFORTH & EGLINTON**
2 Rooms for rent in a apartment. Fully furnished with bed, cable, internet, phone, laundry, kitchen & Washroom. Rent $350 & $450. Male only. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.637.1303

**FINCH & MIDDLEFIELD**
Bsmt இல் 1 அறை தனித்தனியாக வாடகைக்கு உண்டு. Sep. entrance. Close to mall, ஐயப்பன் கோவில். No smoking. Ladies preffered. Keep the place clean. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.493.0590/Leave message

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் Tvi, Sun TV, Vijay TV, internet, தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு: 416.288.0303

**MORNINGSIDE & MORNINGVIEW**
2 Bedroom for rent. Parking, laundry, cable. Close to TTC, mall school, bank. Avail. Anytime. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Female or students preferred. தொடர்புகளுக்கு: 416.805.8791

**KENNEDY & ELLESMERE**
1 Room in bsmt, 1 Room in first floor for rent. Close to subway, TTC, etc. தொடர்புகளுக்கு: 416.830.5560

**BRIMLEY & EGLINTON**
1 Room in a bsmt for rent. Shared kitchen and washroom, sep.entrance, laundry, parking, hydro and cable included. No smoking. Working single male only. Convenient location. Very clean Rent $350. தொடர்புகளுக்கு: 416.268.5014

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Attached washroom, Double garage. Close to everything. Pl. Call: 905.294.2674

**DANFORTH & EGLINTON**
Shared Room for rent in bsmt. Another room available for a lady in main floor. Close to bus, stores, 5 min. to Kennedy subway. Males only. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.201.3111

## TUITION FOR ALL GRADES

Math, Science, English, Physics, Chemistry, Calculus & Vectors, Advanced Functions, Data Management, learn to read & reading recovery. Home work help & Exam preparation individual & customized lessons. Flexible hours. தொடர்புகளுக்கு: 416.265.0162

## தமிழ் வகுப்பு

பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தரம் 1 - தரம் 12 வரை உள்ள மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கப்படும். உங்கள் பிள்ளைகளும் தமிழில் எழுத வாசிக்க அழையுங்கள். 905.554.2496

## TUTION CLASSES

Maths, English, Science, Art & Tamil.
(JK – Gr. 3) Preparation for next grade.
• Homework help • Flexible time.
1 to 1 or group classes.
Call: 905.554.2496

## A1 கொழும்பு ஸ்ரூடியோ

முதல் தரமான அனைத்து வீடியோ, படப்பிடிப்புக்களுக்கு அழையுங்கள்
***416.752.4444***
Unit 3 L.L - 2296 Eglinton Ave.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மரதனாமட றோட்டில் விளர்த்தி அடி என்னும் இடத்தில் ஐந்து பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 416.431.1345

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

## NEW STYLE TAILORING

விஷேடமாக சாறி Blous, சுடிதார்



அனைத்தும் குறைந்த செலவில் குறித்த நேரத்தில் தைத்துக் கொடுக்கப்படும். மற்றும் தையலும் கற்றுக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: ***647.885.7843***

## பங்காளர் தேவை

புதிதாக அமையவுள்ள சிறிய கடைக்கு பங்காளர் தேவைப்படுகின்றது. ஆர்வமுள்ளவர்கள் அழைக்கவும் : 647.476.6003

## மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த தற்பொழுது கொழும்பில் தனியார் நிறுவனத்தில் Accounts assistant ஆக பணிபுரியும் 1972 ஆம் ஆண்டு கார்த்திகை நட்சத்திரம், 5'4" உயரமுடைய அழகிய பெண்ணுக்கு நற்பண்புள்ள வரனை எதிர்பார்க்கின்றோம். திருமண சேவை செய்பவர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்புகளுக்கு: 647.618.9316

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் உரும்பராயை சேர்ந்த கனடாவில் வேலை செய்யும் அவிட்ட நட்சத்திரம், 41 வயது மணமகனுக்கு கனடாவில் வசிக்கும் மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: ***416.431.1345***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## JOB JOB JOB

### ICE - CREAM TRUCK DRIVER

Male or female need class - G - license to drive Ice - cream truck in Calgary, Alberta. Full time $1000 and up Weekly pay. Job up to October. 403.818.2222 / 647.800.5060

G சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஐஸ்கிறீம் Van சாரதி உடனடியாகத் தேவை. 5210 General Rd. HWY 401 & Dixie Mississauga. தொடர்புகளுக்கு: 416.880.7562

## தொழில் வாய்ப்பு

**பகுதிநேரமாகவோ, முழுநேரமாகவோ செய்யக்கூடிய சொந்தத்தொழில் வாய்ப்பு. அனுபவம் தேவையில்லை. சகல பயிற்சியாளர்களும் முறையாக வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும் *416.613.5857***

## CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்: 416.274.5495

## COMPUTER REPAIR

உங்கள் கணினி (Computer) யில் ஏற்படும் குறைபாடுகளை நேரில் வந்து நிவர்த்தி செய்யவும் மற்றும் கணினி (computer) திருத்த வேலைகளுக்கும் அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள் நிமல் - 416.301.1999

## WANTED

Used Toyota Corolla 1993 - 1997 தேவை. Any condition. Raj - ***647.269.6552***

## வீடு விற்பனைக்கு

நல்லூர், யாழ்ப்பாணத்தில் 4.5 பரப்புக்கொண்ட தென்னைமரங்கள் உள்ள காணி விற்பனைக்கு உண்டு. 31, 12th district, Kadukkaiadi Lane, Nallur, Jaffna. The extend of the land is 4.5 Parappu. Within Jaffna Municipality limits. This is the 3rd piece of land behind a land with an old house on the main rd ,that is 122, Chemmani Road. Opposite to Old education department and a church and very closer to Nallur Temple( about 3/4 mile). It has some producing coconut trees and a well.Education Department) முன்பாக உள்ளது. மேலதிக விவரங்களுக்கு: ***416.315.9397***

மேலும் பக்கங்கம் 24, 26

**$100 $250 $100**
**$250 $250**

நீங்கள் Welfare, ODSP பணத்தில் வாழ்பவர்களாக இருந்தால் எமது நிறுவனத்துடன் இணைந்து தொண்டு செய்யும் பொழுது மேலதிகமாக $250.00 டொலர்களையும் அத்துடன் $100.00 டொலர்களையும் தொடர்ந்து 6 மாதத்தில் இருந்து ஒரு வருடம் வரை பெற்றுக் கொள்ளலாம்.

**$100 $100**

### Ontario Vegetarian Food Bank
## தொண்டர் சேவை

**$250 $250**

2370 Midland Ave, Scarborough,
2400 Finch Ave., North
www.Vegefoodbank.ca
416.744 (Help).4357

**$250 $100 $250 $100 $250**

## St. Antonys Soccer Club is Hosting Outdoor Soccer Season 2010

சென் அன்ரனீஸ் உதைப்பந்தாட்டக் கழகத்தின் 2010 ஆம் ஆண்டுக்கான கோடைக்கால உதைப்பந்தாட்டப் பயிற்சி வகுப்புக்கள் June முதல் September வரை நடைபெறும். வயது: 4 - 6
இடம்: Elia Middle School, 215 Sentinel Road (Keele & Finch)

தொடர்பு: 416.638.1954 / 416.873.2148 / Vinothan02@yahoo.ca
விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)


BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490/647.831.0070

**Tutorial 260** **Answers 260**

(1) 4 ! x 3 ! = (4.3.2.1) (3.2) =144.

(2) 2(7!) - 4 (6!) = 7200

(3) (12) (9) (6) = 369600
(3 ) (3) (3)




(4) Since A M is a median of troangle ABC, M will be the midpoint of BC. Therefore the co-ordinates of M are (2, -1/2, -5/2). Now AM = (0, -2, 3/2) and |AM| = 4 +9/4 = 5/2. The length of median AM is 5/2

(5) $|x + y|^2 = (x + y)(x + y)$ $= |x^2| + 2xy + |y|^2$
$2xy = |x + y^2| - |x|^2 - |y|^2$ $xy = 1/2 (|x + y|^2) - |x|^2 - |y|^2)$

**Tutorial 261** **Questions**

(1) From a deck of 52 cards, how many different four - card hands could be dealt which include one card from each suit? (for Gr. 12)

(2) Given a and b unit vectors. If the angle between them is 60°, calculate (6a + b). (a - 2b). (For Gr.12)

(3) A steel wire 40m long is suspended between two fixed points 20m qpart. A force of 375 N pulls the wire down at a point 15m from one end of the wire. State the tension in each part of the wire? (For Gr. 12)

(4) Calculate the present value if $2600 is required in 1 year. The money can be invested at 7.3% per year, compounded monthly? (For Gr. 11 & 12)

(5) Find limit sum7x/4x and lim x cot x
x –> 0 4x x 0


கனடா எழுத்தாளர் இணையத்தின் ஆதரவுடன்

## நூல்கள் வெளியீடு

### கனி விமலநாதனின் இரண்டு அரிய நூல்களின் வெளியீடு

இந்தியா, இலங்கை, இங்கிலாந்து கனடா போன்ற நாடுகளில் நல்ல வரவேற்பைப் பெற்ற வேற்றுக் கிரக மனிதர்கள், இனம் தெரியாத பறக்கும் தட்டுகள், பிரபஞ்சம் பற்றிய வியப்பான செய்திகள் போன்ற நூல்களைத் தந்த கனி விமலநாதனின் அடுத்த இரண்டு பெறுமதியான நூல்களின் வெளியீடு.

1) புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விடயங்கள்

புவியீர்ப்பு என்றால் என்ன? விசையா? அல்லது விளைவா?
நியூட்டனின் பார்வையில் புவியீர்ப்பும், புவியீர்ப்புக்கான அயன்ஸ்ரைனின் விளக்கமும்.
பல அறிஞர்களின் பாராட்டுதல்களைப் பெற்ற நூல்.

2) வியத்தகு விண்மீன்கள்

இருண்ட வானில் மின்னும் விண்மீன்கள் எதனால் ஆனவை? ஏப்படித் தோன்றியவை? எவ்வளவு காலத்திற்கு ஒளியை உமிழக் கூடியன? எவ்விதம் இவை இறந்து போகின்றன? இவை காட்டும் மாயங்கள் என்ன? இது போன்ற பல வினாக்களுக்கு எளிமையாக விடையளிக்கும் அற்புதமான நூல்

“விளம்பரம்” பத்திரிகையில் விண்வெளி பற்றித் தொடர்ந்து எழுதிவரும் கனியின் இந்த நூல்கள், மே மாதம் 24ம் திகதி, திங்கட் கிழமை, ஸ்காபரோ. சிவிக் சென்ரரில் மாலை 5 மணிமுதல் 8 மணிவரையில் நடைபெறவுள்ளது. யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றார்கள்!

இந்நூல்களை வாசித்திறிவதற்கு விஞ்ஞான அறிவு தேவையில்லை!
தரம்11, 12ல் கல்வி கற்கும் உங்கள் பிள்ளைகளுக்குக் கூட நீங்கள் பௌதீகப் பாடத்திற்கு இந்நூல்களின் உதவியுடன் உதவி செய்யலாம்.

\- கனி



**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Under taken for all arades from grade 4 to university 1st year. Special classes in advanced functions, vector calculation & data management for grades 11 & 12

Indiouvale and group classes available by an experience teacher Mr. S.F. Xavier. Classes available at 1. Scarborough 2. Stauffville and Richmond Hill

**CONTACT: 647.340.9490 / 647.831.0070**



மேருபுரம்
ஸ்ரீ மஹாபத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

## கம்பன் விழா

பட்டி மன்றம்: ‘வாலிவதை’ கொற்றவனின் குற்றமா?
கவியரங்கம்: ‘காலத்தை வென்ற கவிஞன் - கம்பன்’
சிறப்புரை: பேராசிரியர் நா. சுப்பிரமணியன் அவர்கள்
காலம்: **30.05.2010 – மாலை 6:00**
இடம்: **1510 Birchmount Road, Scarborough (Birchmount & Ellesmere)**
தொடர்புகளுக்கு: **416-615-0100 / 416-546-1394**


# சக்கர ஊர்திப்...

**21ஆம் பக்கத்தொடர்ச்சி**

எனது வீட்டின் கீழ்த்தளத்தில வைப்பேன். குளிர் காலத்தின் வெம்பமூட்டியால் ஏற்படும் வெப்பம் தாக்காதவாறு அறையின் மையப் பகுதியில் வைப்பேன். ஓரளவு வெளிச்சமும்



படாமல் இருக்க வேண்டும். வெளிச்சம் பட்டால் சில கிழங்குகள் குளிர் காலத்திலேயே முளைக்கத் தொடங்கி விடலாம். பெருவாரியான கிழங்குகள் நெதர்லாந்திலேயே இருந்து வருகின்றன. சில வகைகளை விதைகள் மூலமாகவும் பயிரிட முடியும். ஆனால் அந்த வகைகளின் பூக்கள் பெரிதாக இருப்பதில்லை. Dinner plate வகையின் பூக்கள் சில ஒரு அடி விட்டம் உடையவையாய் கூடஇருக்கக் காணலாம். பூவின் பாரம் தாங்காமல் பூத் தண்டு முறிந்து விடுவதும் உண்டு. ஆகவே செடியின் அருகே ஒரு தடி நட்டு செடியினை அதனுடன் கட்டி வைக்க வேண்டும். இங்கேயும் ஒரு பூச்சி இனம் வில்லனாகத் தான் உள்ளது. அதனை Earwig என்போம். கறுத்த நிறமான சிறகில்லாத பூச்சி. துளிர் இலைகளை கடித்துக் குதறுவது அதற்கு உல்லாசம். நான் அந்தப் பூச்சியைப் பார்த்துள்ளேன். பின்னுக்கு இரண்டு இடுக்கி போன்ற முளைகள் இருக்கும் தானே. கொஞ்சம் அதைப் பற்றிச் சொல்லு. நான் இம்முறை டாஹிலியா வளர்க்க உத்தேசித்துள்ளேன். எத்தனை அழகான நிறத்தில் பூக்கள் உள்ளன’ என்றார். இந்தப் பூச்சிகள் கொஞ்சம் ஈரலிப்பினை விரும்புவதால் தோட்டத்தில் கற்களுக்குக் கீழே அல்லது சருகு இலைகளுக்குக் கீழே மறைந்திருந்து பின்னர் இரவிலே தம் திறமையைக் கண்டுகளிலே காட்டும். ஆகவே இவற்றினைக் கண்டு கொள்வது அவை துளிர் இலைகளுக்குச் செய்த உபகாரத்தின் மூலம் தான். இரண்டு மூன்று விசயம் தெரிந்து வைத்திரு. பேப்பரை மெல்லிதாக நீரில் நனைத்துச் சுருட்டி ஒரு இறப்பர் வளையத்தால் அதனைக் கட்டி பூக்கன்றுக்குக் கிட்ட இரவினில் வைத்துவிடு. காலையில் அந்தப் பேப்பர் தக்கையுள் இவை தஞ்சம் அடைந்திருப்பதைக் காணமுடியும். சவர்க்காரக் கரைசலையும் தெளித்தால் இவற்றினைக் கொன்று விடலாம். அதனையும் முயன்று பார்க்கலாம். குருவிகளுக்கும் நம்மிலும் கண் பார்வை நல்லது. ஆகவே தோட்டத்தின் உள்ளே குருவி தங்குவற்கு ஒரு சுமைதாங்கியையும், அவை நீராற ஒரு தட்டில் நீரையும் வைக்கலாம். ஆதனால் குருவிகள் நன்றி பாராட்டும் விதமாக நுயச றபைள சை ஒரு கை பார்க்கலாம். பாடசாலை வந்து விட்டது. நீ இறங்கலாம்? என்றார். கதை முடிந்தது.

# வணங்குவதற்கு ஒரு மண்

புறநானூறில் ஒரு பாடல் உள்ளது. குறுங்கோழியூர் கிழார் சேரமானைப் பார்த்து பாடியது.
"உன்னுடைய மண்ணை கர்ப்பிணிப் பெண்கள் மட்டுமே உண்ணுவர். எதிரிகள் உண்ண முடியாது." பழந்தமிழர் சொந்த மண்ணை மாற்றான் அபகரிக்காமல் பாதுகாப்பதற்காகப் போர் புரிந்தார்கள். அதுவே ஒரு வாழ்வுமுறையாக அமைந்தது. மண்ணுக்காக போர்புரிந்து மரித்த வீரர்களுக்கு நடுகல் எழுப்பி அவர்களை வழிபடுவது தமிழர் பண்பாடாகியது.

அமெரிக்காவின் தலைநகரமான வாசிங்டனுக்கு சமீபத்தில் போயிருந்தேன். ஆப்பிரஹாம் லிங்கன் ஜனாதிபதியாக இருந்தபோது ஆர்லிங்டனில் போரில் இறந்த வீரர்களுக்காக ஒரு பிரம்மாண்டமான மயானத்தை அமைத்தார். அதிலே உள்நாட்டுப்போரில் தொடங்கி இன்று ஆப்கானிஸ்தான், ஈராக்கு போன்ற நாடுகள்வரை மரிக்கும் அமெரிக்க வீரர்களை அடக்கம் செய்கிறார்கள். இன்றைக்கு அங்கே 300,000 நடுகல்கள் உள்ளன. வருடா வருடம் மயானத்தில் பெரும் அணிவகுப்பும் மரியாதையும் நடக்கிறது. அத்துடன் பெயர் தெரியாமல் இறந்த வீரர்களுக்கான நினைவு மண்டபமும் ஒன்றிருக்கிறது. வருடத்தில் 365 நாட்களும், இருபத்திநாலு மணிநேரமும் வீரர்கள் காவல் காக்கிறார்கள். தினமும் ஆயிரக் கணக்கானவர்கள் அங்கே நடக்கும் அணிவகுப்பை பார்வையிடுவதற்காக வருகிறார்கள்.

அமெரிக்காவில் மாத்திரமல்ல கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற பல நாடுகளில் போரில் இறந்துபோன வீரர்களின் சமாதிகளில் வருடாவருடம் மரியாதை நடக்கிறது. ஐரோப்பாவில் பல நாடுகள் வருடத்தில் ஒருநாளை மரித்தவர்களுக்காக ஒதுக்கிவைத்து அந்த நாளில் மயானங்களுக்கு சென்று இறந்தவர்களின் கல்லறைகளை சுத்தம் செய்து பூச்செண்டு வைத்து வழிபடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றன. மாமன்னன் நெப்போலியன் இறந்து பல வருடங்களுக்கு பின்னர் அவன் உடல் பிரான்சுக்கு கொண்டு வரப்பட்டது. அவன் ஞாபகமாக ஒரு ஸ்தூபி எழுப்பப்பட்டு அதற்கு மக்கள் மரியாதை செய்கிறார்கள். ஆப்பிரிக்காவிலே இறந்துபோனவர்கள் எல்லாம் தெய்வம்தான். மூதாதை வழிபாடு அவர்களுக்கு முக்கியமானது. இறந்த போர்வீரர்களுக்கான மரியாதை இன்னும் முக்கியம் பெறுகிறது.

> "எந்த ஒரு போரிலும் உயிர் நீத்தவர்களுக்கு மரியாதை செய்வதுதான் உயர் பண்பாளர்களின் கடமை. ஆனால் இன்று ஈழத்து போரில் இறந்துபோன வீரர்களின் நடுகல்கள் அழிக்கப்படுகின்றன என்று வருகின்ற செய்தி நம்ப முடியாததாக இருக்கிறது."

1919ம் ஆண்டு நடந்த ஜாலியன்வாலா படுகொலை எல்லோருக்கும் ஞாபகமிருக்கும். மைக்கேல் டையர் என்பவன்தான் அப்போது பஞ்சாப் கவர்னராக இருந்தவன். அந்தப் படுகொலையில் 400 நிரபராதிகள் சுட்டு கொல்லப்பட்டனர். மைகேல் டையர் அந்தக் கொலைகளுக்கு ஆணை கொடுத்தது மட்டுமல்லாமல் அவன் அவற்றை சரி என்று நியாயப்படுத்தியவன். கொலைநடந்த இடத்தில் சனங்களுக்கு தண்ணீர் பரிமாற-ியவன் உத்தம் சிங். துடிதுடித்து வீழ்ந்து மடிந்த சனங்களை கண்களால் பார்த்தவன். அவன் அந்த இடத்து மண்ணை அள்ளி சட்டைப்பையில் வைத்துக்கொண்டு டையரை பழி வாங்குவதற்காக இங்கிலாந்துக்கு புறப்பட்டான். அங்கே 21 வருடங்களாக அவனைத் தேடி கடைசியில் காக்ஸ்டன் மண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றபோது அங்கே பேசவந்த டையரை சுட்டு வீழ்த்தினான். காந்தி அவன் செய்த கொலையை கண்டித்தார். உத்தம் சிங்கை 1940ம் வருடம் இங்கிலாந்தில் தூக்கில் போட்டார்கள். இந்தியா விடுதலை பெற்ற பின்னர் 1974ல் அவனுடைய எச்சங்களை கொண்டுவந்து இந்திய அரசின் ஆதரவோடு எரித்து கங்கையில் கரைத்தார்கள். அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அந்த நிகழ்ச்சியில் கலந்து மரியாதை செய்தார். இன்றும் உத்தம் சிங்கின் நினைவுச் சின்னத்தை பஞ்சாபில் மக்கள் வழிபடுகிறார்கள்.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரேயே இலங்கையில் அநுராதபுரத்தில் தமிழ் மன்னன் எல்லாளனின் நீதியான அரசாட்சி நடந்தது. அவனுடைய ராச்சியத்தை கைப்பற்ற சிங்கள அரசனான துட்டகைமுனு போர் தொடுத்தான். அந்தப் போர் முன்னெப்பொழுதும் கண்டிராதமாதிரி உக்கிரமானதாகவும் கொடூரமானதாகவும் இருந்தது. அந்தச் சமரை மஹாவம்சம் "குளத்திலிருந்த நீர் எல்லாம் ரத்தச் சிவப்பாக மாறியது" என்று வர்ணிக்கிறது. போரில் துட்டகைமுனு வென்றான் எல்லாளன் இறந்துபோனான். எல்லாளன் மக்களால் போற்றப்பட்ட தமிழ் மன்னனாகையால் அவன் விழுந்த இடத்தில் துட்டகைமுனு அவன் நினைவாக மண்டபம் எழுப்பினான். அந்த இடத்தை தாண்டும்போது மரியாதை செய்யவேண்டும் என்றும் வாத்தியங்கள் மௌனிக்கப்பட வேண்டும் என்று சட்டம் இயற்றினான். அந்தச் சட்டம் பல நூறு ஆண்டுகள் மக்களால் மதிக்கப்பட்டது.

எந்த ஒரு போரிலும் உயிர் நீத்தவர்களுக்கு மரியாதை செய்வதுதான் உயர் பண்பாளர்களின் கடமை. ஆனால் இன்று ஈழத்து போரில் இறந்துபோன வீரர்களின் நடுகல்கள் அழிக்கப்படுகின்றன என்று வருகின்ற செய்தி நம்ப முடியாததாக இருக்கிறது.

புறநானூறில் மாங்குடி கிழார் இப்படி சொல்கிறார்.
மலர்களில் குரவம், தளவம், குருந்தம், முல்லை என்று நான்கு வகை உள்ளன.
உணவில் வரகு, தினை, கொள், அவரை என்று நான்கு வகை இருக்கின்றன.
குடிகளிலும் நான்கு வகை.
ஆனால் தொழுவதற்கு எங்களுக்கு தெய்வம் ஒன்றுதான்.
அது இறந்துபோன வீரனின் நடுகல்.

இன்றோ எமக்கு தெய்வமில்லை.
நடுகல் இல்லை.
ஒரு மண்ணும் இல்லை.

END



- அ. முத்துலிங்கம் -





உங்கள் வியாபாரத்தினை தயார் செய்வது நீங்கள் நினைப்பதிலும் பார்க்க சுலபமானது.

ஜுலை 1ல், ஒன்ராறியோவில் HST ஆனது PST மற்றும் GST இற்கு மாற்றாக அமுலுக்கு வருகிறது. வியாபாரங்களைப் பொறுத்தமட்டில் இதன் அர்த்தமானது ஒன்ராறியோ வரி மாற்றங்கள் காரணமாக, கணக்குவழக்குகள், விலைப்பட்டியல் முறைமையை புதுப்பித்தலும், வரிச்சலுகைக்கு தகைமையடைவதும் மற்றும் புதிய வரி குறைப்பில் அநுகூலமடைவதும் ஆகும். நீங்கள் எப்படி ஆயத்தம் செய்யலாம் என்று அறியுங்கள். உங்கள் கணக்காளரிடம் பேசவும் அல்லது ontario.ca /hstready பார்க்கவும். வியாபாரத் தயார் சம்பந்தமான நுணுக்கங்களை உங்கள் மொழியில் பார்ப்பதற்கு வலைத்தளம் செல்லவும்.

ontario.ca/hstready

ஒன்றாரியோ அரசினால் இதற்குரிய கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario



REAL ESTATE
வகுப்புகள்

ரொறொன்ரோவில் இலவச ஆதனவியல் (*Real Estate*) வகுப்பு நடைபெறுகின்றது.

தொடர்புகளுக்கு: *Vanessa - 416.321.6969*



# சிவத்தமிழ் விழா - 2010

ரொரன்ரோ சிறீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி நடத்திய சிவத்தமிழ் விழா ஏப்பிரல் 24, 2010 இல் Everest Banquets Hall இல் நடைபெற்றது. வரசித்தி விநாயகர் இந்துகல்லூரியின் நான்காவது ஆண்டுவிழாவாக இந்த சிவத்தமிழ் விழா நடைபெற்றது. சிறீ வரசித்தி விநாயக தேவஸ்தான ஸ்தாபகர் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள் அவர்களால் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. 2005ஆம் ஆண்டு விஜயதசமி தினத்தன்று பண்ணிசை வகுப்புக்களுடன் ஆரம்பமான இக்கல்லூரி 2006ஆம் ஆண்டு தைமாதம் முதல் தமிழ், சமயம், பண்ணிசை ஆகிய மூன்று பாடங்களுடன் நடத்தப்பட்டு வருகின்றது. 2009 ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதல் வேத சிவாகம மற்றும் யோகாசன வகுப்புக்களும் இங்கு நடத்தப்பட்டு வருகின்றன. இக்கல்லூரியின் அதிபராக திருமதி பூங்கோதை அமுதன் இருக்கின்றார். இங்கு பத்து ஆசிரியர் பணியாற்றி வருகின்றார்கள். நிர்வாக பொறுப்பாளராக திரு. ஜெயானந்தசர்மா தியாகராஜா ஐயரும் நிர்வாக செயலாளராக திருமதி. வனஜா இந்திரகுமாரும் பணியாற்றுகின்றனர். இக்கல்லூரியினால் வருடாவருடம் நடத்தப்படும் சிவத்தமிழ் விழா முற்றுமுழுதாக இக்கல்லூரியில் பயிலும் 200க்கும் மேற்பட்ட மாணவர்களாலும் அவர்களது ஆசிரியர்களாலும் மட்டுமே நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஏப்பிரல் 24, 2010 இல் நடைபெற்ற நான்காவது சிவத்தமிழ் விழாவிற்கு பிரதம விருந்தினராக மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதியும் கௌரவ விருந்தினராக Scarborough - Agincourt கல்விச்சபை Trustee திருமதி. Soo Wong உம் சமூகமளித்திருந்தார்கள். இவ்விழாவிற்கு கல்லூரி ஆசிரியை திருமதி. கமலாம்பிகை சாந்தலிங்கம் தலைமை தாங்கினர். சிறப்பு விருந்தினராக திரு. R.N லோகேந்திரலிங்கம், திரு. சுப்பிரமணியன் ராஜரட்ணம் மற்றும் Dr. சண் அ. சண்முகவடிவேல் வந்திருந்தனர். சிவத்தமிழ் விழா மாலை 4.30 மணியளவில் மங்கள விளக்கேற்றுதல், விநாயகர் துதி, வேத பாராயணம், தேவாரம், தமிழ்தாய் வாழ்த்து, கனேடிய தேசியகீதம் மற்றும் அமைதி வணக்கத்துடன் ஆரம்பமாகியது.

**- அருந்ததி ஞா. -**

இக்கல்லூரியின் அதிபர் திருமதி. பூங்கோதை அமுதன் வரவேற்பு உரையும் சிவஸ்ரீ Dr. நா. சோமஸ்கந்தகுருக்கள் ஆசி உரையும் வழங்கினார்கள். விழாவில் இடையிடையே சிவஸ்ரீ நகுலேஸ்வர குமாரசாமிக்குருக்கள், ஐயப்பன் கோவில் தலைவர் திரு. S. திருச்செல்வம், புங்குடுதீவு பழையமாணவர் சங்கத்தலைவர் திரு. சோம சச்சிதானந்தம் ஆசி உரைகளையும், வாழ்த்துரைகளையும் வழங்கினார்கள். எல்லோருமே தமது உரையில் தமிழ் மக்களினதும், சைவமக்களதும் தேவையை உணர்ந்து தகுந்த நேரத்தில் சிவஸ்ரீ பஞ்சாட்சட விஜயகுமார குருக்கள் இவ்வாறு ஒரு இந்துக் கல்லூரியை ஆரம்பித்தது ஒரு தூரநோக்கு கொண்ட மிகவும் நல்ல செயல் என்றும் இந்துக் கல்லூரி மென்மேலும் வளர வேண்டும் என்றும் கூறினார்கள்.

கல்லூரி மாணவர்களால் விழா நிகழ்ச்சிகளின் இடையில் அழகு தமிழில் ஆற்றிய உரைகள் அவர்கள் தமிழிலும், சைவசமயத்திலும் இந்துக்கல்லூரியில் எவ்வாறு தமது அறிவை பெருக்கியுள்ளார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருந்தது.

மெய்ப்பொருள் நாயனார் - செல்வன் டுஷான் கேதாரன்
குங்கிலியக் கலய நாயனார் - செல்வன் பபிசன் ஜெயரட்ணம்
திருநாளைப்போவார் - செல்வி சங்கீர்ணா சசிதகுமார்
தமிழ்மொழி - செல்வன் வாகீஸ் மதியழகன்
ஔவையார் - செல்வி ராகவி கிருபைநாதன்
பூசலார் நாயனார் - செல்வி ஆரபி இராஜமோகன்
சிவனின் பெருமை - செல்வன் புருஷோத் தவேந்திரன்
சண்டேசுவர நாயனார் - செல்வி சுருதி ஸ்ரீகரன்

மேற்கூறப்பட்ட மாணவர்களின் சமய பேச்சுக்களை நெறியாள்கை செய்த ஆசிரியர் திருமதி கமலாம்பிகை சாந்தலிங்கமும் தமிழ் பேச்சுக்களை நெறியாள்கை செய்த ஆசிரியர் திருமதி திலகவதி சின்னப்புவும் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.

தலைவர் உரையை விழாத் தலைவர் திருமதி. கமலாம்பிகை சாந்தலிங்கமும், இந்துக்கல்லூரியின் வளர்ச்சி பற்றிய உரையை திரு. செல்லத்துரை சத்தியமூர்த்தியும் நிகழ்த்தினார்கள். சிறப்பு விருந்தினர் உரையை ஆற்றிய திரு. சுப்பிரமணியன் ராஜரட்ணம், "தான் இந்துகல்லூரியை ஒன்ராரியோ மாகாண அரசின் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனம் ஆக்கும் முயற்சியல் ஈடுபடுவேன்" என்றார்.




பிரதம விருந்தினர் உரையாற்றிய திரு. பொ. கனகசபாபதி அவர்கள் இந்துக்கல்லூரியை விட தரக்குறைவான பலகல்வி நிறுவனங்களின் கற்கைநெறியை விசேட சித்தி பெற தகுதி உள்ளவை என அங்கீகரித்த மாகாண அரசு மிகவும் திறம்பட நிர்வகிக்கப்படும் இந்துகல்லூரியின் கற்கைநெறியை விஷேட சித்திபெற தகுதி வாய்ந்ததாக அங்கீகரிக்க வேண்டும் எனக்கூறினார். பிரதம விருந்தினர் உரையைத் தொடர்ந்து கௌரவ உரையாற்றிய Ms. Soo Wong அவர்கள் தான் இந்துக் கல்லூரியின் கற்கைநெறியை மாகாண அரசால் அங்கீகரிக்கப்பட வைக்கும் கல்லூரி நிறுவனத்தின் முயற்சிக்கு ஒத்துழைப்பு தருவேன் என்று கூறினர்.

இந்துக்கல்லூரியில் நடைபெறும் காலை மற்றும் மாலை நேர ஏழு வகுப்புக்களையும் சேர்ந்த மாணவர்களில் கடந்த மாசி 28, 2010 ஆம் திகதி நடைபெற்ற பொது அறிவுப் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடம்பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. திரு. R.N லோகேந்திரலிங்கம், Dr. சண் ஆ. சண்முகவடிவேல் சிறப்பு விருந்தினர் உரையாற்றினார்கள். பெற்றோரின் பார்வையில் கருத்தை தெரிவித்த திருமதி. நாகேஸ்வரி சிவகுமரர் தமிழ் படிக்க தயங்கிய சிறார்களை தனது சிறப்பான அணுகுமுறை மூலம் விருப்புடன் தமிழ் படிக்க தூண்டிய ஆசிரியர்களின் திறமையை மெச்சி பாராட்டினார். திரு. கதிர் துரைசிங்கம் கௌரவ உரையையும் திரு. ஜெயானந்தசர்மா தியாகாராஜாஐயர் நன்றி உரையையும் நிகழ்த்தினார்கள். பொது அறிவுப்போட்டியில் நடுவர்களாக வந்தவர்களுக்கும், விழா ஆதரவாளர்களுக்கும் மேடையில் கௌரவம் அளிக்கப்படடது.

சிவத்தமிழ் விழாவின் கலை நிகழ்ச்சிகளில் இந்துக்கல்லூரி மாணவர்கள் தங்களது திறமைகளை வெளிக்காட்டினார்கள். "ஆறுதுணை" நடனத்தில் சிறுவர்கள் சரஸ்வதி, பிள்ளையார், அம்மன், முருகன், இலக்குமி, மற்றும் கண்ணன் ஆகிய ஆறு கடவுளர்களுக்கும் வணக்கம் தெரிவித்து காவடி நடனம், கரகம் போன்று வெவ்வேறு நடனம் ஆடினார்கள். "அ....அ...கணபதி" என்ற பாட்டு நிகழ்வும் "நலம் தரும் யோகா" என்னும் யோகாசன நிகழ்வுகளும் நடைபெற்றது. "ஆத்தி சூடி" "ஓடி விளையாடு பாப்பா" "வீரவேல்" என்னும் காவடி ஆட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. "எல்லாம் அவன் செயல்" என்ற நாடகம் தன்னை நம்பியவர்களை இறைவன் எவ்வாறு காப்பாற்றுவார் என்று எடுத்து கூறுவதாக இருந்தது. இதில் சிவபெருமானாக வந்து நடனமாடிய செல்வி. திவ்யா பிரபாகரனது நடனம் சிறப்பாக இருந்தது.

எமது நாட்டில் வயது வந்தவர்களால் பலகாலமாக தொடர்ந்து நடத்தி வரும் கூத்து நிகழ்ச்சியான "காத்தவராயன்கூத்து" நிகழ்வை, இந்துக்கல்லூரி மாணவர்களுக்கு குறுகிய காலத்தில் பழக்கி அதை மேடை ஏற்றிய கல்லூரி அதிபர் திருமதி. பூங்கோதை அமுதனின் நம்பிக்கையும் விடாமுயற்சியும் மிகவும் பாராட்டப்பட வேண்டியது. இக்கூத்தை மாணவர்கள் மிகவும் சிறப்பாக தமது குரலில் பாடியும் நடித்தும் காட்டியிருந்தார்கள்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பல்கலாசார நிகழ்ச்சியில் மாணவர்கள் பல்கலாசார உடை அணிந்து சிறப்பாக நடனமாடினார்கள். "நானிலங்கள்" நிகழ்ச்சியில் நதியாக வந்து நான்கு வகை நிலங்களின் ஊடாக பாய்ந்து சென்று கடலை அடைந்த செல்வி திவ்யா பிரபாகரனின் நடனம், முகபாவனை என்பன நடைபெற்ற சிவத்தமிழ் விழாவின் நிகழ்வுகளுக்கு சிகரமாக அமைந்து பார்வையாளர்களின் மனதை கொள்ளை கொண்டது. "சுவாமி விவேகானந்தர்" வில்லுப்பாட்டு நிகழ்வும், 'புலம் பெயர்ந்த நாட்டில் பெற்றோர்கள் தமிழர் பண்பாட்டை அடுத்த தலைமுறைக்கு எடுத்துக் கொள்கிறார்களா? இல்லையா?' என்ற பட்டிமன்றமும் இந்துக்கல்லூரி மாணவர்கள் பலகலைகளிலும் தேர்ச்சிபெற்றவர்கள் என பறைசாற்றின. பட்டிமன்றத்தில் பங்குபற்றிய நடுவர் உட்பட ஒன்பது மாணவர்களினதும் தமிழ்பேச்சின் தரமே இவ்விவாத தலைப்பிற்கு பதில் கூறுவதாக இருந்தது. இவ்விழாவிற்கு நிகழ்ச்சி தொகுப்பாளராக திருமதி. மதுநந்தினி தயானந்தசர்மாவும் திருமதி. சுதர்ஷி கலிங்கரட்ணமும் இருந்தார்கள். சிவத்தமிழ் விழா சரியாக இரவு 11.00 மணிக்கு நிறைவு பெற்றது. எல்லாவகையிலும் சிறப்பாக நடைபெற்ற விழா ஒலிவாங்கியை சரியாக பராமரிக்காததால் பார்வையாளர்களுக்கு சிலவிடயங்கள் சில நேரங்களில் சரியாக கேட்கவில்லை. எமது சிறார்கள் எதிர்காலத்தில் எமது மொழி மற்றும் மத விடயங்களை ஆர்வமாக ஆராய, கற்க இந்துக்கல்லூரியும், சிவத்தமிழ்விழாக்களும் அத்திவாரத்தை இட்டுக் கொடுக்கின்றன.

SMILE....
• BUSINESS PLANS
• ACCOUNTING, TAXATION
• CORPORATE TAX PREPARATION OF FILING
• SYSTEMS - POINT OF SALES
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
RK CONSULTANTS
PL. CALL: 905.887.7457 / 905.751.7537
24 hrs, 365 days


Niru Niru
நிரு
பிரான்ட்
Niru
BRAND
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிரான்ட்.
Niru BRAND
Niru BRAND
Niru BRAND
BRAND
Niru BRAND
Niru BRAND

# “ஈழத்தின் கதையை படமாக்கனும்!”

## சந்திப்பு: இயக்குனர் வ. கௌதமன்

‘கனவே கலையாதே!’ திரைப்படம் மூலம் அறிமுகமான இயக்குனர், கௌதமன். திரைப்பட இயக்குநராக அறிமுகமானாலும், அதன்பிறகு தொலைக்காட்சிக்கு சென்று, ஒரு முக்கியமான தொலைக்காட்சித் தொடர் இயக்குநராக முத்திரை பதித்தார். ‘மக்கள் தொலைக்காட்சி’யில் ஒளிபரப்பான ‘ஆட்டோ சங்கர்’, ‘சந்தனக்காடு’ தொடர்கள், திரைப்படங்களுக்கு இணையாக, கொஞ்சம்கூட ‘விறுவிறு’ப்புக் குறையாமல் தொலைக்காட்சித் தொடர்களையும் எடுக்க முடியும் என்பதை நிரூபித்தன. பொதுவான பார்வையில் குற்றவாளிகளாகக் கருதப்படுபவர்களின் நிஜ முகத்தை, அதன் இயல்பு மாறாமல் அப்படியே எடுத்துக் காட்டின இத்தொடர்கள். இதனாலேயே தனிக்கவனம் பெற்றவர். தற்போது, ‘மகிழ்ச்சி’ திரைப்படத்தை இயக்கியிருக்கிறார். இதில் இவரே ஒரு கதாநாயகனும்கூட. இன்னொரு கதாநாயகன் சீமான். ‘மகிழ்ச்சி’ வருகிற ஜூலை மாதம் வெளியாக இருக்கிறது. கௌதமனைச் சந்தித்துப் பேசினோம்.

எழுத்தாளர் நீல. பத்மநாபன் எழுதிய ‘தலைமுறைகள்’ நாவலைத்தான் ‘மகிழ்ச்சி’ திரைப்படமாக எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள், இல்லையா?

வ. கௌதமன்: “ஆமாம்”.

தமிழ் சினிமாவைப் பொறுத்தவரை, நாவலை அப்படியே திரைப்படமாக ஆக்கும் முயற்சிகள் தோல்வியில்தான் முடிந்திருக்கின்றன. அதாவது வணிகரீதியாக வெற்றி பெறவில்லை என்றே சொல்லலாம். உதாரணமாக, ‘மோக முள்’, ‘உன்னைப் போல் ஒருவன்’... இப்படி. இந்தச் சூழலில் ஒரு நாவலை திரைப்படமாக எடுக்கும் தைரியம் உங்களுக்கு எப்படி வந்தது?

வ. கௌதமன்: “தமிழ் சினிமாவில் நாவல்கள் படமாக எடுக்கப்பட்டு தோல்வி அடைந்தன என்று சொல்வதே தப்பு. நாவல்களைப் படமாக எடுத்து, தமிழ் சினிமா உலகத் திரை அரங்கங்களில் பேசப்பட்டுக்கிட்டு இருக்குங்கறதுக்கும் வரலாறு இருக்கு. இருநூறு நாட்களுக்கும் மேல் ஓடி, இன்னமும் தமிழ் சினிமாவின் அதி உன்னதமான படங்கள்ல ஒண்ணு ‘உதிரிப் பூக்கள்.’ தமிழ் சினி-மாவின் அடையாளங்கள்ல ஒண்ணாவும் அது இருக்கு. அந்தப் படத்தின் மூலக்கதை ஒரு நாவல். அதே மாதிரி, ‘முள்ளும் மலரும்’, ‘உன்னைப் போல் ஒருவன்’ ஆகிய படங்களையும் சொல்லலாம். ‘உன்னைப் போல் ஒருவன்’ தங்கத் தாமரை விருது பெற்ற படம். அது எழுத்தாளர் ஜெயகாந்தனோட நாவல். அவரே அதை இயக்கியிருந்தார். ஆக, நாம் தோல்வியைக் கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒரு படைப்பாளி, அந்தப் படத்தைக் கையாளுகிற நிலையைப் பொறுத்துத்தான் வெற்றி, தோல்வி நிர்ணயிக்கப்படுது.

தமிழ்நாட்டைத் தவிர, இந்தியாவில் பெங்காலி, கன்னடம், மலையாளம்.. என்று எந்த மொழியில் வந்திருந்தாலும், சிறந்த படங்கள் எல்லாமே நாவலைத் தழுவி எடுக்கப்பட்ட படங்களாகத்தான் இருந்திருக்கின்றன. சத்யஜித்ரேயின் ‘பதேர் பாஞ்சாலி’ இந்திய சினிமாவை உலக அளவில் திரும்பிப் பார்க்க வைத்தபடம். அதுவும் ஒரு நாவலைத் தழுவி எடுக்கப்பட்ட படம்தான். விபூதி பூஷண் பந்தோபாத்யாய எழுதிய நாவல் அது. அதே போல உலக அளவில் வெற்றி பெற்ற நிறைய படங்கள் ‘நாவலைத் தழுவி எடுக்கப்பட்டது’ என்கிற பெயர்ப் பலகையைத் தாங்கித்தான் வெளி வந்திருக்கின்றன.

நாவல் என்பது வாழ்க்கையை உச்சபட்சமாக சலித்தெடுத்துச் சொல்கிற ஒரு பொக்கிஷம். அதை, ஒரு திரைப்படமாக ஆக்குவது என்பது சவாலான விஷயம்தான். ஆனா, ரொம்ப நேர்மையாகவும் கவனமாகவும் ஒரு படைப்பாளி நாவலை அணுகினால், அந்தப் படைப்பு அதிகபட்ச வெற்றியையும், உச்சபட்சமான மரியாதையையும் பெற்றுத் தரும். அந்த அடிப்படையிலதான் நான் நாவலைப் படமாக்கத் தீர்மானிச்சேன். இந்திய அளவுல மிகச் சிறந்த பத்து நாவல்கள் என்று பட்டியல் போட்டால், அதில் நீல. பத்மநாபனின் ‘தலைமுறைகள்’ நாவலும் இடம் பெறும். இந்தப் படம் உலக அளவுல ஒரு மரியாதையான இடத்தை தமிழ் சினிமாவுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப் போகிற ஒரு படைப்பு.”



நேர்காணல் - பாலு சத்யா

சினிமாவில் ஜெயிப்பதோ, அதை நம்பி வாழ்வதேகூட ஒரு பெரிய போராட்டம். ‘கனவே கலையாதே!’ படம் வெளி வந்தபிறகு உடனே உங்களுக்கு அடுத்த படத்தை இயக்கும் வாய்ப்பு வந்துவிடவில்லை. அந்த காலக்கட்டம் உங்களுக்கு எப்படி இருந்தது?

வ. கௌதமன்: “‘கனவே கலையாதே!’ படத்தை எப்படி இயக்கத் துணிந்தேன் என்கிற விஷயத்தை நான் பதிவு செய்யவேண்டியிருக்கிறது. நான் படம் பண்ணுவது என்று முடிவு செய்யப்பட்டு, அதற்கான பூஜை, தொடக்கவிழா எல்லாம் நடந்தது. அந்தக் கதையே வேற. படப்பிடிப்புக்குப் போறதுக்கு ஒரு பத்து நாளைக்கு முன்னாடி எந்தக் கதையை நான் பிடிக்கலைன்னு சொன்னேனோ, அந்தக் கதை என் மேல பலவந்தமா திணிக்கப்பட்டது. குறிப்பா தயாரிப்பாளராலயும், அந்தப் படத்துக்கு ஒளிப்பதிவாளரா இருந்த தங்கர்பச்சானாலயும்தான் அது நடந்தது. அவர்தான் அந்தப் படத்துக்கு ஒளிப்பதிவாளர். அப்புறம் எடிட்டர் லெனின்... அவங்கல்லாம் இப்பயும் எனக்கு நண்பர்கள். அதுக்காக உண்மையைச் சொல்லாம இருக்க முடியாது. இவங்கள்லாம் சேர்ந்து, என்னைக் கட்டாயப்படுத்திதான் ‘கனவே கலையாதே!’ படத்தை எடுக்க வச்சாங்க. நான் அந்தப் படைப்பை எடுக்கும்போதே. ‘இதைப் பண்றதால நான் மட்டும் சிக்குவேன். இதுல இருந்து மீள்றதுக்கு எனக்கு எத்தனை வருஷம் ஆகப் போகுதோ தெரியல. ஆனா, நீங்கள்லாம் தப்பிச்சுருவீங்க’ அப்பிடின்னு சொன்னேன். அந்தப் படைப்பை நான் செஞ்சே ஆக வேண்டிய சூழல். ஏன்னா, வெறும் கட்டாயம் மட்டும் இல்ல, அன்பும் என் மேல திணிக்கப்பட்டது. ‘நிச்சயமா நீ ஜெயிப்பே! நாங்க இருக்கோம். பாத்துக்கறோம்’ இப்பிடியெல்லாம் சொன்னாங்க. தெரிஞ்சே நான் மாட்டிக்கிட்ட ஒரு படுகுழி அது. அந்தப் படத்தை எடுத்து முடிச்சேன். நான் பயந்த மாதிரியே தியேட்டருக்கு போன வேகத்தில் அந்தப் படம் திரும்பி வந்தது.

அதன் பிறகான காலத்தில், வேறு வாய்ப்புகள் கிடைக்காமல், சொல்ல முடியாத அளவுக்கு வறுமையை எல்லாம் நான் சந்திச்சேன். எந்தக் காலத்துலயும், வறுமையாலயும் குரூரத்தாலயும் ஒரு படைப்பாளி தாக்கப்படும்போது, அதுல அவன் சிதைஞ்சுடக்கூடாது. அந்தக் காலத்தைப் பொன்னாக மாத்துறதுக்கு, வெற்றியா மாத்துறதுக்கு அவன் தன்னைத் தயார் செஞ்சுக்கணும். இந்த இடைவெளில அதை நான் செஞ்சுக்கிட்டேன். மனிதர்களைப் படிச்சேன். வாழ்க்கையை புரிஞ்சுக்கிட்டேன். அற்புதமான இலக்கியங்களைப் படிச்சேன். நிறைய திரைக்கதைகளை தயார் செஞ்சேன். அது சின்னத் திரையா இருந்தா என்ன, பெரிய திரையா இருந்தா என்ன...ன்னு எதைப் பத்தியும் கவலைப்படாம, மக்களின் படைப்பா, மக்களின் வாழ்க்கையை சீரமைக்கிற படைப்பா இருக்கனும் என்று மட்டும்தான் நினைத்தேன்.

‘ஆட்டோ சங்கர்’ படைக்கறதுக்கு எனக்கு மக்கள் தொலைக்காட்சி இடம் கொடுத்தது. அது ஒரு உண்மைச் சம்பவம். சாதாரணமான ஒருத்தன், வெள்ளை உள்ளம் கொண்ட ஒருத்தன், அதிகார வர்க்கத்தின் சுய லாபத்துக்காக, அவங்களோட சுய குரூர மகிழ்ச்சிக்காக பலியாகறாங்கறது தான் கதை. ஆட்டை வளர்த்து அது தலையை எடுக்கற மாதிரி, அவனுக்கு தண்ணி, பொண்ணு, எல்லாம் குடுத்து, ‘தவறு செய்!’ ‘கொலை செய்!’ அப்பிடின்னுல்லாம் அவனை திசை திருப்பி, அதிகார வர்க்கம், அரசாங்கம், பணக்காரர்கள் எல்லோரும் இணைந்து எப்படியெல்லாம் அவனை தீத்துக் கட்டறாங்கங்கற வாழ்க்கை அது. இதுலிருந்து ஓர் அபாயமணியை என்னால அடிக்க முடிஞ்சுது. ‘ஆட்டோ சங்கர்’ மாதிரி இன்னும் எத்தனையோ பேரு வளந்துக்கிட்டு இருக்கான். ‘இதுல நீ சிக்கிறாதே!’ன்னு சொல்லுற உக்கிரமான படைப்பா என்னால அதைப் பண்ண முடிஞ்சுது.

அதே மாதிரி ‘சந்தனக்காடு.’ அது வெறும் வீரப்பன் கதை மட்டும் இல்ல. வீரப்பன், பல வருஷம் காட்டுல மறைஞ்சுக்கிட்டு, போலீஸ் அதிகாரிகளையும் மத்தவங்களையும் எதிர்த்தான், அழிச்சான்ங்கறதுக்காக மட்டும் நான் அந்தப் படைப்பை எடுக்கல. உண்மையிலேயே அவன் வீரன். நாட்டுல இருக்குற மிருகங்களைவிட, காட்டுல இருக்கற மிருகங்களோட மிருகமா வாழ்ந்து, மனிதனா இருந்தவன் அவன். ஆனா, அவனை வேட்டையாடுறோம்ங்கிற பேர்ல, அதிகாரவர்க்கம் காட்டுக்குள்ள பூந்து, அங்க இருக்குற மனிதர்களைச் சிதைச்சாங்க. பெண்களை சின்னாபின்னமாக்கினாங்க, கற்பழிச்சாங்க, கோரமாக்கினாங்க. எத்தனையோ அப்பாவி ஆண்களை சுட்டுத் தள்ளினாங்க. எத்தனையோ குழந்தைகளை அனாதையாக்கி, வீரப்பன் ஆளுங்களைப் புடிச்சோம்னு கம்பீரமா போஸ் குடுத்தாங்க. இந்த அதிகார வர்க்கத்தைத் தோலுரிச்சுக் காட்டி, ‘இனி ஒரு தவறு என் மண்ணுல நடந்துடக்கூடாது’ அப்பிடின்னு அவங்களை எச்சரிக்கறதுக்கும், கண்டனம் தெரிவிக்கிறதுக்கும் என் படைப்பை நான் பயன்படுத்திக்கிட்டேன்.”

இந்த இரண்டு தொடர்களுக்குமே மக்கள் தொலைக்காட்சியில் உங்களுக்கு முழு சுதந்திரமும் கொடுத்தார்களா?

வ. கௌதமன்: “நூறு சதவிகிதம் சுதந்திரம் கொடுத்தாங்க. சின்னச் சின்ன பிரச்னைகள் இருந்தது. அதையெல்லாம் தாண்டின சுதந்திரமும் எனக்குக் கிடைச்சது.”

‘மகிழ்ச்சி’ படத்தில் நீங்களே கதாநாயகனாக நடிக்கிறீர்கள். அது எப்படி உங்கள் படத்துக்கு உங்களையே கதாநாயகனாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டீர்கள்?

வ. கௌதமன்: “உண்மையைச் சொல்லப்போனா நான் நடிக்கறதுக்காகத்தான் சென்னைக்கு வந்தேன். இயக்குநராவதற்கு வரலை. நடிக்க வந்தப்போ, இங்க இருக்கற சூழலைப் பாத்தா ரொம்ப பயமா இருந்தது. சினிமா உலகம் ஒரு குரூரமான உலகம். விரல்விட்டு எண்ணக்கூடிய கலைஞர்கள் மட்டுமே உண்மையா இருந்தாங்க. மத்தவங்க எல்லாருமே ஒப்பனையோட அலைஞ்சாங்க. இங்கே மனிதர்கள் நடிக்கறதுக்கு மட்டும் ஒப்பனையை போடலை. இந்த உலகத்துக்குள்ள, நாம எப்படி ஒரு லட்சியத்தோடு இருக்க முடியும்னு எனக்குப் புரியல. திக்குத் தெரியாத ஒரு சூழ்நிலை. நடிக்கறதுக்கான வாய்ப்பும் எனக்குக் கிடைக்கலை. ஆனாலும், வெறியோட அலைஞ்சுக்கிட்டு இருந்தேன். அப்போ, நாமே ஒரு இயக்குநரா ஆயிட்டா, ஒரு கட்டத்துல நடிக்கலாம் அப்பிடின்னு முடிவு பண்ணினேன். அதற்கு நீல. பத்மநாபனோட ‘தலைமுறைகள்’ நாவல் ஒரு முக்கிய காரணம். அந்த நாவலில் அன்பு, அழகு, உறவு, உன்னதம்... எல்லாமே இருந்துச்சு. சொல்ல முடியாத ஒரு உணர்ச்சியையும் அழகியலையும் உண்மைகளையும் வாழ்க்கையை அழகா வாழலாம்ங்கற தத்துவத்தையும் அந்தப் படைப்பு எனக்குக் குடுத்தது. அப்போ நான் முடிவு பண்ணினேன். ஒரு கட்டத்துல நாம இயக்குநராகி, இதைத் திரைக்கதையாக்கி, அதுல நாம நடிக்கணும்னு ஒரு லட்சியத்தை வச்சுக்கிட்டேன். இந்தப் பெரும் போராட்டம், எனக்கு பதினேழாண்டு காலத்தைக் கடத்தியிருக்கு. நான் எந்த இடத்துலயுமே சோர்வடையலை. உறுதியோட ஒரு இளைஞன் இருந்தா, ஆண்டுகள் தள்ளிப் போனாலும் கவலையில்ல, அவன் நினைச்சதை அடைவான் என்பதை இப்போது நான் உணர்கிறேன்.

‘மகிழ்ச்சி’யில் இயக்குநர் சீமான் இன்னொரு கதாநாயகனா நடிக்கிறார். பிரகாஷ்ராஜ், கஞ்சா

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

# இன்னொரு... 05

மகாதேவனின் அறை மிக நேர்த்தியாகவும் சுத்தமாகவும் இருந்தது. ஆவணக்கோவைகள் ஒழுங்காகச் சுவரில் இருந்த அலுமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. சில பெரிய தடித்த புத்தகங்களும் அந்த அலுமாரியில் காணப்பட்டன. ஏதாவது வைத்தியப் புத்தகங்களாக இருக்கும். ஆளளவு உயரத்தளவில் மனிதர்களின் நாடி நரம்புகளைக் காட்டும் படமொன்று சுவரில் இருந்த ஆணி ஒன்றில் இருந்து தொங்கிக் கொண்டு இருந்தது. படம் அழகாகத்தான் இருந்தது, பயமுறுத்தவில்லை. சிறிய அறைதான், ஆனாலும் பல விடயங்களை தன்னுள் அடக்கியிருந்தது. வாசலுக்கு எதிராக இருந்த சுவரின் முன்பாக மகாதேவனின் அடக்கமான மேசை இருந்தது. சுவருக்கும் மேசைக்கும் இடையிருந்த ஒரு வசதியான நாற்காலியில் மகாதேவன் இருந்திருந்தார். அவரின் பின்னாக அவரின் தலைக்கும் மேலாக, அவரது தகைமைகளைத் தெரிவிக்கும் பத்திரங்கள் கண்ணாடிச் சட்டங்களினுள் பத்திரமாக்கப்பட்டு, சுவரில் தொங்கிக் கொண்டு இருந்தன.

மகாதேவனுக்கு முன்பாக, அவரைப் பார்த்தவண்ணமாக நாயகமும் திலகமும் நாற்காலிகளில் அமர்ந்திருந்தார்கள். நாயகமும் திலகமும் இதற்கு முன்னர் பல தடவைகள் மகாதேவனைச் சந்தித்திருந்தாலும் இந்த அறைக்குள் வருவது இதுதான் முதல் தடவை. அறை எவ்வளவுதான் சுத்தமாக இருந்தபோதிலும், இலேசாக மருந்துகளின் நொடி வந்து கொண்டுதான் இருந்தது.

சம்பிரதாயமான குசல விசாரிப்புகள் எல்லாம் முடிந்து, விடயத்திற்கு வரும் நிலையில் இருந்தார்கள்.

"எல்லாம் நல்லபடியாகவே இருக்குது, நடக்குது. இன்னமும் இரண்டு கிழமையளிலை உங்கடை இரண்டு பிள்ளையளும் தனித்தனியாய், சுகபெலத்துடன் இருப்பினம். முன்னதாகச் சில விசயங்களை உங்களுக்குத் தெரிவிப்பது, தெளிவுபடுத்த வேண்டியது எனது முக்கிய கடமையாக இருக்கிறது" என்றார் மகாதேவன். மகாதேவனின் வார்த்தைகள் தெளிவாகவும் வழமைபோலவே ஆறுதலாகவும் வந்தன. ஆங்கிலத்தில் பட்டப்படிப்பு படித்திருந்தாலும் நல்ல தமிழில் பேசும் வல்லமை படைத்தவராக இருந்தார் மகாதேவன். அதிலும் பேச்சுத் தமிழ் நல்ல சரளமாக அவரிடம் இருந்து வரும்.

இருவரும் பேசாமலே இருந்தார்கள்.

மகாதேவனின் இருக்கையின் பின்னால், வலது புறமாக சுவருடன் இரண்டு பலகைகள் பொருத்தப்பட்டு இருந்தன. அவற்றில் ஒன்றில் ஒரு எக்ஸ்ரே படத்தையும் மற்றையதில் கைகளினால் வரையப்பட்ட படம் ஒன்றினையும் தனது மேசையின் அறையில் இருந்து எடுத்துப் பொருத்தினார்.

"இவையிரண்டுமே உங்கள் பிள்ளைகளினுடையவைதான். ஒன்று எக்ஸ்ரே, இது உங்களுக்கு அவ்வளவு தெளிவாக இராது என்பதனால், மற்றயதைக் கைகளினால் கீறிக் கொண்டு வந்திருக்கிறேன். இந்த, கையாலை கீறின படத்தைப் பாருங்கோ. எல்லாம் தெளிவாய் இருக்கு" என்றவர் கைகளினால் வரைந்த படத்தின் சில இடங்களைச் சுட்டிக் காட்டியபடி தொடர்ந்தார்.

**தொடர்கதை -** பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

## ◇ சி.வி. நாதன் ◇

"உங்கடை பிள்ளைகள் உண்மையில் இரட்டைப் பிள்ளையளா-கத்தான் பிறந்திருக்க வேணும். ஏதோ ஒரு காரணத்தாலை இருவரையும் பிள்ளைகள் உருவான காலத்திலை இருந்தே சவ்வு போன்ற ஒன்று இணைச்சுப் போட்டுது. ஆனாலும், மற்றய ஒட்டிப்பிறந்த குழந்தைகள் போலை பிரச்சனையான ஒண்டு இல்லை. சிக்கல் மிகக் குறைவானது. வைத்தியத்தைப் பொறுத்தவரையில் சிக்கலே இல்லை எண்டுதான் சொல்லவேணும். இருவரையும் வெறுமனே ஒரு சவ்வுதான் இணைச்சு வைச்சிருக்கிது. திரும்பவும் சொல்லுகிறேன், இரட்டையர்களாகப் பிறந்திருக்க வேண்டியவர்கள், இந்தச் சவ்வாலைதான் இணையர்களாகப் பிறந்திருக்கின்றார்கள்" என்றவர் படத்தில் அந்தச் சவ்வு இருப்பதைக் காட்டினார்.

இருவரும் பார்த்தார்கள். சவ்வு எனக் குறிப்பிட்ட இடத்தைக் கவனித்தார்கள். வெறுமனே சவ்வு மாதிரித் தெரியவில்லை. ஏதோ நூல்கள் இடையில் சிக்கிப் பிணைந்திருப்பது போலத் தெரிந்தது. அது என்ன என்று கேட்பதற்கு முன்பதாகவே மகாதேவன் தெடர்ந்தார்.

"இருவரது உடற் தொழிற்பாடுகள் கூட வேறுவேறானவைதான். ஒருவரது மூளையின் செயற்பாட்டுச் செல்வாக்கு மற்றயவரை எந்த விதத்திலும் பாதிக்காது. ஆனாலும்" பேச்சுத் தமிழில் இருந்து கொஞ்சமாய் விலகிக் கதைக்கத் தொடங்கியவர் கொஞ்சம் இடைவெளிவிட்டுத் தம்பதிகளைத் திரும்பிப் பார்க்க, நாயகமும், திலகமும் படங்களில் இருந்து பார்வையைத் திருப்பி மகாதேவனைப் பார்த்தார்கள். அவர்களது பார்வையில் ஏதோ அவசரம் தெரிந்ததைக் கவனித்தார் மகாதேவன்.

மீண்டும் படங்களின் பக்கமாகத் திரும்பிய மகாதேவன்,

"இப்ப இந்தச் சவ்வுப் பகுதியைப் பாருங்கள், இந்தப் பகுதியை மட்டும் பெரியதாக வரைந்துள்ளேன்" என்றவர், கைகளினால் வரையப்பட்டிருந்த படத்தின் இடது பக்கமாக பெரியதாக வரையப்பட்டிருந்த சவ்வுப் பகுதியை மட்டும் காட்டும் படத்தைக் காட்டினார்.

சின்னதாக, பாம்புகள் பின்னி நெளிந்திருப்பது போல இருந்தது.

"இதிலைதான் கொஞ்சம் சிக்கல். இன்பனின் நரம்புகளும் இனியனின் நரம்புகளும் இந்த இணைந்த சவ்வுப் பகுதில் உள்ளன. சும்மா இருந்தாலும் பரவாயில்லை, ஒன்றுடன் ஒன்று பின்னுப்பட்டு இருக்கின்றன. இதுதான் இந்த இணைப்புச் சவ்வினை வெட்டுகையில் உள்ள சின்னச் சிக்கல்"

இதுவரையில் ஏதோ வெறும் பரபரப்புடன் இருந்த தம்பதிகள் இப்போ கொஞ்சம் கொஞ்சமாய் பயப்படவும் தொடங்கினார்கள். திலகத்திற்கு ஏனோ தெரியவில்லை, இராமலிங்கம் சொன்னவை ஞாபகத்திற்கு வரத் தொடங்கியது.

இருவரையும் பார்த்த மகாதேவன் "இதிலை பயப்படுவதற்கு ஒன்றுமேயில்லை. சின்னச் சிக்கல்தான். இதை உங்களுக்குச் சொல்லியிருக்கவே தேவையில்லை. ஆனால் அமெரிக்காவில் இருந்து ஒப்பரேசனுக்காக வாற டொக்டர்தான் கட்டாயமாக நீங்கள் இதைப் பற்றி அறிந்திருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்." என்ற மகாதேவன் தொடர்ந்தார்.

"இப்ப நாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்றால்" என்றவர் சிறிது நிறுத்தி ஆறுதலா, நல்ல தெளிவாகக் கூறத் தொடங்கினார்.

- இன்னமும் வரும்


Served Over 15 Years In Toronto
Now in Richmond Hill





NTE AUTO INC.
New Trade Engineering
MS7 Quality Used Car Sales
346 Newkirk Road, #16, Richmond Hill Tel: 905-770-2575
416-399-6640
சகல விதமான வாகனங்கள் திருத்தும் நிலையம்
தற்போதைய விசேட கழிவு சேவைகள் சில....

எங்களுடன் தொடர்பு கொண்டு Towing செய்து வருபவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

| | |
|---|---|
| Front Brake Service From | $109. 95 |
| Rear Brake Service From | $109.95 |
| Transmission Service From | $ 99.95 |
| Lube & Oil Service From | $ 29.95 |
| Tire Change & Balancing From | $ 14.95 |
| Engine Tune up from | $159.95 |
| Air Conditioning Service From | $ 49.95 |
| Computer Scanning from | $ 39.95 |

We do BMW Service & Maintenance




Many more special, please contact for more information.

# ஈழத்தின் புலமைப்பாலமும், கலைப்பாலமும்

16

என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள், நலம்பெறப் பிரார்த்திக்கிறேன்.

நமது தமிழ் வாழ்வில் பல பதிவுகளும், ஆவணங்களும் இருந்தன. நம்மை நாம் அறியவும், பிறர் நமது அடையாளங்களைப் பார்த்து, நம்மைக் கணித்து மதித்து ஏற்றுக்கொள்ளவும் இன்று அவை உதவி வருவதைக் காண்கிறோம். ஒப்பிலக்கணம் எழுதிய கால்ட் வேலுக்கும் தமிழைச் செம்மொழி என்று நிறுவிய அமெரிக்கப் பேராசிரியர் ஜோர்ஜ் கார்ட்டுக்கும் பதிவுகள் பயன்பட்டன. இவ்விருவரும் நம்மவர்கள் அல்ல. நம் இனத்தை உலகுக்கு உயர்த்திக் காட்டிய உத்தமர்கள். இன்று பதிவு செய்து வைக்கும் முயற்சிகள் எம்மவர்களாலே தொடர்வது பாராட்டுக்குரியது.

தமிழர்தம் ஐம்பெருங்காப்பியங்களைத் தேடிப்பிடித்து தமது தள்ளாத வயதிலும் தமிழ்த் தொண்டு என்ற தடத்தில் பயணித்து அக்காப்பியங்களைத் தமிழ் உலகுக்கு தந்த தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரை தமிழ் உலகம் மறக்க முடியுமா? பேராசிரியர் மனோன் மணியம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் வாழ்க்கை வரலாறும், உ.வே.சாவின் சுயசரிதை என்ற தன்நிலை விளக்கத்தையும், வாழ்வையும் தமிழ் மொழியில் முதன்முதலாக அறிமுகம் செய்து வைத்ததினாலே தான் பின் நாட்களில் பல எழுத்தாளர்களும், சமூகப்பற்றாளர்களும் வாழ்க்கை வரலாறுகளை எழுதினார்கள். நமக்குத் தெரியாத பல விடயங்களைத் தெரிய வைத்தார்கள்.

மொழி உணர்வும், குடும்ப உணர்வும், சுற்றம் தழுவும் உறவுப் பேணலும், கடவுள்பற்றும், தேசப்பற்றும் நமக்குள் அரும்பி வளர அவர்கள் செய்த பதிவுகளும், தேடிய ஆவணங்களும் உதவுகின்றன. தமிழ் மண்ணை மன்னர்கள் ஆண்டகாலத்தில் கல்வெட்டு, மெய்கீர்த்தி என்ற ஊடகங்களால் தமது ஆட்சிச் சிறப்பையும் தமிழ் மொழியின் மாட்சிச் சிறப்பையும் பதிவு செய்தார்கள். அவர்களின் செயல்பாட்டிற்கு உற்சாகம் கொடுத்தவர்கள். அன்றைய புலவர்களே. புலவர்கள் செய்த பதிவுகளும் கூறிய கருத்துகளும் தமிழியலுக்கு உதவியது. இன்று அவை அனைத்துமே நமது உணர்வுக்கும் உந்துதலுக்கும் செயலூக்கத்திற்கும் உதவுகின்றன.

நண்பா அரசர்கள் தமது வெற்றிகளையும், நாடுகாத்த நன்நெறிகளையும் கல்லிலே பதித்து வைத்ததினாலே தான் அதற்கு ‘கல்வெட்டு’ என்று பெயர் உண்டாயிற்று. இக்காலத்தில் நமது மக்கள் ஒருவரின் இறப்புக்குப் பின்பு அவர்களுடைய குலமுறை கிளத்தலையும், பணிகளையும் பதித்து வைக்கும் புத்தக உருவத்திற்கு கல்வெட்டு என்றே பெயர்சூட்டிக் குறிப்பிட்டனர். இது கல்லில் வெட்டப்படுவது இல்லை. கடதாசியில் சொல்லால் வெட்டப்படுவது. ஆதலால் இதனைச் சொல்வெட்டு என்றே குறிப்பிடவேண்டும் என்று நான் அன்று எழுதியதைப் பேராசிரியர் கா.சிவத்தம்பி புதுச் சொல் ஆக்கத்தில் இதனையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறியதும் நினைவுக்கு வருகிறது.

சுவாமி விவேகானந்தருடைய சொற்பொழிவு நாடா ஒன்று எங்கோ இற்றுப் போன நிலையில் கண்டு பிடிக்கப்பட்டதாக ஒரு பத்திரிகைச் செய்தி கூறியது. அது மீள் பதிவு செய்யப்பட்டதா என்பது தெரியவில்லை. இவைபோல் பல அறிஞர்களின் கடிதங்கள் சேகரிக்கப்பட்டிருப்பதும் தெரியவருகிறது. நமது ஈழத்தமிழ், தமிழ் இனம் என்ற வட்டத்துக்குள்ளே நமது மூதாதைகள் பதித்து வைத்த ஆவணமாக்கிய பல விடயங்கள் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. யாழ்ப்பாணம் பொது நூல் நிலையத்தில் சேகரித்து வைக்கப்பட்டவை தீயோரால் தீக்கிரையாகின. வேறு பல ஏடுகளும், பாட்டுக்களும், பதிவுகளும் மூலை முடுக்குகளில் கிடக்கின்றன. இவற்றை நாம் தேடிக்கண்டு பிடிக்க வேண்டும். இன்று நமது தாயக மக்களின் அவலச் சூழ்நிலையை மாற்றுவதற்கு உதவும் முதல் கடமையோடு, நமது பழைய பதிவுகளைத் தேடிச் சேகரிக்கும் பணியிலும் நமது கவனம் இருக்க வேண்டும். இவை பாரம் பரியத்தைத் தெரிந்து வாழ வேண்டிய நமது இளையதலைமுறையினருக்கு மிகவும் தேவையானவை. சென்னையில் உ.வே.சா. நூல் நிலையத்திலும், கன்னி மாரா நூல் நிலையத்திலும் உள்ள ஏடுகளும், சுவடிகளும், நூல்களும் அங்குள்ள தமிழ் மக்களும் பழையன அறியவும், புதியன பதியவும் உதவுகின்றன.

இந்தக் காலத்தில் நம்மவர்கள் பதித்துவைக்கும் பதிவுகள் அனுபவச் சேகரிப்பாய் ஆற்றல் அளவுகளாய், சேவைச் சேகரிப்பாய், அறிவுக்களஞ்சியமாய், கலைநுட்பப் பரிமாணங்களாய் இன்றும், இனிவரும் காலத்திலும் தெரிந்து கொள்ள உதவும் நூலாகவும், ஒளிநாடாவாகவும் பதியப்படும் வாழ்வும், வரலாறும், தரிசனங்களும், கலை இலக்கிய, கலாச்சாரவெளிப்பாடுகளும் நமது இனத்தின் இருப்புக்கும் அடையாளச் சிறப்புக்கும் அணிசெய்யும் தேட்டங்களாய் உதவும். புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் மூத்த அறிஞர்களிடமும், முதிர்ந்த பெரியவர்களிடமும், வாழ்க்கைப் போராட்டத்தில் தழும்பு பட்டவர்களிடமும் உறைந்து கிடக்கும் உண்மைகளும், உன்னதங்களும், ஈழத்து உணர்வுகளும், உறவுமுறைகளும், பண்பாட்டு விழுமியங்களும், நாகரிகச் சிறப்பும் பதியப்படவேண்டியவை. நேரமின்மையும், நெருக்கடிகளும் சுவாத்திய சீதோஷ்ணச் சூழலும், வேலைத்தொல்லைகளும், வாழ்க்கை அழுத்தங்களும் உள்ள புலம் பெயர்வாழ்வில் தமிழியல் சார்ந்த சேவைகள் செய்பவர்களும், பதிவுகள் செய்பவர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

நண்பா! பொதுவரலாற்றில் சுயசரிதமும், பொது நலத்தில் சுயநலமும் தலை தூக்குவது இன்றைய தலைவிதியா? முற்காலத்தில் கலப்பற்ற பொதுவரலாறும், பொய்மையற்ற சுயவரலாறும் இருந்தது. இன்று கலப்படம் இல்லாத தனிப்படம் காண்பது அரிதாக உள்ளது. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஓர் அமெரிக்க சமூக இயல் விமர்சகர் சொன்னது நினைவுக் வருகிறது. ‘இனிவரும் காலத்தில் சிறுகதை, நாவல், கட்டுரை என்று எழுதும் எழுத்தாளர்கள் தங்களை அறியாமலேயே, தங்கள் சுய சரிதையையும் கலந்து எழுதுவார்கள். இது காலத்தின் கட்டாயம் இல்லை. காலத்தின் கோலம்’ என்றார். உண்மைதான் ஆனால் பொது நலத்தில் சுயநலம் கலப்பது காலத்தின் கட்டாயமும் இல்லை. காலத்தின் கோலமும் இல்லை. எழுத்துத்துறையில் உண்மைப்பதிவுகள் தேவையே. இதற்குச் சுயச்சுவடிகளும் சுவறி காலச்சுவட்டினைப் பிரகாசப்படுத்தலாம்.

நண்பா!
1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்திலே நடந்த முத்தமிழ் விழா பதிவுக்குரியது. மக்கள் தொகைக் கூட்டத்தை கடல் அலை என்பதா? தலை அலை என்பதா? வெள்ளம் போல் தமிழர் கூட்டம் விரைந்திணைந்த காட்சி என்னே! அதனைக் கண்ட மக்கள் இன்றும் புலம்பெயர்ந்த நாடுகளில் வியப்போடும் பேசி மலரும் நினைவுகளில் மிதக்கிறார்கள். அன்றைய மக்கள் தொகையை கோயில் கும்பாபிஷேகத்தோடு அல்லது கும்பகோணக் கும்பமேளாவோடு ஒப்பிடலாம். கோட்டை மதில்களிலும் பூவரசம் மரங்களிலும், நிறுத்தி வைத்தமோட்டார் வாகனங்களிலும் மனிதத்தலைகள் பண்ணைக்கடலே பரவசத்தால் ஆர்ப்பரித்து எழுந்து தணிந்தது. மக்கள் உணர்ச்சிகளில் ஈழத்தமிழியத்தின் இதய நாத ஓசைகள் அரங்க நிகழ்வுகள் அத்தனையும் ஈழத்தேசியத்தின் கூறுகளையும், பழமைகளையும், புதுமைகளையும் ஆடலாய், பாடலாய், அறிஞர் கூடலாய், கருத்து தேடலாய், தேச நாடலாய் அமைந்தன.

மூன்றாம் நாள் அந்த அரங்கிலே மக்கள் அலை எதிர்பார்த்த பட்டிமன்றத்தீர்ப்பு வெளியாகும் நேரம். முதல் நாள் இணுவில் விழாவிலே வழங்கிய தீர்ப்புக்கு அப்பீல்கேட்டு கோட்டை அரங்கிலே மேல்முறையீட்டு வாதம். இணுவில் பட்டிமன்றத்தில் நான் நடுவராய் கடமையாற்றியதால், மேல்முறையீட்டுப்பட்டி மன்றத்தில் எனது தீர்ப்பை முன்மொழிந்து வாதிட வேண்டும். மேல்முறையீட்டு மன்ற நீதிபதிகள் கவனத்தில் என் தீர்ப்புவைக்கப்பட்டது. பின்பு வாதங்கள். காரசாரமாய் கனல்கக்க அனல் தெறிக்கச் சூடு கிளப்பியது. மக்கள் கைதட்டி விசில் அடித்து வரவேற்றனர். உற்சாகம் தந்தனர். பட்டி மண்டபத்தின் தலைப்பு காலத்துக்கு ஏற்ற தலைப்பானது. மரபு தொடர்வதா? புதுமை மலர்வதா? என்பது அது.

கலாநிதி. கா. சிவராமலிங்கம், கலாநிதி.க.சொக்கலிங்கம், கலாநிதி. நா. சுப்பிரமணியன். நயினை விரிவுரையாளர் க.குமாரசாமி. கம்பவாரி தி.இ.ஜெயராஜ். ஆறுதிருமுருகன், க. திரு. நந்தகுமார், க.குமாரதாசன். வேறும் இருவர். பெயர்கள் மறந்து போய்விட்டது. மூளைப்பதிவை முதுமை அழித்து விடுமா? ஈழத்தமிழ் தாயகத்தை, ஈழத்தமிழ் அடையாளத்தை, ஈழத்தமிழ் இறைமையை, ஈழத்தமிழ்கட்டமைப்பை, ஈழத்தமிழ் கலப்பற்ற தூய்மையை ஈழத்தமிழரின் உறவை இறுக்கத்தை இதயசுத்தியை, இதய வேட்கையை மரபுப்பார்வையிலும், புதுமைப்பார்வையிலும் நிறுவிய அறிவுடைமையும், ஆற்றலும் ஆன்றகுடிப்பிறப்பின் உரிமை வேட்கையும் அதிசயம் காட்டி வியப்பூட்டியது. இந்தப்பட்டிமன்றத்தை அன்று நான்கு V.D.O Camera க்கள் படம்பிடித்தன.

நண்பா!

அந்த நிகழ்வினை கனடாவிலே 2006ஆம் ஆண்டு, கனடா யாழ். இந்துக்கல்லூரிச் சங்கமும், புங்குடுதீவு பழைய மாணவர் சங்கமும் இணைந்து உருவாக்கிய ‘சிற்பிகள் சிற்பி சிவராமலிங்கம்’ என்ற நூலில் இன்று மார்க்கம் நகரசபை கவுன்சிலராய் விளங்கும் லோகன் கணபதி எழுதிய பகுதி இது.

‘யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்திலே நடந்த முத்தமிழ் விழாப்பட்டி மண்டபத்தில் சிவராமர் ஐயா, சொக்கன் ஐயா, விரிவுரையாளர் நயினைக்குமாரசாமி ஐயா, புலவர் ஐயா முதலியோர் நீதிபதிகளாயும், பேராசிரியர் நா.சுப்பிரமணியன், கம்பன் கழக ஜெயராஜ் ஆறுதிருமுருகன், திரு. நந்தகுமார், க. குமாரதாஸ் மற்றும் மூவர் இணைந்து வாதிட்ட நிகழ்வினை நான்கு Vedio Camera க்கள் படம்பிடித்தமையும் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூடி நின்று கேட்டமையும் இந்தியாவில் கூட இப்படி ஒரு பட்டிமன்றம் இதுவரை நடக்கவில்லை எனப் பத்திரிகைகள் விதந்து எழுதியமையும் சிவராமர் ஐயா பற்றிய சிந்தனையில் வரக்கூடியனவே’.


யாழ். கோட்டை மைதானத்தில் நடந்த பட்டிமன்றத்தில் கலந்து கொண்டவர்களில் நானும், கலாநிதி நா.சுப்பிரமணியனும் இன்று கனடாவில். மற்றையோர் ஈழத்திலும் வானத்திலும் வாழ்கிறார்கள்.

நண்பா!

அந்தப்பட்டிமன்றத்தில் Video இன்று இருக்கிறதோ இல்லையோ! எங்காவது மறைந்து கிடந்து எமது கையில் கிடைக்கவேண்டும் என்று பிரார்த்திப்போம். அந்தப் பதிவு நம் தேசத்தின் பொக்கிசங்களில் ஒன்று. இல்லை என்று ஏன் நினைக்க வேண்டும்? இருக்கிறது என்று நினைப்போம். அது ஒரு நாள் வெளிவரும். வரவேண்டும். கடவுளைப்போல.

வேறு என்ன?
பிறபின்பு

அன்பு
ஈழத்துச்சிவானந்தன்.



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

# பல பெருமைகள் பெற்ற பதி - திருக்கடையூர்

எமன் பயம் நீக்கும் தலங்களாக புகழ்பெற்றவை திருக்கடையூர், திருவீழிமிழலை, திருவையாறு, திருவெண்காடு, திருவைகாவூர் ஆகியவை ஆகும். இவற்றுள் மிகவும் பிரசித்தி பெற்ற தலம், திருக்கடையூர். சஷ்டியப்த பூர்த்தி (மணிவிழா), சதாபிஷேகம், ஆயுள்ஹோமம் முதலியவை செய்ய வேண்டுமென்றாலே திருக்கடையூரைத்தான் முதலில் சொல்வார்கள். வேறு தலத்தில், இச்சாந்திகள் செய்ய நேர்ந்தாலும் திருக்கடையூர் மூர்த்தியை நினைத்துத்தான் செய்ய வேண்டும் என்பது ஐதீகம். மேலும், சிவபெருமானின் அட்ட வீரட்டத் தலங்களுள் (எமனை உதைத்த தலம்) ஒன்று, விநாயகரின் அறுபடை வீடுகளில் ஒன்று, உள்ளமுருகப் பாராயாணம் செய்யப்படும் அபிராமி அந்தாதி பாடிய அபிராமி பட்டர் அவதரித்த புண்ணிய பூமி, அப்பரும் சம்பந்தரும் ஒருசேர எழுந்தருளி, இறைவனைத் தொழுது பெருமை பெற்ற பதி, இப்படிப் பல முக்கியத்துவங்கள். ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.



## வழிப்போக்கன்

## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 76

திருக்கடையூர் கோயில், 2000 வருடங்கள் பழமை கொண்டது. இதன் மூலவர் அமிர்தகடேஸ்வரர், உற்சவர்: காலசம்ஹாரமூர்த்தி, அம்மன்: அபிராமி. திருக்கடவூர் வீரட்டம், கடபுரி, வில்வாரண்யம், பிரமரந்திரத்தலம், பாபவிமோசன புண்ணிய வர்த்தம் என பல பெயர்களில் திருக்கடையூர் பழங்காலத்தில் அழைக்கப்பட்டுள்ளது. திருக்கடையூர் செல்வதற்கு முன்னால் அதன் தல வரலாற்றைத் தெரிந்துகொள்வது அவசியம். குறிப்பாக அதன் சிறப்புக்குக் காரணமான மூன்று விஷயங்களையாவது கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும்.

முதலில் வினாயகரைப் பற்றி சொல்லுகிறேன். முன்னொரு காலத்தில், தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்தார்கள். ஆனால் அதற்காக, அவர்கள் முழு முதற் கடவுளான வினாயகரை பிரார்த்திக்க மறந்து விட்டார்கள். அதனால், வினாயகர் அந்த அமிர்தத்தை எடுத்துகொண்டு வந்து திருக்கடையூரில் ஒளித்து வைத்து விட்டார், பிறகு உண்மை அறிந்து, வினாயகர-ிடம் மன்னிப்பு கேட்டு, தேவர்கள் அந்த அமிர்தத்தை அருந்தினார்கள். திருமால் முதலிய தேவர்கள், தூயதோர் இடத்தில் உண்ண வேண்டுமென்று அமுதக் கடத்தை இங்கு கொண்டுவந்து வைத்தமையால், 'கடபுரி' அல்லது
'கடவூர்' என்ற பெயர் உருவானது என்பது தலவரலாறு. அந்தக் குடம் லிங்க வடிவில் நிலைத்து நின்றபடியால் திருக்கடவூர் லிங்கேஸ்வரர் அமிர்தகடேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார்.

இரண்டாவது, மார்க்கண்டேயர் கதை. மார்க்கண்டேயர் இறையருள் பெற வழிபட்ட நூற்றியெட்டு தலங்களுள், இக்கோயில் கடைசி தலம் என்பது குறிப்பிடத்தக்கது. மிருகண்டு முனிவர் என்பவரும் அவரின் மனைவியும் புத்திரப் பேறு வேண்டி இறைவனை வழிபட்டு வந்தனர். அவர்கள் பக்தியை மெச்சிய இறைவன், அவர்கள் முன் தோன்றி ஆயிரம் ஆண்டுகள் வாழும் துர்க்குணங்கள் நிறைந்த மகன் வேண்டுமா அல்லது 16 வயது வரை மட்டும் வாழும் தலைசிறந்த மகன் வேண்டுமா என்று கேட்டார். மிருகண்டு தம்பதியினர் 16 வயது மகனே வேண்டும் என்று வரம் கேட்டனர். மிருகண்டு தம்பதியருக்கு இறைவன் அருளால் பிறந்தவர்தான், சிறந்த சிவபக்தரான மார்க்கண்டேயர் (பிரம்மா). அவருக்கு 16 வயது நடக்கும் போது, அவரின் பெற்றோர் இறைவன் கூறியபடி, அவருக்கு விதிக்கப்பட்ட ஆயுள் 16


தொடர்ச்சி 36ஆம் பக்கம்



# இரும்புக்கோட்டை முரட்டு சிங்கம் - திரை விமர்சனம்

தமிழ் சினிமாவில் இது எதிர்பார்ப்புகள் பொய்க்கும் காலம் போலும். விஜயின் ‘சுறா’, அஜித்தின் ‘அசல்’ என நட்சத்திர நடிகர்கள் படங்களின் தோல்விகள் ஒருபக்கம், இன்னொரு பக்கம், முன்னணி நடிகர்கள் இல்லாவிட்டாலும், புதிய கதைக்களுனுடன் வித்தியாசமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட ‘ரெட்டைச்சுழி’, ‘அவள் பெயர் தமிழரசி’ போன்ற படங்களின் ஏமாற்றம். இந்த வரிசையில் கடைசியாக வந்து நிற்கிறது, ‘இரும்புக் கோட்டை முரட்டு சிங்கம்.’ ‘இம்சை அரசன் 23ஆம் புலிகேசி’ இயக்குநர் சிம்புத்தேவனின் மூன்றாவது படம், தமிழில் ரொம்ப நாளுக்கு பிறகு வந்திருக்கும் முழு நீள கௌபாய் படம் என்று ஏகப்பட்ட எதிர்பார்ப்புகள். இருந்தும், ஒரு வித்தியாசமான கதைக் களனைத் தேர்ந்தெடுத்தும், திரைக்கதை, நடிகர்கள் தேர்வு, இசை... எனப் பல விஷயங்களில் சொதப்பியிருக்கிறார்கள்.

**- பிலிம் நியூஸ் கிருஷ்ணன் -**



பதினெட்டாம் நூற்றாண்டில் நடக்கும் ஒரு தமிழ் கௌபாயின் கதையாக துவங்குகிறது படம். ஷோலேபுரத்தில் வங்கியில் காவல்காரனாக பணிபுரிகிறார் சிங்காரம் என்னும் லாரன்ஸ். அந்த வங்கியில் முக்கிய பொருளாக இருக்கும் ‘டெக்ஸாஸ் முள்ளங்கி’ என்ற வைரம் காணாமல் போய்விடுகிறது. அந்த வைரக்கல் திருட்டு போவதற்கு அவர் தெரியாமலேயே காரணமாகிவிடுகிறார். இதனால், அந்த திருட்டுப் பழி அப்பாவியான சிங்காரம் மீது விழுகிறது. அவருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்படுகிறது. அவரை தூக்கு மேடைக்கு அனுப்புகிறார்கள். தூக்குமேடையில் இருக்கும் லாரன்ஸை கடைசி நிமிடத்தில் ஜெய்சங்கர்புரத்து நபர்களான மௌலி, இளவரசு, வையாபுரி, ரமேஷ் கண்ணா ஆகியோர் காப்பாற்றுகிறார்கள். அதற்கு கைமாறாக தங்களை இரும்புக்கோட்டை வில்லன்களிடமிருந்து காப்பாற்றி உதவ வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். அதைச் செய்தால், அவனுக்கு ‘டெக்ஸாஸ் முள்ளங்கி’ வைரத்தை மீட்டுத் தருவதாக கூறுகிறார்கள். அவன் செய்ய வேண்டியது, ஜெய்சங்கர்புரத்துக்குச் சென்று அவனைப் போலவே இருந்த சிங்கம் போல் நடிக்க வேண்டும். வைரத்திற்காக சாதுவான லாரன்ஸ், மாபெரும் வீரனான சிங்கம் லாரன்ஸாக நடிக்க சம்மதிக்கிறார். அதுமட்டும் இன்றி எதிரிகளுடன் பல இடங்களில் மோதி எதிர்பாராதவிதமாக வீரனாகவும் ஆகிவிடுகிறார். இதற்கிடையில் சுற்றியுள்ள கிராம மக்களை தனக்கு அடிமையாக்கி கொள்ள நினைக்கும் நாசர், பல நாட்களாக தேடி வரும் புதையலை தனக்கு தேடி கொடுக்க வேண்டும் என்று லாரன்ஸிடம் கேட்கிறார். அப்படி கொடுத்து விட்டால் உங்கள் கிராமத்தை எனது கட்டுப்பாட்டில் இருந்து விடுவித்து விடுகிறேன் என்று கூறுகிறார். புதையலை தேடி புறப்படுகிறார் லாரன்ஸ். இனிமேல் கதை எப்படிச் செல்லும் என்பதை உங்களாலேயே ஊகித்துக்கொள்ள முடியும். அப்படித்தான் முடியவும் செய்கிறது.

ராகவா லாரன்ஸ், சிங்கம் - சிங்காரம் என இரட்டை வேடங்களில் வருகிறார். அப்பாவியாகவும் வீரனாகவும் நடிப்பது இவருக்கு புதிதில்லை, என்றாலும், ‘கௌபாயாக’ மாறுபட்ட வேடத்தில், முத்திரை பதிக்கும் வாய்ப்பும் இருந்தும் கோட்டை விட்டிருக்கிறார்.

பத்மப்ரியா, சந்தியா, லட்சுமிராய் என மூன்று நாயகிகள். மூவருக்கும் தலா ஒரு பாடல், லாரன்ஸுடன் சில காட்சிகள் என கணக்கு போட்டு காட்சிகளை பகிர்ந்து கொள்கிறார்கள். பத்மப்பிரியா, லாரன்ஸின் காதலியாக வருகிறார். சந்தியா, காட்டுவாசித் தலைவரின் மகளாக வந்து, கொஞ்ச நேரம் லாரன்ஸை காதல் பார்வை பார்த்துவிட்டு, ஒரு பாட்டுக்கு நாட்டியம் ஆடிவிட்டு காணாமல் போகிறார். லட்சுமிராய், இரும்புக்கோட்டை எதிரிகளாக நாசருடனும் சாய்குமாருடனும் இணைந்து வில்லத்தனம் செய்கிறார்.

இவர்கள் தவிரவும் கணக்கு வழக்கு இல்லாமல், படம் முழுக்க நிறைய நகைச்சுவை நடிகர்கள் இருக்கிறார்கள். மௌலி, வி.எஸ்.ராகவன், இளவரசு, மனோரமா, எம்.எஸ்.பாஸ்கர், செந்தில், வையாபுரி, பசுபதி... இன்னும் நிறைய. இவர்களில் எம்.எஸ்.பாஸ்கர் நடிப்பு மெச்சத்தக்கதாக இருக்கிறது.

ஜி.வி.பிரகாஷ் இசையில் படத்தில் பாடல்கள் சொல்லிக்கொள்ளும்படியாய் இல்லை, பாடலே இல்லாமல் இருந்திருந்தால்கூட நன்றாக இருந்திருக்கலாம். ஆனால், பின்னணி இசையில் ஜமாய்த்திருக்கிறார்.

படத்தின் மிகப் பெரிய பலம் அழகப்பனின் ஒளிப்பதிவும் முத்துராஜின் கலையும்தான். இவர்கள் இருவரும் கௌபாயின் கலாசாரத்தை நம் கண்முன் நிறுத்துகிறார்கள். முக்கியமாய் பெரிய நிலப்பரப்பில் குதிரைகள் ஓடும் காட்சி, புதையல் தேடி போகும் இடத்தில் மலைகளுக்கு நடுவே தண்ணீரில் கடந்து போகும் காட்சி, என்று நெஞ்சில் நிற்கிறார் ஒளிப்பதிவாளர். கௌபாய் வீடுகள், ஆடை வடிவமைப்பில் நிறைய உழைத்திருக்கிறார் கலை இயக்குனர்.

ஏறக்குறைய மறந்துவிட்டிருந்த கௌபாய் கலாசார கதைகளை திரையில் கொண்டு வந்தமைக்காகவும், இந்த கால குழந்தைகளுக்கு அதை அறிமுகம் செய்து வைத்ததற்கும் இயக்குநர் சிம்புவுக்கு ஒரு சபாஷ் சொல்லலாம்.

சமூக கருத்துக்களை நகைச்சுவை போர்வையில் சொல்லுவதில் சிம்பு தேவன் வித்தியாசப்பட்டு தெரிகிறார். ‘இம்சை அரசன் 23ஆம் புலிகேசி’, ‘அறை எண் 305இல் கடவுள்’ ஆகிய முந்தையப் படங்களில் இதைக் கச்சிதமாகச் செய்திருந்தார். இந்தப் படத்தில் அப்படி நிறைய இருக்கிறது. குறிப்பாக, அணுகுண்டு ஒப்பந்த காட்சியில், இந்தியா, அமெரிக்காவுடன் செய்த அணு ஆயுத ஒப்பந்தத்தை ஏ.எஸ்.ராகவன் கேள்வியின் மூலமாக விமர்சிக்கிறார். இதுபோல் படம் முழுதும் நடைமுறை சமூக பிரச்சனைகளை வசனங்கள் மூலம் தொட்டுப்போகிறார். தூக்கு தண்டனை நிறைவேற்றும் இடத்தில் காணப்படும் ‘இங்கு குரல்வளை நெரிக்கப்படும்’ என்ற வாசகம், ‘தின ஒப்பாரி’ என்ற நாளிதழ் பெயர், கோவில் ஐயருக்கும் கௌபாய் தொப்பி என்று பல இடங்களில் சிம்புதேவனின் குறும்புகள் பளிச்சிடு கின்றன. அமெரிக்கா, இலங்கை, இந்தியா, தமிழ்நாடு அரசியல் குறித்து சிம்புதேவன் நக்கல் வசனங்கள் நன்றாக இருக்கின்றன.

பொதுவாக கௌபாய் படங்களில் தவறாமல் இடம்பெறும் குதிரை ‘சேசிங்’ காட்சிகள் இப்படத்தில் ‘மிஸ்ஸிங்’. அதுவே, இப்படத்தில் ஒரு பெரும் குறையாக இருக்கிறது. தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் போல, தலையில் தொப்பி போட்டவன் எல்லாம் கௌபாய் என்பது போல் படம் முழுக்க வருகிறார்கள். இதையும் தவிர்த்திருக்கலாம்.

ஏதாவது தமிழ் படம் பார்த்துதான் ஆகவேண்டும் என்றால் மட்டும், இரும்புக் கோட்டை முரட்டுச் சிங்கம் பார்க்கலாம்.

# ஈழத்தின் கதை...

கருப்பு, அஞ்சலி, கார்த்திகா, சுகுமாரியம்மா, வி.எஸ். ராகவன்... இப்பிடி நிறைய பேர் நடிக்கறாங்க. வித்யாசாகர் இசை. வைரமுத்து, அறிவுமதி, பச்சியப்பன் எல்லாரும் பாடல்கள் எழுதியிருக்காங்க. அற்புதமான தொழில்நுட்பக் கலைஞர்களும், நடிகர்களும் இருக்காங்க. இந்தப் படத்தோட தயாரிப்பாளர் மணிவண்ணன் தமிழ் உணர்வாளர்.”

உங்களுடைய குடும்பப் பின்னணி என்ன? நீங்கள் எப்படி சினிமாவுக்கு வந்தீர்கள்?

வ. கௌதமன்: “எனக்குக் கடலூர் மாவட்டம்தான் மண். அங்க திட்டக்குடி அப்பிடிங்கற சிறிய நகரம் இருக்கு. அதுலருந்து ஆறு கிலோ மீட்டர் தள்ளியிருக்கிற ‘பாளையம்’ங்கிற ஒரு சின்ன கிராமம். அதிகபட்சம் 250, 300 வீடுகள் உள்ள சின்ன கிராமம். என்னுடைய மண்ணுக்கும் சினிமாவுக்கும் எந்த சம்பந்தமும் இல்ல. என்னுடைய சொந்தங்கள் மட்டுமில்லை, என்னுடைய சுற்றுவட்டாரத்துலயே யாருக்கும் சினிமாவோட தொடர்பு இல்ல. சினிமா பாக்குறது மட்டும்தான் அந்த மக்களோட வாழ்க்கையில் ஒரு பகுதியா இருந்தது. நான் சினிமாவுல நடிக்கணும்னு முடிவு பண்றேன். சென்னைக்கு வர்றேன். எங்க அப்பா, ஒரு தீவிர கம்யூனிஸ்ட். அவரோட தொடர்பில், சென்னையில பழ. நெடுமாறன் அய்யா முகவரியையும், ஆனைமுத்து அய்யா முகவரியையும் மட்டும்தான் குடுக்குறார். இவங்க ரெண்டு பேருக்கும் சினிமாவுக்கும் சம்பந்தம் இல்ல. அதனால நான் அவங்களையும் பாக்கலை. சென்னைக்கு வந்தவுடனே எங்க போறதுன்னு தெரியல. ஏ.வி.எம். ஸ்டுடியோவுல செக்யூரிட்டி என்னை உள்ளே விட மாட்டேங்கறான். நான் கோடம்பாக்கத்துலயே இருந்து நடிக்க வாய்ப்புத் தேடணும்னு முடிவு பண்ணினேன். அப்போ இயக்குநர் வி. சேகர், ‘நீங்களும் ஹீரோதான்’னு ஒரு படம் இயக்குறார். அந்தப் படத்துல ஒரு சின்ன கதாபாத்திரம் எனக்குக் கிடைச்சது. தொடர்ந்து வரும், வசனம் பேசுற ஒரு பாத்திரம். அந்தப் படத்துல நான் நடிச்சு, படமும் வெளிய வருது. ஊரெல்லாம் என்னைப் பாத்து, ‘இவன் அந்தப் படத்துல நடிச்சிருக்கான்’னு பேசுறாங்க. ஆனா, அந்தப் படம் பெரிய அளவுக்குப் போகல. மறுபடியும் எனக்கு நடிக்க வாய்ப்புக் கிடைக்கல. நான் உதவி இயக்குநரா ஆகிறேன். பாலு ஆனந்த் அப்பிடிங்கற இயக்குநர்கிட்ட உதவி இயக்குநரா சேர்ந்தேன். அதுக்கப்புறம் தங்கர் பச்சான் உதவியாலதான் சிவசக்தி பாண்டியன் படத்துல இணை இயக்குநரா ஆனேன். ‘காதலே நிம்மதி’, ‘கண்ணெதிரே தோன்றினாள்’ இந்தப் படத்துல எல்லாம் வேலை செய்யறேன். அதுக்கப்புறம் முரளி, சிம்ரன் நடிச்ச ‘கனவே கலையாதே!’ படத்தை இயக்கினேன். அதுக்கப்புறம் உள்ள கதை உங்களுக்கே தெரியும்.

என்னை ஒரு தமிழாசிரியரா ஆக்கணுங்கறதுதான் என் அப்பாவின் விருப்பம். நான் சென்னைக்குப் போகணும்னு சொன்ன உடனே வீட்ல பெரும் சண்டை. எல்லாரும் போகக்கூடாதுன்னு சொல்றாங்க. என் பாட்டிதான் தன்னோட சுருக்குப் பையில இருந்து ஒரு நூறு ரூபாயை எடுத்துக் குடுத்து, ‘நீ போ! சினிமாவுல ஜெயிப்பே!’ன்னு வாழ்த்து குடுத்தாங்க. ஒரு நாள் ராத்திரி, நான் என் நண்பனோட பஸ் ஏறினேன். ஏறும்போது, ‘திரும்ப ஊருக்கு வந்தா வெற்றியோடதான் வரணும்’னு முடிவு பண்ணி ஏறினேன். கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகள் நான் என்னோட ஊருக்கே போகலை. ஆனா, ஏழு ஆண்டுகள்ல என்னால ஜெயிக்க முடியல. வேலை செய்யறேன். ஆனா, என்னால நான் நினைச்ச மாதிரி இயக்கவோ, நடிக்கவோ முடியல. ஒரு நாள், என் அம்மாவை கட்டுவிரியன் பாம்பு கடிச்சிருச்சுன்னு செய்தி வந்துச்சு.



அப்போதான் ஊருக்குப் போனேன். ஏழு வருஷம் கழிச்சிப் போனபோது, எனக்கு ஊர் அடையாளமே தெரியல. நிறைய மாற்றங்கள். அதிர்ஷ்டவசமாக என் அம்மா பொழச்சிக்கிட்டாங்க.”

அடுத்து என்ன?

வ. கௌதமன்: “‘சந்தனக்காடு’, ‘ஆட்டோ சங்கர்’ மாதிரி, ஈழத்தின் கதையை ஒரு உக்கிரமான படைப்பாக பதிவு செய்யணும் என்ற ஆசை இருக்கிறது. என் இனத்தை அழிச்சவங்களை யார் யார்னு தோலுரிச்சுக் காட்டணும். என் இனத்தின் விடுதலைக்காக என் படைப்பு பயன்படணும். அப்படி ஒரு வாய்ப்புக்காக நான் காத்துக்கிட்டு இருக்கேன். அந்தப் படைப்பு நிச்சயமாக சாத்தியமாகும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.”

# மொன்றியலில் மகாஜன கல்லூரியின் முத்தமிழ் விழா - 2010

மொன்றியலில் உள்ள Ecole Secondaire Marie Anne என்ற பாடசாலை உள்ளரங்கத்தில் சென்ற சனிக்கிழமை (01-05-2010) மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினர். இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபரும், பழையமாணவர் சங்க, சர்வதேச ஒருங்கிணைப்பாளருமான திரு. பொ. கனகசபாபதி அவர்களும், மகாஜனாக் கல்லூரி





பழையமாணவி வைத்திய கலாநிதி சர்வலக்ஷ்மி ஜெகனும் கலந்து கொண்டனர்.
மகாஜனக் கல்லூரி பழையமாணவர் திரு. எஸ். சபேசன் அவர்கள் ஆரம்ப உரைநிகழ்த்தி விழா வைத் தொடக்கிவைத்ததைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றும் நிகழ்ச்சி இடம் பெற்றது. இந்த நிகழ்வில் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க, கனடா கிளையின் தலைவர் திரு. இ. இரவீந்திரன், சிறப்பு விருந்தினர் திரு. திருமதி. ஜெகன், காப்பாளர்களான திரு. கதிர் துரைசிங்கம், திரு. வே. நந்தீஸ்வரர் ஆகியோர் கலந்து கொண்டனர். அதைத் தொடர்ந்து கல்லூரிக் கீதமும், தேசிய கீதமும் இடம் பெற்றன. கஜாந்தி அகிலனிடம் இசைப்பயிற்சி பெற்ற, லக்ஷிமி சிவபாலன், அஞ்சலா ராஜேஸ்வரன், லதிகா சிவநாதன், ஆகாஸ் சசிதரன், அபிலாஸ் சசிதரன், குகதாரணி கந்தசாமி, ரேணுகா சிவநாதன் ஆகியோர் இந்த நிகழ்வில் பங்குபற்றினர். வேணன் சிவபாலன் இதற்கு இசை வழங்கினார்.

**-மாலினி அரவிந்தன்-**

1910ம் ஆண்டில் இருந்து இன்று வரையிலான மகாஜனா வரலாறு பற்றிய, திரையில் மகாஜனா என்ற விவரணப்படம் ஒன்று காண்பிக்கப்பட்டது. ஞானசரவணபவானும் அவரது குழுவினரும் மகாஜனா பற்றிய வரலாற்றைத் தொகுத்துக் கொடுத்திருந்தனர். தொடர்ந்து இசை ஆசான் கீதவாணி தர்மாகரனின் உருவாக்கத்தில் இசை நிகழ்ச்சி ஆரம்பமானது. நிலக்சனா ஸ்ரீபாலன், சபேதா பேரம்பலம், ரம்யா எட்வேட், பாரதி நவரட்ணம், சன்ஜீவன் நவரட்ணம், நிருஜன் கிரிதரன், பிரணவன் பாலச்சந்திரன், ரிஷிகார் குகதாசன், அனோஜன் இரஞ்சன், கஜன் பரமசி-வம், விதுரன் ராஜரட்ணம், அருண் மகாதேவன், சஜீவன் ராஜ்நேரு, நீல் ஞானவேல், பவித்ரன் ஆதி, துஷிந்தன் கெங்கபாலன் ஆகியோர் இசை வழங்கிச் சபையோரை மகிழ்வித்தனர்.

பழையமாணவர் சங்கப் பொருளாளர் க. ஜெயேந்திரனின் வரவேற்புரையைத் தொடர்ந்து, அவசரம் அவசரம் என்ற சிறுவர் நாடகம் இடம் பெற்றது. மாவை நித்தியானந்தனின் பிரதியை நெறியாள்கை செய்தவர் ந. வசவதேவன். இதில் துபீஷன் ஜீவமோகன், ஜனகன் நந்தகுமார், கோபிகா ஜீவமோகன், சைந்தபி சிவசோதிநாதன், தர்சிகா தயாளசீலன், ஜனோஜன் நந்தகுமார் ஆகியோர் பங்குபற்றினர்.

அடுத்து பழைய மாணவர் சங்கத்தலைவர் இ. இரவீந்திரன் உரையாற்றினார். அவர் தனது உரையில், மகாஜனாவின் நூற்றாண்டு சாதனையையும், கனடா கிளையின் கடந்தகால ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் குறிப்பிட்டார். தொடர்ந்து தாரகா சற்குணபாலனின் உருவாக்கத்தில், சலங்கைக-ளின் ரீங்காரம் இடம் பெற்றது. இதில் நாட்டிய ஸ்ருங்கா மாணவர்களான ஜெசானா பாஸ்கரன், மேரிடினுஸா செலஸ்டீன், சாமந்தி சந்திரசிகாமணி, நேருஜா ரவீந்திரன் ஆகியோர் பங்குபற்றினர். அடுத்து மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களின் சிறப்புரை இடம்பெற்றது. மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு வரலாற்றைச் சுருங்கச் சொல்லி, மிகவும் ஆர்வத்தோடு முத்தமிழ் விழ-ாவைக் கண்டு களிக்க வந்திருந்த கலை ஆர்வலர்களைப் பாராட்டினார். படிப்பிலும் விளையாட்டுத்துறையிலும் மட்டுமல்ல, கலைத்துறையிலும் குறிப்பாக 1965ம் ஆண்டு தொடக்கம் 1969ம் ஆண்டுவரை தொடர்ந்து ஐந்து வருடங்கள் நாடகத்துறையில், அகில இலங்கைக்கான நாடகப்போட்டியில் முதற்பரிசு பெற்று மகாஜனாக் கல்லூரி முன்னணி வகுத்தது என்பதையும் இங்கே குறிப்பிடலாம்.

நாடகம் ஒன்று அடுத்து இடம் பெற்றது. மனவெளி கலையாற்றுக் குழுவின் தயாரிப்பில், சகாப்தனின் பிரதியாக்கத்தில் நாகமுத்து சாந்திநாதனின் நெறியாள்கையில் ஆக்குவாய் காப்பாய் என்ற நாடகம் அடுத்து இடம் பெற்றது. இதில் சுமுதினி சக்திவடிவேல், தயாபரன் ஆறுமுகம், கதிர் துரைசிங்கம், லக்ஷியா கதிர்காமநாதன் ஆகியோர் பங்குபற்றினர். பண்பட்ட நடிகர்கள் தங்கள் நடிப்புத் திறமையால் அடுத்து என்ன நடக்கப்போகிறது என்ற ஆவலைப் பார்வையாளர் மத்தியில் தூண்டிவிடும் ஒரு நாடகமாக இது அமைந்திருந்தது. தொடர்ந்து மாணவர்களுக்கான கணித, பொதுஅறிவுப் போட்டியில் பங்குபற்றி 2010ல் மொன்றியலில் பரிசு பெற்றவர்களுக்கு இரண்டு பிரிவாகப் பரிசளிக்கப்பட்டது. இந்தப் போட்டியில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மாணவர்கள் பங்குபற்றியிருந்ததும் இங்கே குறிப்பிடத்தக்கது.

அடுத்து ஈழத்து மூத்த கலைஞர்களில் ஒருவரான, நடிகர் கே. எஸ். பாலச்சந்திரன் அவர்களும், சிறந்த நடிகரும், திரைப்படத் தயாரிப்பாளருமான ஸ்ரீ முருகனும் பங்குபற்றிய நம்பிக்கை என்ற நேர்காணல் நிகழ்ச்சி இடம் பெற்றது. நேர்காணலைத் தொடர்ந்து சங்கீத மைந்தர்களின் திரையிசை நடனம் தொடர்ந்தது. அதன்பின் சங்கச் செயலாளர் க. முத்துலிங்கத்தின் நன்றியுரை இடம் பெற்றது. அவர் தனது நன்றியுரையில் மகாஜனன்களை மதித்து அவர்களது நூற்றண்டு முத்தமிழ் விழ-ாவிற்கு வருகைதந்தவர்களுக்கும், கணித பொது அறிவுப்போட்டியிலும், விழா நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றி அதன் மூலம் இந்த விழாவைச் சிறப்பித்தவர்களுக்கும் நன்றி கூறினார்.

எங்களை விடுங்கோ என்ற சமூக சீர்திருத்த நாடகம் அடுத்ததாக இடம் பெற்றது. பிரபல நடிகரான கணபதி ரவீந்திரனின் கருவாக்கத்தில் குரு அரவிந்தனின் கதையாடலில் நாகமுத்து சாந்திநாதனின் நெறியாள்கையில் எங்களை விடுங்கோ என்ற இந்த நாடகத்தில் கணபதி ரவீந்திரன், ரூபினி யோகதாசன், ஜெகநாதன் சுஜந்தன், சுஜந்தன் வாஞ்சிதா ஆகியோர் பங்கு பற்றியிருந்தனர். இதில் நடித்தவர்கள் தங்கள் அருமையான நடிப்பால் சபையோரை மகிழ்வித்தது மட்டுமல்ல, சிந்திக்கவும் வைத்தனர். இந்த முத்தமிழ் விழாவிற்கான ஒலி, ஒளி அமைப்பை தர்மாகரன் செய்திருந்தார்.

மாலை 5.55க்கு ஆரம்பமான அரங்கம் நிறைந்த இந்த நிகழ்வு இரவு 10:30 மணிக்கு நிறைவு பெற்றது. மகாஜனக் கல்லூரி பழைய மாண-வரான திரு. விஜே ஆனந்தும், வைஷ்ணவி ஞானசரவணபவானும் நிகழ்ச்சிகளைக் கொண்டு நடத்தினர். இந்த முத்தமிழ் விழாவிற்கான ஒலி, ஒளி அமைப்பை தர்மாகரன் செய்திருந்தார்.

ரொறன்ரோவில் 2010 யூலை மாதம் இரண்டாம், மூன்றாம் திகதிகளில் மகாஜனக்கல்லூரி கனடா பழைய மாணவர்களின் நூற்றாண்டு முத்தமிழ் விழா, Chinese Cultural Centre, 5138 Sheppard Ave., Toronto வில் மிகவும் சிறப்பாக நடைபெற இருக்கின்றது.


**APARTMENTS FOR RENT**




**$250 Move In Bonus**

*Best Building in Scarborough!*
*Clean, family building, FREE parking.*
*Close to schools, bus stop, Tamil store in building.*

**Pl. Call: 416.264.2818**

# பல பெருமைகள்...

33ஆம் பக்கத்தொடர்ச்சி

வருடங்கள்தான் என்பதை கூறினர். இதனால், சிவபெருமானே தனது ஆயுளைக் காக்க முடியும் என்று மார்க்கண்டேயர், ஞானோபதேசம் பெற விருப்பம் கொண்டு சிவபெருமானை வழிபட்டார். சிவபெருமான் வில்வ விதை ஒன்றைக் கொடுத்து, அவ்விதை நடப்பட்ட ஒரு முகூர்த்தத்திற்குள் எந்த இடத்தில் முளை விடுகிறதோ அங்கு தன்னை வழிபடும்படி தெரிவித்தார். மார்க்கண்டேயரும் அந்த விதையை பல இடங்களில் நட்டுப் பார்த்தார். கடைசியில் திருக்கடவூரில் அது முளை விட்டது என்பது தலவரலாறு. இதனால் இத்தலத்துக்கு வில்வவனம் என்ற பெயர் உண்டானது என்கிறார்கள்.

ஒவ்வொரு சிவஸ்தலமாக தரிசித்து வந்த மார்க்கண்டேயர், திருக்கடவூர் வந்து சேர்ந்தபோது அவருடைய ஆயுள் முடியும் நாள் நெருங்கி விட்டது. எமன் தன் பணியை முடிக்கும் பொருட்டு பாசக்கயிற்றை மார்க்கண்டேயர் மீது வீசினான். எமனைக் கண்டு அச்சமுற்ற மார்க்கண்டேயர், தான் வழிபட்டுக் கொண்டிருந்த லிங்கத்தை ஆரத் தழுவிக் கொண்டார். எமனும் பாசக்கயிற்றை லிங்கத்தையும் சேர்த்து வீசினான். சிவபெருமான் தன்னுடைய பக்தனைக் காப்பாற்ற லிங்கத்திலிருந்து திரிசூலத்துடன் வெளிப்பட்டு காலனைச் சூலாயுதத்தால் கொன்று, காலனுக்குக் காலனாக காலசம்ஹார மூர்த்தியாக விளங்கினார். பின்பு பூதேவி, பிரம்மா, மஹாவிஷ்ணு ஆகியோரின் வேண்டுதலுக்கு இணங்கி எமனை உயிர்ப்பித்து அருள் புரிந்தார். சிவபெருமானின் எட்டு வீரச் செயல்களுள் காலனை கடிந்த இந்த வீரச் செயலும் ஒன்று என்று தல புராணம் கூறுகிறது.

மூன்றாவது, அபிராமி அம்பிகையின் பக்தரான சுப்பிரமணிய பட்டர் கதை. அமுதத்தை மகாவிஷ்ணு தேவர்களுக்கு பரிமாறும்முன், சிவபூஜை செய்ய எண்ணினார். சிவ பூஜையின் போது அம்பிகையையும் பூஜிக்க வேண்டும் என்பது நியதி. எனவே, மகாவிஷ்ணு தனது ஆபரணங்களை கழற்றி வைத்தார். அதிலிருந்து அபிராமி அம்பிகை தோன்றினாள். பின் பூஜை செய்து தேவர்களுக்கு அமுதம் பரிமாறினார் மகாவிஷ்ணு. மகாவிஷ்ணு மார்பில் அணிந்திருக்கும் ஆபரணங்களில், லட்சுமி வாசம் செய்வதாக ஐதீகம். அண்ணனின் ஆபரணத்தில் இருந்து அபிராமி தோன்றியதால், மகாவிஷ்ணுவை, இங்கு அம்பிகையின் அன்னையாகவும் கருதி வணங்குகிறார்கள்.

அபிராமியின் பக்தரான பட்டர், ஒரு அந்தணர் குடும்பத்தில் பிறந்தவர். எந்நேரமும் அவர் மனதில் அன்னை அபிராமியே குடி கொண்டிருந்தாள். எல்லோருக்கும் இவர் நல்ல நாள், நல்ல திதி, நல்ல ஹோரை என்று தேர்ந்தெடுத்துக் கொடுப்பார். நம்பிக்கை இருக்கும் பலரும் இவரிடம் இதைப் பற்றிக் கேட்டுவிட்டுத்தான் சுபகாரியங்கள் செய்ய ஆரம்பிப்பர். இவர் மேல் பொறாமை கொண்ட சிலர் தஞ்சை சரபோஜி மன்னரிடம் இவரைப் பற்றி தவறாக வத்தி வைத்தனர். அபிராமி அன்னை பெயரால் எல்லோரையும் இவர் ஏமாற்றிக் கொண்டு திரிகிறார் என்று சொல்லிக் கொடுக்க, மன்னரும் இது உண்மைதானா என்று ஆராய ஆவல் கொண்டார். நாள் முழுதும் அன்னையின் அழகில் தன்னை மறந்து



அன்னையிடம் மூழ்கி இருந்த பட்டரைச் சந்தித்த சரபோஜி மன்னர், "இன்று என்ன திதி?" என்று வேண்டுமென்றே கேட்டார். அவர் கேட்ட தினமோ அமாவாசை. அந்த நேரத்தில் அம்பாளின் வட்டமான நிலவைப் போன்ற முகம் பட்டரைப் பரவசப்படுத்த, "இன்று பௌர்ணமி" என்று கூறினார். அதற்கு மன்னர், "இன்று இரவு பூரண நிலவு வரவில்லை என்றால் உனக்கு மரண தண்டனைதான். கடவுள் பெயரைச் சொல்லி மக்களை ஏமாற்றும் மனிதருக்கு இதுதான் சரியான தண்டனை" என்று சொல்லி விட்டார். எல்லோருக்கும் ஒரே மனக் கலக்கம். இது எப்படி முடியப்போகிறதோ என்ற கவலை. பட்டர் தன் தியான நிலையிலிருந்து விழித்துப் பார்த்தவுடன் எல்லோரும் அவரைப் பரிதாபமாகப் பார்ப்பது தெரிந்தது. "ஏன் வருத்தத்துடன் என்னைச் சூழ்ந்து நிற்கிறீர்கள்?" என்று வினவினார். பக்தர்கள் நடந்த அனைத்தையும் அப்படியே விவரித்தார்கள். அமாவாசை அன்று நிலவு எப்படி வரும் என்று அவர்கள் கவலையுடன் கேட்டனர். பட்டர் மனம் மிகவும் வருந்தி அக்னியை மூட்டினார். பின் பல கயிறுகளால் கட்டிய உறியைத் தயார் செய்து அதன் மேல் அமர்ந்து அபிராமி அன்னை மேல் பாடத் தொடங்கினார். முதல் பாடல், "உதிக்கின்ற செங்கதிர்" என்று தொடங்கியது. பின் ஒவ்வொரு பாடலாகப் பாட அது முடிந்தவுடன் ஒவ்வொரு கயிறாக வெட்டப்பட்டது. கடைசியில், "விழிக்கே அருள் உண்டு" என்ற பாடலைப் பாடினார். அந்தப் பாடல் முடிய கடைசிக் கயிறும் வெட்டப்பட்டு அக்னியில் விழுவார். ஆனால், அன்னை இந்தப் பாடலைக் கேட்டவுடனேயே திருவுள்ளம் இறங்கி தன் காதில் இருந்த ஸ்ரீசக்கரத் தடாகத்தை வானில் வீசினாள். அதிலிருந்து ஒரு நிலவு ஒளி உண்டாயிற்று. மன்னர் பூரண நிலவைக் கண்டு திடுக்கிட்டார். உடனே திருக்கடையூர் ஓடி வந்து பட்டர் காலில் விழுந்தார். தன் செயலுக்கு மிகவும் வருந்தினார். பின்னர் பட்டருக்கு, 'அபிராமி பட்டர்' என்ற பட்டத்தையும் பல மான்யங்களையும் வழங்கினார்.

இந்த மூன்று வரலாறுகளையும் தெரியும்போது, தமிழக ஆன்மிகத் தலங்களில் திருக்கடையூர் எத்தகைய சிறப்புகளை கொண்டது என்பதை உணர்ந்திருப்பீர்கள். இனி கோயிலை வலம் வருவோம்.

திருக்கடவூர் ஆலயத்தின் கிழக்கிலும் மேற்கிலும் இராஜகோபுரங்கள் இருந்தாலும் மேற்கில் உள்ள ஏழு நிலை ராஜகோபுரம் தான் பிரதான வாயிலாகும். இந்த ராஜகோபுரத்தில் உள்ள அரிய சிற்பங்கள் பார்க்க வேண்டியவைகள். குறிப்பாக பாற்கடலைக் கடைந்தது, காலசம்ஹாரமூர்த்தி, சிவபாத இருதயரின் தோளில் சம்பந்தர், சம்பந்தரின் சிவிகையை அப்பர் தாங்குவது முதலியன கண்டு மகிழ வேண்டியவை. முன் மண்டபத்தில் உள்ள காலசம்ஹார மூர்த்தியின் செப்புச் சிலை வடிவமும் சிவலிங்கம் இரண்டாகப் பிளந்து அதிலிருந்து திரிசூலம் ஏந்திய கையுடன் சிவபெருமான் வெளிப்படும்படி தத்ரூபமாக அமைந்துள்ளது. கருவறையில் உள்ள அமிர்தகடேஸ்வரர் சுயம்பு லிங்கமாக மேற்கு நோக்கி காட்சி தருகிறார். கருவறைக்குள் இருக்கும் இந்த மூலவர் ஒரு லிங்கம்தான் என்றாலும் அதை உற்றுப் பார்க்கும்போது பின்னால் இன்னொரு லிங்கம் பிம்பமாக தெரியும். கருவறை சுற்றுப் பிரகாரத்தில் முருகன், லட்சுமி, சோமஸ்கந்தர், நடராஜர், வில்வனேஸ்வரர், பைரவர், பஞ்சபூத லிங்கங்கள், சூரியன், அகத்தியர், சப்த கன்னியர்கள், 63 நாயன்மார்கள் சந்நிதிகள் உள்ளன. இறைவன் கருவறைக்கு முன்னால் உள்ள மண்டபத்தில் காலசம்ஹார மூர்த்தியின் செப்புச் சிலை உருவம் பார்த்து தரிசிக்க வேண்டியதாகும். காலன் காலடியில் தலைகீழாக விழுந்து கிடக்கிறான். காலசம்ஹாரமூர்த்தி வலது காலை ஊன்றி இடது காலை உயர்த்தி எமனை உதைக்கும் நிலையில் காணப்படுகிறார். மார்க்கண்டேயர் அருகில் கூப்பிய கரத்துடன் நிற்கிறார். பிறகு, எமனுக்கு மன்னிப்புக் கொடுத்த சிவபெருமான் எமனை தன் சந்நிதிக்கு எதிரே இருக்கச் செய்து விடுகிறார். எருமை வாகனத்துடன் கரம் கூப்பியவாறு நிற்கும் எமனுக்கு இங்கு சிறு கோவில் உள்ளது. கம்பீரமான தோற்றத்துடன் காட்சிதரும் மிகப்பெரிய மூர்த்தியான காலசம்ஹாரமூர்த்தி - காலனை சம்ஹரித்த மூர்த்தி - திருமேனியில் எமன் வீசிய பாசத்தின் தழும்பு உள்ளதைப் பார்க்கலாம். எமனுடைய பாசக்கயிறு பட்டதால் லிங்கத்தின் உச்சியில் ஒரு பிளவும் காணப்படுகிறது.

இக்கோவிலின் வெளிப் பிரகாரத்தில் கிழக்கு நோக்கியவாறு அன்னை அபிராமி சந்நிதி உள்ளது. கோயிலில் முருகப்பெருமான் ஒரு திருமுகத்துடனும் நான்கு திருக்கரங்களுடனும் தனது தேவியர் இருவருடன் காட்சி தருகிறார். இங்கு முருகப்பெருமான் சிறு பாலகன் வடிவில் பார்வதியின் வலப்பக்கம் தாயைத் தழுவியவாறு காட்சி தருவதும் காண வேண்டிய ஒரு காட்சியாகும். திருப்புகழில் இக்கோயில் முருகன் மீது இரண்டு பாடல்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

சுவாமிக்கு தினந்தோறும் அபிஷேகத்திற்குரிய நீர் திருக்கடவூர் மயானத் தலத்தின் தல தீர்த்தமான காசி தீர்த்தத்திலிருந்து வண்டியில் கொண்டு வரப்படுகிறது. மார்க்கண்டேயருக்காக, பங்குனி மாதம், அசுவினி நட்சத்திரத்தில் கங்கையானது, இத்தீர்த்தமாக வந்ததாக வரலாறு. எனவே, இத்தீர்த்தம் 'அசுவினி தீர்த்தம்' எனவும் வழங்கப்படுகிறது. இதன் அருகிலுள்ள மணல்மேடு, மிருகண்டு முனிவரின் அவதாரத் தலம் ஆகும். இது, பூமிதேவி அனுக்ரஹம் பெற்ற தலம்.

திருக்கடவூர் கோயிலில் சோழர், பாண்டியர், விஜய நகர மன்னர்களின் கல்வெட்டுக்கள் உள்ளன. 'சிலம்பதிகாரத்தில்' வரும் நடன மங்கை 'மாதவி'யின் இல்லம் இந்த ஊரின் தேரோடும் வீதியில்தான் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போதும் இந்த வீட்டைப் பார்க்கலாம். ஆனால், பாழடைந்த நிலையில் உள்ளது.

திருக்கடையூர் விழாக்களில் கார்த்திகை சோமவார சங்காபிஷேகம் சிறப்பாகக் கண்டு தரிசிக்கத்தக்கது. கார்த்திகை மாத சோமவார நாட்களில் மூலவர் சந்நிதிக்கு எதிரில் உள்ள சங்கு மண்டபத்தில் வலம்புரி சங்குடன் கூடிய 1008 சங்குகள் வைத்து இறைவனுக்கு அபிஷேகம் நடைபெறும். அச்சமயத்தில் மட்டுமே இறைவன் திருமேனியை வஸ்திரம் ஏதுமின்றி தரிசிக்க முடியும். காலன் பாசக்கயிறு மேலே விழுந்ததால் ஏற்பட்ட அடையாளத் தழும்புகளும், காலனை சம்ஹாரம் செய்யும் பொருட்டு லிங்கத்திலிருந்து வெடித்துத் தோன்றியதால் லிங்கத்தின் உச்சியில் ஏற்பட்ட பிளவும் அப்போது நன்றாகத் தெரியும். இங்கு காலசம்ஹார மூர்த்திக்கு ஆண்டுக்கு 11 முறை மட்டுமே அபிஷேகம் நடைபெறும். அவ்வாறு அபிஷேகம் நடைபெறும் போது இறைவனின் திருமேனி அழகினைக் கண்டு களிக்க முடியும். அன்னை அபிராமிக்கு ஆடி மாதம் ஆடிப் பூரத்தின் போது பத்து நாட்கள் திருவிழா. தவிர, புரட்டாசி நவராத்திரியும், தை அமாவாசை அன்று அபிராமிபட்டரின் அமாவாசையை பௌர்ணமி ஆக்கிய விழாவும் மிகச் சிறப்பாக நடை பெறுகின்றன.

பிரம்மன், அகஸ்தியர், புலஸ்தியர், வாசுகி, துர்க்கை முதலியோர் வழிபட்ட தலம் இது. இவர்களே வழிபட்ட தலம் என்றால், எவ்வளவு சிறப்புகள் இருக்கும். குறிப்பாக ஆயுள் விருத்திக்கு மிகப் பிரசித்திபெற்ற தலம் இது. பலர் இங்கு தம் அறுபது வயதில் சாந்தி அல்லது பரிகாரம் செய்து கொள்வது வழக்கம். 59 வயது முடிந்து 60 வயது தொடங்குகிறவர்கள் உக்ரரத சாந்தி பூஜை செய்கிறார்கள். 60 பூர்த்தியடைந்து 61 தொடங்குகிறவர்கள் சஷ்டியப்த பூர்த்தி பூஜை செய்கிறார்கள். 70 வயது பூர்த்தியாகி 71 தொடங்குகிறவர்கள் பீமரத சாந்தி பூஜை செய்கிறார்கள். 81 வயது தொடங்குகிறவர்கள் சதாபிசேகம் மற்றும் ஆயுஷ்ய ஹோமம் செய்கிறார்கள். 50 ஆம் கல்யாண ஆண்டு விழாவுக்காகவும் இத்தலத்தில் வழிபடுகின்றனர். இந்த மகிழ்ச்சிகரமான விழாவினை அவர்களுடைய சந்ததியினர் நடத்தி

## எப்படி செல்வது? எங்கே தங்குவது?

மயிலாடுதுறை - தரங்கம்பாடி பேருந்துச் சாலையில், (இரயில் மார்க்கமும் இதுவே), மயிலாடுதுறையில் இருந்து 23 கி.மீ. தூரத்தில் திருக்கடையூர் இருக்கிறது. சீர்காழி - நாகப்பட்டினம் சாலை வழியில், சீர்காழியில் இருந்து சுமார் 30 கி.மீ. திருக்கடையூர் நிலையத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில் கோயில் இருக்கிறது. திருக்கடையூருக்கு அடிக்கடி பேருந்து வசதி உண்டு. தினந்தோறும் காலை 6 மணி முதல் பகல் 1 மணி வரையும், மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கும். ஆலயத்தை தொடர்பு கொள்ள: தொலைபேசி எண் - 04364 287429.

# மனதிலே ஒரு பாட்டு...



மனதிலே ஒரு பாட்டு, மழை வரும் அதைக் கேட்டு... (தாயம் ஒண்ணு, படப் பாடல்) இந்தப் பாடலை எப்போதும் கேட்டாலும் மனதில் மழை பெய்கிறது.

கறுப்பின நடுத்தர வயதுப் பெண்களைக் கவனித்துப் பார்த்தால் (இதொன்றும் "சைட்" விவகாரம் அல்ல!) பலரிடம் ஒரு பாடல் இருக்கும். அன்றைய, அவர்கள் "மூடுக்குத் தகுந்தபடி" சோகமாகவோ, படு குஷியாகவோ அவர்கள் உதடுகள் (மனது!) ஒரு பாடலை உச்சரித்தபடி இருக்கும். உங்கள் மனதின் பாடல் என்ன?

சில பாடல்களைக் கேட்கும்போது மனசு எங்கேயோ போய்விடுகிறது.

"ஏதோ ஒரு பாட்டு என் காதில் கேட்கும், கேட்கும் போதெல்லாம் சில ஞாபகம் தாலாட்டும்
என் கண்களின் இமைகளிலே சில ஞாபகம் சிறகடிக்கும், நான் சுவாசிக்கும் மூச்சினிலே சில ஞாபகம் கலந்திருக்கும்
ஞாபகங்கள் மழையாகும், ஞாபகங்கள் குடையாகும், ஞாபகங்கள் தீ மூட்டும், ஞாபகங்கள் நீருற்றும்..."

மனசை அப்படியே "மிக்ஸியில்" போட்டுப் பிழிந்தெடுத்து விடும் வரிகள்

அம்மா கைகோர்த்து நடை பழகிய ஞாபகமே, தனியே நடை பழகி நான் தொலைந்தது ஞாபகமே
புத்தகம் நடுவில் மயில் இறகை நான் வளர்த்தது ஞாபகமே
சின்னக் குழந்தையில் சேலை கட்டும் ஞாபகம், வெட்கம் வந்ததும் முகத்தை மூடும் ஞாபகம்

ரயிலின் பயணத்தில் மரம் நகர்ந்தது ஞாபகமே, சுற்றும் ராட்டினத்தில் நான் மயங்கிய ஞாபகமே
காகிதக் கப்பல் கவிழ்ந்ததுமே நான் அழுதது ஞாபகமே,
கட்டபொம்மனின் கதையை கேட்ட ஞாபகம், அட்டைக் கத்தியில் சண்டை போட்ட ஞாபகம்

இந்தப் பாடல் ஒரு "Universal" பாடல், கேட்கும் போது, எல்லாமே நம் "குட்டிப்" பிராயத்திலேயும் நடந்தது போன்ற ஒரு மயக்கம் வரும். (உண்மையாகவே நான் சேலை கட்டிப் பார்க்கவில்லை!) எப்போதாவது நீங்கள் காணத் துடிக்கும் அருமை நண்பன் (நண்பி) போல உங்கள் மனம் அறிந்து மென்மையாகக் கூட நடந்து வரும் பாடல் அது! மயில் இறகு, ரயில் பயணம், ராட்டினம், காகிதக் கப்பல், கட்டபொம்மனின் கதை, அட்டைக் கத்தி என்று மிகச் சுலபமாக இருந்த வாழ்க்கை எந்தப் புள்ளியில் "இடியப்பச் சிக்கலாக" மாறியது என்று புரியாமல் இருக்கிறது! வளர்ந்து விடுகிறோம் அந்த நிகழ்வா?

யாரது சொல்லாமல் நெஞ்சள்ளிப் போவது, தாளாத பெண்மை (ஆண்மையும் கூடத் தானே!) வாடுமே, பாடுமே

மார்கழிப் பூக்கள் என்னைத் தீண்டும் நேரமே, தேன் பருகும் மேகம் வந்து போகும் சிந்து பாடும் இன்பமே
ரோஜாக்கள் பூ மேடை போடும், தென்றல் வரும், பார்த்தாலே போதை தரும்
(இந்த வரிகளில் வாணி ஜெயராமின் குரலில் வரும் போதையை அடுத்த முறை கவனித்துக் கேளுங்கள்!)

தாமரை ஓடை, இன்ப வாடை வீசுதே, பொன் இதழ் ஓரம் இந்த நேரம் இன்பச் சாரம் ஊறுதே
ஆளானதால் (வளர்ந்து விடுவதால்?) வந்த தொல்லை காதல் முல்லை கண்ணோடு தூக்கமில்லை....

ஒவ்வொரு முறையும் கேட்கும் போதும் மனதை "நிலை குலைய" வைக்கும் பாடல்!

நிலவுப் பாடல்களுக்கு தமிழ் சினிமாவில் குறைவில்லை. ஆனால் இந்த நிலவுப் பாடல் "அடிக்கடி வராத முழு நிலவு!"

நிலவே நீ சாட்சி, மன நிம்மதி நாடும் உயிர்களுக்கெல்லாம் நிலவே நீ சாட்சி

அலையும் உறங்க முயல்வதென்ன, மன ஆசைகள் உறங்க மறுப்பதென்ன
வலையில் விழுந்த மீன்களென சில வாலிப உள்ளங்கள் துடிப்பதென்ன

ஒரு சில இல்லத்தில் சுவை பேச்சு, சில உள்ளங்களிலே ஏனோ பெருமூச்சு
இருவரை இணைத்து திரை போட்டு, இது இறைவன் நடத்தும் விளையாட்டு....

இனி வருது என்னை Freeze பண்ணிய வரிகள்!

கண்கள் இரண்டும் குருடானால் இந்தக் காதல் கதைகள் பிறப்பதில்லை
உறவும் பிரிவும் நடப்பதில்லை, இந்த உலகில் இன்னிப்பும் கசப்பும் இல்லை..

மனம் சோர்திருக்க, தட்டிக் கொடுக்கும் பாடல் அது! 1930 களில் இருந்து தமிழ் சினிமாப் பாடல்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் நாமோ சில வேளைகளில் "இசைக்கடலின்" மேற்பரப்பை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதைச் சொல்லும் போது எழுத்தாளர் பாலக்குமாரன் எழுதிய "கரையோர முதலைகள்" நாவலின் வரிகள் சில ஞாபகம் வருகின்றன.

"ஆண் வழி வழியாய்ச் செய்கிற தவறு அது. உடம்பு தெரிந்து விட்டால் பெண்ணின் மனசும் தெரிந்த மாதிரி ஒரு பிரமை. பெண்ணின் மனம் அறிய உடம்பு ஒரு வாசல்! வாசலோடு ஆண்கள் நிற்பது தொடர்ந்து நடக்கும் பேதமை. கோவில் கதவுகளை மட்டுமே வியந்து வியந்து போட்டோ பிடித்துப் போடும் மிலேச்சனைப் போல, அந்நிய யாத்திரிகனைப் போல், உடம்போடு பரவசம் முடிந்து விடுகிறது. உள்ளே இருக்கும் தேவதையை தரிசிப்பதில்லை. கை கூப்புவதில்லை. பக்தியில்லை, நீயே ஆதாரம், நீயே சக்தி என்று ஒடுங்குவதில்லை. ஒடுங்கியவனுக்கு கோயில் கோபுரமும், கலசமும் கதவுகளும் முக்கியமில்லை!

நாமும் வெறும் வெளிவந்த "புதுப் பாடல்களை" மட்டும் repeat அடிக்காமல், இசைக் கடலில் ஆழ்ந்து முத்தெடுப்போம்!

சொர்க்கமும் நரகமும் நம் வசமே, நான் சொல்வதை உன் மனம் கேட்கட்டுமே
சத்தியம் தர்மங்கள் நிலைக்கட்டுமே, இது தாய்மையின் குரலாய் ஒலிக்கட்டுமே....

"சில பாடல்களைக் கேட்கும்போது மனசு எங்கேயோ போய்விடுகிறது."

**- கிறிஸ்ரி-**

## பல பெருமைகள்...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

மகிழ்கின்றனர். மார்க்கண்டேயர் 'என்றும் பதினாறு' என்ற சிரஞ்சீவி வரத்தை சிவனிடமிருந்து பெற்ற தலம் என்பதால், இந்த விழாக்களை திருக்கடையூரில் செய்து கொள்வது என்பது ஒரு தனி சிறப்பு. அறுபது வயது தொடங்கும் போது உக்ரரத சாந்தியும், 61வது வயது தொடக்கத்தில் ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தியும், 70வது வயது தொடக்கத்தில் பீமரத சாந்தியும், 80வது வயதில் சதாபிஷேகமும் செய்து கொள்கின்ற தம்பதிகளை இத்தலத்தில் நிறையப் பார்க்க முடியும். சுமார் பத்து, பதினைந்து திருமணங்கள் ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் நடப்பதைப் பார்ப்பது ஒரு சிறந்த அனுபவமாக இருக்கும். அதிகாலையில் 5.30க்கு பூஜையுடன் சாந்தி நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன. அப்போது கோயில் வாசலில் மாலையும் கழுத்துமாக வயதான தம்பதிகள் தம் உறவினர்களுடன் நிற்பார்கள். பூஜைகள் முடிந்த பின்னர், நாதஸ்வரம் முழங்க மேளதாளத்துடன் கோயிலினுள் வலது கால் வைத்து, தம்பதிகள் உள்ளே நுழைவார்கள். அதன்பிறகு யானையை அழைத்து வந்து குருக்கள் கஜபூஜை செய்வார். சிலர் யானைக்கு சாப்பிட தேங்காய், வாழைப்பழம் கொடுப்பார்கள். அது தன் தும்பிக்கையினால் மணமக்களின் தலையைத் தொட்டு ஆசீர்வதிக்கும். பின் அவர்கள் புதுப் புடவை, பட்டு வேஷ்டியுடன் அலங்கரிப்பட்டிருக்கும் மணமேடையில் வந்து அமர, திருமணத்தில் நடக்கும் தாலி கட்டும் வைபவம் அப்படியே நடக்கிறது. கணவர் திரும்ப திருமாங்கல்யம் கட்ட, பின் நாத்தனார் தாலியில் மற்ற முடிச்சுகள் போட லாலி பாட்டு நாதஸ்வரத்தில் இனிமையாக வரும். பேரன் பேத்திகளுடன் கூடிய இந்த வைபவம் நிச்சயம் வயதான தம்பதிகளுக்கு ஒரு இனிமையான கொண்டாட்டம்தான்.




விற்பனையாகின்றது குறமகளின்

• கூதிர்காலக் குலாவல்கள்

• அகணிதன் அல்லது நதியின் பிழையன்று

என்ற இரு குறுநாவல்கள் அடங்கிய நூல்

கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்
தொலைபேசி இலக்கம்: 416.282.8059

**GTA Square - 5215 Finch Ave. E., #201**
**Middlaefield & Finch**

# நடி(க) சாமியார்

பல்வேறு துறையினரைக் கொண்டதே சமூகம். அறிஞர்களையும், பாமரர்களையும், பணக்காரர்களையும், ஏதிலிகளையும், விஞ்ஞானிகளையும், மெய்ஞானிகளையும், உழைப்பாளிகளையும், உலுத்தர்களையும் சமூகத் தொண்டர்களையும் சன்மார்க்க வாதிகளையும் உள்ளடக்கியதே சமூகம். எனவே பல்வேறு வண்ணமலர்களால் தொடுக்கப்பட்ட மாலை போன்றதே சமூகம். சமூக முன்னேற்றம் தனிமனிதனுடைய கைகளிலேயே தங்கி உள்ளது என்றால் மிகையில்லை. திருடனாய் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்பதற்கேற்ப ஒவ்வொரு தனிமனிதனும், தன்னை திருத்தியும், புதுக்கியும் உயர்த்தியும் வாழ்ந்தால் சமூகம் முன்னேற்றம் அடையும் என்பதில் ஐயமில்லை. இல்லையெனில் சமூகம் சாக்கடையா-வதைத் தடுக்க முடியாது.

பேராசிரியர் ஒருவர் கூறிய கதை இது. ஒழுக்கத்தில் மனித உருவையும் மறுபக்கத்தில் உலகப்படத்தையும் கொண்டிருந்த படம் ஒன்று கிழிக்கப்பட்டு அதனை சரி செய்யும் படி ஒரு மாணவனிடம் கொடுக்கப்பட்டது. அவன் பெரிதும் முயன்று அதனைச் சரி செய்து விட்டான். எப்படிச் சரி செய்தாய் என்று வினவிய போது மனிதனை சரியாகப் பொருத்தினேன். உலகம் சரியாகி விட்டது என்று அம்மாணவன் பதில் கூறினான். எனவே மனிதன் தன்னிடமுள்ள ஆசை, வெகுளி, மயக்கம் இவற்றைக் கைவிட்டு தன்னை புனிதனாக மாற்றிக் கொண்டால் உலகம் நனிசிறந்து விளங்கும். உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டே என்பதற்கு உதாரணமாகவும் விளங்கிடும்.

ஒருவர் சாமியார் என்பதற்கு எவரும் சான்றிதழ் (Certificate) கொடுப்பதில்லை. தனது இஸ்டப்படியே ஒருவர் சாமியார் ஆகிறார். காதலில் தோல்வி, களவு எடுத்தது, பாலியல் சேட்டை, குடும்ப உதாசீனம், வாழ்க்கையில் வெறுப்பு என அதற்கு பல காரணங்கள் பலவற்றைக் கூறலாம். படிப்பு முதிர்வடைந்த நிலையிலும் பரமன் அருள் கைகூடி பக்குவமடைந்த நிலையிலும் ஒருவர் சாமியார் ஆகின்றனர் என்று பெரும்பாலும் கூறிவிடமுடியாது. மனம் விரும்பியபடி இஸ்டம் போல் நடக்கவும் இலகுவில் பணம் சேர்க்கவும் சிலர் சாமியார் வேடத்தில் சகல ஆட்டமும் ஆடலாம் என்பதுமாகும். சாமியார் ஆகி விட்டபின் சிலர் சுகபோக வாழ்வில் திளைக்கின்றனர். எனவே தான் ரிஷிமூலம் நதிமூலம் ஆராயக்கூடாதென்பர். சகல-தையும் துறந்து சர்வேஸ்வரனிடம் சதாகாலமும் சங்கமமாகி இருக்கும் சாமிமார்கள் பெரும் பணம் ஈட்டி வாழ்வது அவர்கள் மீது சந்தேகம் கொள்ளவைக்கின்றது. பணத்தின் மீதுள்ள ஆசை பக்குவநிலையை குறைத்துவிடுகின்றது. 2000 கோடி சொத்து சாமியார் ஒருவர் சேர்த்துள்ளார் என்று அண்மையில் வெளியாகிய செய்தி நம்மை அதிரவைக்கின்றது. இத்தகைய சாமியார் சமூகத்தின் புல்லுருவிகளே ஆவர்.

இந்து மதம் சாமிமார்களுக்கு, குருமாருக்கு, தவ சிரேட்டர்களுக்கு, ஞானிகளுக்கு, சித்தர்களுக்கு, துறவிகளுக்கு, மகான்களுக்கு சிறப்பிடம் அளித்தே வந்துள்ளது. அவர்களது பார்வையாலும் பரிசத்தினாலும் ஆன்மாக்கள் பக்குவநிலை அடைந்திருக்கின்றனர். பக்தர்களுக்கு அருள வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும் போது இறை மகாசக்தி மனித உருவில் காட்சி தருகின்றது என்பது இந்துக்களின் அசைக்கமுடியாத நம்பிக்கை. எனவே இறைவன் சாமியார் உருவில் தோற்றமளிக்கும் போது இவரும் ஒரு மனிதன் தான் என்று நாம் அலட்சியம் செய்யாமல் அவரின் அசாதாரண சக்தியை உணர்ந்து கொள்ள வேண்டும். குருவடிவாகி குவலயம் வந்து என்பது இதனை உணர்த்தும். சித்தர்கள் இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

ஆனால் இன்றைய கால கட்டத்தில் சாமியாராக நடிப்பவர்கள் மெய்ஞானப் பரம்பரைக்கே களங்கம் ஏற்படுத்தி விடுகின்றார்கள். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்றாலும் ஒரு சில சாமியார்களின் தவறான நடத்தையைக் கொண்டு சாமிமார் எல்லோர்க்கும் மாசு கற்பிப்பது தவறானதாகும்.

குடித்துவிட்டு வாகனம் செலுத்தியமையைக்காக (Drink and Drive) கோயில் அர்ச்சகர் ஒருவர் பொலிசாரால் பிடிபட்டார் என்று அண்மைய பத்திரிகைச் செய்தி தெரிவிக்கின்றது. அத்துடன் அவர் கோழிக்காலை சாப்பிட்டு விட்டு பூசை செய்பவர் என்றும் அச்செய்தி தெரிவிக்கின்றது.

அர்ச்சகர் இறைவனுக்கும் பக்தனுக்கும் இடைநடுவில் ஒருங்கிணைப்பாளராக செயற்படுபவர். அவர் ஆசார சீலராகவே இருக்க வேண்டியதவசியமாகும். எனவே இத்தகையவர்களாலும் எமது சமயத்திற்கு இழுக்கு ஏற்படுகின்றது. அந்தணர் குலத்திற்கு அப்பால் பிறந்தவர்களும் அந்தணர் ஆகலாம் என்று வள்ளுவர் குறிப்பிடுவார். மற்ற உயிர்களுக்கு செந்தண்மை காட்டுபவர்களும் அந்தணர்களே என்று அந்தணர் குலத்தை விரிவாக்கம் செய்துள்ளார் வள்ளுவர். பயிற்சியால் அந்தணர் ஆகலாம் என்பது பிந்திய செய்தி. "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கு செந்தண்மை பூண்டொழுகலால் " என்பது குறள்.

தெய்வ பக்தியில் தலைநிற்பவர்கள் சாமிமார்கள். அவர்கள் தெய்வத்திடம் ஈடுபாடு கொள்வதுடன் ஒழுக்க நெறியில் வாழ வேண்டிய கட்டாயமும் உண்டு. எனவே நீதியும், தர்மமும் அவர்கள் வாழ்வில் நிலைத்து நிற்க வேண்டும். தமிழ்நாட்டில் ஆன்மீகத்தை வளர்க்கும் தனிநபர்களும் நிறுவனங்களும் சுயநலத்திற்காகவே செயற்பட்டு வருவதை காணக்கூடியதாக உள்ளது. பாமரமக்களை பந்தாடும் இவைகளுக்கு அரசு எல்லை வரம்பு அமைக்கவேண்டும். ஞானிகளின் மனது தங்கப்பாத்திரம் மாதிரி என்றுமே மாறுதல் அடையாமல் சுத்தமாக ஒளிர்விட வேண்டும். அப்போது தான் அவர்கள் பல இலட்சம் மக்களின் வாழ்த்துதலுக்கும் வணக்கத்திற்கும் உரியவர்களாவர். அசலும், நகலும், நெல்லும் பதரும் கலந்திருப்பது உலகியல் இயற்கை. எனவே நல்லனவும் தீயனவும் சேர்ந்தே இருக்கும் இராமகிருஷ்ண பரமகம்சர். விவேகானந்தர், ரமணமகரிஷி, ஆதிசங்கரர், வள்ளலார், நாயன்மார்கள், ஆழ்வார்கள், சித்தர்கள் அணி செய்த நமது குரு பரம்பரைக்கு சில கபட சந்நியாசிகள் களங்க மேற்படுத்தியுள்ளனர். வேடதாரிகளை, போலித்துறவிகளை பின்வரும் குறள் பாவால் சாடுகின்றார் வள்ளுவர்.

புறங்குன்றி கண்டனைய ரேனும்
அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து.

குன்றி மணியின் செந்நிறம் துறவிகளின் தூய துவராடையை நினைவுபடுத்தும். அதே வேளை நுனியில் உள்ள கருமைநிறம் காவியுடை அணிந்து நடிக்க கபட சந்நியாசிகளின் உள்ளத்தினுள்ளே பொதிந்து கிடக்கும் அழுக்கினை, மாசினை துறவொழுக்கத்தினர் கனவிலும், கருதக் கூடாத காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மாசுகள் படிந்த மனத்தினை நினைவு படுத்தும்.

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்" என்ற நிலையிலிருந்து இவர்கள் வழுவிவிடுகின்றார்கள். கோடியில் ஒருவரே குருவாக, ஆச்சாரியராக அருளாளராக ஆகமுடியும்.

சாமியார் ஆசாமிகளாக மாறிவிடுவதனால் ஏற்படும் அனர்த்தம் நாடுகளில் ஆமி செய்யும் கொடுமைகளிலும் அதிகமாகி, பூமி தாங்கிக் கொள்ள முடியாததாக அமைந்து விடுகின்றது.



நா. க. சிவராமலிங்கம்





We've hit
a landmark.
It's our 35th year at
1280 Markham Rd., Scarborough!
Join us for a
Ronald McDonald® visit
and cheque presentation
on Saturday, May 29th
between 12pm – 1pm.
And we're also celebrating with
35¢ daily specials*
like this soft serve cone.
May 31st – June 6th
We truly are your McDonald's®.
50 BEST EMPLOYERS IN CANADA 2010
THE GLOBE AND MAIL REPORT ON BUSINESS MAGAZINE
worksforme.ca
*See crew member for details.
©2010 McDonald's.

# நான் முதலில் என்னை மன்னிக்க வேண்டும்

வாழ்வில் நான் எந்த ஒன்றையும் முதலில் எனக்குக் கொடுக்காமல் அதைப் பிறருக்குக் கொடுத்து உதவ முடியும் என இதுவரை நம்பியதற்காக என்னை மன்னித்திட இன்று உடன்படுகின்றேன்.

உன்னைத் துன்பப்படுத்திய ஒருவரை மன்னிக்க நீ தீவிரமாக முயன்றும் உனது கோபம் அதைச் செய்யவிடாது தடுத்தால் சற்று நிதானித்து யோசித்துப் பார். உண்மையில் நீ மன்னிக்காது வஞ்சம் தீர்க்கத்தான் விரும்புகிறாய் போலும். பழிக்குப்பழி வாங்க நீ விரும்பும்போது மன்னிப்பது நிச்சயம் உனக்குத் திருப்தி தராது. உண்மையான பச்சாதாபத்துடனும் இரக்கத்துடனும் மன்னிப்பதுதான் உனக்கு மனநிம்மதியைத் தரும். ஒருவர் நம்பிக்கைத் துரோகத்துடன் உன்னைக் காட்டிக் கொடுத்துக் கைவிட்டால் அவர்மேல் உனக்குக் கட்டாயம் கோபம் வரத்தான் செய்யும். முதலில் சம்பந்தப்பட்டவர் மேல் கோபம். பின்பு இதை நடக்கவிட்டதற்காகக் கடவுள் மேலே சினம். மனக் கொந்தளிப்புமிகு இந்த நிலைமையை மாற்றுவதற்காக உனக்கு மன்னிக்கும் குணம் அவசியமாகின்றது. இவ்வளவு மனவேதனையைத் தரும் சிந்தனை-களையும் உணர்வுகளையும் உன் மனதில் வளர விட்டதற்காக உனக்கு மன்னிப்பு கட்டாயம் தேவை. இறைவன் இதை நிறுத்தாமல் இப்படி நடக்க விட்டுவிட்டாலும் நானாவது இதற்குப் பரிகாரமாகப் பழிவாங்க வேண்டும் என நம்பியதற்காக உனக்கு மன்னிப்பு மிக மிக அவசியம். அவர்களை மன்னிப்பதால் அவர்களிற்கு விடுதலை அளிக்கிறாய் என நீ நினைக்கலாம். ஆனால் உண்மை என்ன தெரியுமா? அவர்களை மன்னிக்காவிடில் கைதாகிச் சிறையில் அகப்படப்போவது நீ தான்!




பிறரின் குற்றங்களை மன்னிப்பது உனக்குக் கஷ்டமாக இருந்தால் உனது இரக்க உணர்வை உபயோகித்துப் பார். இப்படிக் காயப்பட்டுத் துன்பப்படுகிறேன் என உன்மீது இரக்கப்படு. எனது வஞ்சம் தீர்த்துப் பழிக்குப் பழிவாங்கும் உணர்வை விரட்டியடித்துக் கைவிட என்னால் முடியவில்லையே என உன்மீது இரக்கப்படு. ஒருவரின் துன்பத்தையும் வேதனையையும் மனதார உணர்ந்து அதைத் தீராது தகிக்கும் கோபத்தைவிட எனது மனப்புண் மாற வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும் போது இரக்கமிகு மன்னிப்பின் கதவை நீ திறக்கிறாய். பழிக்குப் பழி வாங்கி வஞ்சம் தீர்த்திட இதுவரை நீ உத்தேசித்திருக்க லாம். மனநிம்மதியா அல்லது எனது பழிக்குப்பழி தீர்க்கும் தேவையா எனக்கு முக்கியம் என உன்னையே நீ இன்று கேள்வி கேட்டுக்கொள். விரோதத்தையை யும் பகையையும் வளர்ப்பதை விட ஒற்றுமையும் மனச்சாந்தியும் தான் சிலாக்கியம் என்பதை உணர்ந்தால் உன்னையே நீ குணப்படுத்திக்கொள்ள ஆயத்தமாகிவிட்டாய் என்பதைப் புரிந்து கொள். அப்படியில்லாவிட்டால் மன்னிப்பதை விடக் கோபித்துக் கொண்டிருப்பதைத் தேர்ந்தெடுத்ததற்காக உன்னை நீயே இரக்கத்துடன் மன்னித்துவிடு.

**எனக்குள்ளிருக்கும் இரக்ககுணத்தை உணர்ந்து, அதை வெளிப்படுத்தி அதனால் என் கோபத்தைக் குணப்படுத்தி சமாதானத்துடன் வாழ்ந்து மனநிம்மதி அடைந்திட இன்றுமுதல் நான் முயற்சி செய்யப்போகிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 170

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES


வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க
எந்தவித அடமானக் கடன்களும் பெற
Direct - 416.575.5055
Anton Jeeva
Real Estate / Principal Mortgage Broker
RE/MAX
For Sale
$195,000

• Birchmount/Lawrence
• Free Standing Factory/ Manufacturing
• Some Chattels And Fixtures Come With The Sale,Call City Of T.O For Zoninginfo.
Houdr for Sale
$388,000


• Midland & Lawrence
• 3+1 bedrooms
• 2 washrooms
• Detached Bungalow
• Finished Bsmt & Sep. entrance
• 2 Fridges , 2 Stoves , Washer, Dryer , Allelf , All Window Coverings.
House FOR SALE
$389,900

• Kennedy/Stratton/Eglinton
• detached Bungalow
• Finished Bsmt & Sep. entrance
• 3 +2 bedrooms • 2 Washrooms
• 2 Fridges , 2Stoves , Washer , Dryer , All Elf , All Window Coverings.
Condo. For Sale
$169,500

• Middlefield/Finch
• 1 + 1 bedroom •1 washroom
• All Elf , All Window Coverings ,Fridge , Stove , Washer , Dryer , Dishwasher.
• Recreation Room, Security System
Sale Of Business

$99,800
Simcoe/Beatrice, Oshawa, ON. Busy Convienience Store In A Busy Intersection ,Very Affordable Rent Of $1650/ Month (Incl Tmi), Income From Lottery Can Pay Off Your Rent ,Opportunity To Improve Your Business , Movie Rental Brings Extra Money , Very Rarefind , Price Includes Business And Goodwill Only , Stock (Approximately 20K) Comes Extra , Lease Term Is 5+5Years.
House for Sale
$409,900

• Taunton/Baycliffe, Whitby, Ontario
• 4 bedrooms • 3 washrooms
• Stove ,Fridge, Washer, Dryer, All Elf, All Window Coverings.
Mortgages & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO
REMAX VISION REALTY INC.
Speciallized in Power of Sale Homes

AVM
MAX 2000
Bus & Tour Company
5215 Finch Ave. E, Unit 250
(GTA Square Mall)
Toronto, ON, M1S 0C2
For More Information
Please Contact Paddy at:
(416) 609-2542
paddy-avmmax2000@hotmail.com
www.avmmax2000.ca
ATLANTIC CITY TOURS
July (16th - 21st)
August (13th - 18th)
5 Days Trip Starting From: $450.00/Person

• New York City - Statue of Liberty, Empire State Building, Ground Zero
• Atlantic City - Casinos
• Washington D.C. - White House, Museums
• Pittsburgh, Pennsylvania - Sri Venkateswara Temple
• Grove City, Pennsylvania - Prime Outlets (Shopping)
♦ These prices include bus fair, 4 nights hotel accommodations, and continental breakfast
♦ Individuals are responsible for entrance fees for all attractions, lunches, dinners, gratuity, and any other expenses